பரமபதம்

1-51

ஸோமானந்த

416

HAMMA PADA

Pali Text

with

Tamil Translation

by

BHIKKHU SOMANANDA

Maha Bodhi Ashram,

Madras 11, INDIA.

A portion of the cost of this publication was borne by Mr. R. S. SIRIWANSA of Potupitiya, Wadduwa, Ceylon.

Q4
N50

Price Rs. 2-0-0

78418

Printed in India
at Sri Ramachandra Printing Works,
177, Royapettah High Road,
Madras 14. 20-9-1950

To

The Sacred Memory of the Late

SRIMAD ANAGARIKA DHARMAPALA

Founder of the Mahabodhi Society, at whose encouragement the author of this version learned Tamil and at whose invitation this writer came to South India to propagate Buddha Dharma

முகவுரை

புத்த பகவான் உயிர்வாழ்ந்திருந்த காலத்தில் அவ்வப்போது அவரால் போதிக்கப்பட்ட விஷயங்களை யெல்லாம் திரட்டி, அவர் நிர்வாண மோக்ஷம் அடைந்த பிறகு அரஹந்த பிக்குகள் ஒன்று கூடிய முதல் சங்கத்தில், நூல்களாகத் தொகுத்தார்கள். அவ்வாறு தொகுக்கப்பட்ட நூல்களில் **தம்ம பதம்** என்பதும் ஒன்று. இந்நூல் பௌத்தர்களால் பெரிதும் போற்றப்பட்டு வருகிறது. இது, திரிபிடகங்களில் ஒன்ருகிய **சூத்திர பிடகத்தைச்** சேர்ந்தது. சூத்திர பிடகத்தைச் சேர்ந்த பஞ்சமகா நிகாயங்களில் (ஐந்து பெரும் பகுதிகளில்) **குத்தக நிகாய** என்னும் பகுதியில் உள்ளது. இத் தம்மபதத்திற்குச் சிங்கள மொழியில் எழுதப்பட்ட சில உரைகள் உள்ளன. இதன் மொழி பெயர்ப்பு ஆங்கிலத்தில் சுமார் நாற்பது உள்ளன. ஜெர்மனி, பிரெஞ்சு, இத்தாலி, ருஷிய பாஷைகளிலும் இந்நூல் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இலத்தீன் பாஷையிலும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. சீன,

திபேத்து பாஷைகளிலும் இந்நூல் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இந்திய பாஷைகளில், வங்காளி, ஹிந்தி, கன்னடம் முதலிய பாஷைகளிலும் இது மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழில் இந்நூல் இதுவரை மொழிபெயர்க்கப் படாதது ஒரு பெருங் குறையாகும். இந்துக்களுக்குப் பகவத்கீதை எவ்வாறு உயர்ந்த நூலாக இருக்கிறதோ அதுபோன்று பௌத்தர்களுக்குத் **தம்மபதம்** என்னும் இந்நூல் உயர்ந்த நூலாகும். ஆகையினால், இந்நூல் செய்யுள் களைப் பாலி மொழியில் உள்ளபடியே தமிழ் எழுத்திற் கூறி அச்சூத்திரங்களுக்குத் தமிழில் உரையும் எழுதி யுள்ளோம். தமிழறிஞர் இதனைப் பயன் படுத்திக் கொள்வார்களாக.

நில்வக்கே ஸோமானந்த,
நாயக ஸ்தவிரர்.

மஹாபோதி ஆச்ரமம்
மதரஸ் 11, *இந்தியா.*

அட்டவணை

பாலி

1.	யமகவக்கோ	1
2.	அப்பமாதவக்கோ	13
3.	சித்தவக்கோ	19
4.	புப்பவக்கோ	25
5.	பாலவக்கோ	33
6.	பண்டிதவக்கோ	41
7.	அரஹந்தவக்கோ	49
8.	ஸஹஸ்ஸவக்கோ	55
9.	பாபவக்கோ	63
10.	தண்டவக்கோ	71
11.	ஜராவக்கோ	81
12.	அத்தவக்கோ	87
13.	லோகவக்கோ	93
14.	புத்தவக்கோ	99
15.	ஸுகவக்கோ	109

16.	பியவக்கோ	115
17.	கோதவக்கோ	121
18.	மலவக்கோ	129
19.	தம்மட்டவக்கோ	141
20.	மக்கவக்கோ	151
21.	பகிண்ணகவக்கோ	161
22.	நிரயவக்கோ	169
23.	நாகவக்கோ	177
24.	தண்ஹாவக்கோ	185
25.	பிக்குவக்கோ	199
26.	ப்ராஹ்மணவக்கோ	211

அட்டவணை

தமிழ்

1.	யமக வர்க்கம்	2
2.	அப்பிரமாத வர்க்கம்	14
3.	சித்த வர்க்கம்	20
4.	புஷ்ப வர்க்கம்	26
5.	பால வர்க்கம்	34
6.	பண்டித வர்க்கம்	42
7.	அரஹந்த வர்க்கம்	50
8.	ஆயிர வர்க்கம்	56
9.	பாப வர்க்கம்	64
10.	தண்ட வர்க்கம்	72
11.	ஜரா வர்க்கம்	82
12.	அத்த வர்க்கம்	88
13.	லோக வர்க்கம்	94
14.	புத்த வர்க்கம்	100
15.	சுக வர்க்கம்	110

16.	பிரிய வர்க்கம்	116
17.	கோத வர்க்கம்	122
18.	மல வர்க்கம்	130
19.	தம்மட்ட வர்க்கம்	142
20.	மார்க்க வர்க்கம்	152
21.	பகிண்ணக வர்க்கம்	162
22.	நிரய வர்க்கம்	170
23.	நாக வர்க்கம்	178
24.	தண்ஹா வர்க்கம்	186
25.	பிக்கு வர்க்கம்	200
26.	பிராமண வர்க்கம்	212

தம்மபதம்

நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ ஸம்மா ஸம்புத்தஸ்ஸ

தம்மபத

யமக வக்கோ

1. மனோ புப்பங்கமா தம்மா
மனோ ஸெட்டா மனோமயா;
மனஸா சே பதுட்டேன
பாஸதி வா கரோதி வா,
ததோ நங் துக்கமங்வேதி
சக்கங்'வ வஹதோ பதங் 1

2. மனோ புப்பங்கமா தம்மா
மனோஸெட்டா மனோமயா
மனஸா சே பஸங்னேன
பாஸதி வா கரோதி வா,
ததோ நங் ஸுகமங்வேதி
சாயா'வ அநபாயினீ 2

ஞான பரிபூரண பரிசுத்த மூர்த்தியான புத்தபகவானுக்கு வணக்கம்

தம்மபதம்

யமக வர்க்கம்

1. எண்ணங்கள் (தர்மங்கள் அல்லது சேதஸிகங்கள்) மனத்திலிருந்து உண்டாகின்றன. அவைகளுக்கு மனமே முதன்மையானது. எண்ணங்கள் மனத்தினாலே உண்டாக்கப்படுகின்றன. ஆகையினால் ஒருவன் தீய எண்ணங்களோடு பேசினாலும் சரி, தீய செய்கைகளைச் செய்தாலும் சரி, அவற்றினால் உண்டாகும் துக்கங்கள், இழுத்துச் செல்லும் எருதுகளைப் பின் தொடர்ந்து போகும் வண்டிபோல, அவனுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றித் தொடர்கின்றன. 1

2. எண்ணங்கள் மனத்திலிருந்தே தோன்றுகின்றன. எண்ணங்களே முக்கியமானவை. அவை மனத்தினாலே உண்டாக்கப்படுகின்றன. ஒருவன் தூய எண்ணங்களோடு பேசினாலும் சரி, செய்தாலும் சரி, அவற்றினால் உண்டாகும் நன்மைகள், எப்போதும் நீங்காத நிழல்போன்று அவனைப் பின் தொடர்கின்றன. 2

3. அக்கொச்சி மங் அவதி மங்,
அஜினி மங், அஹாஸி மே
யே தங் உபநய்ஹந்தி
வேரங் தேஸங் ந ஸம்மதி 3

4. 'அக்கொச்சி மங் அவதி மங்
அஜினி மங், அஹாஸி மே',
யே தங் ந உபனய்ஹந்தி
வேரங் தேஸூபஸம்மதி 4

5. ந ஹி வேரேன வேரானி
ஸம்மந்தீத குதாசனங்
அவேரேன ச ஸம்மந்தி
எஸ தம்மோ ஸனந்தனோ 5

6. பரே ச ந விஜானந்தி
'மயமெத்த யமாமஸே'
யே ச தத்த விஜானந்தி
ததோ ஸம்மந்தி மேதகா 6

3. 'அவன் என்னை இகழ்ந்துபேசினான், அவன் என்னை அடித்தான், என்னை வென்றான், என் பொருள்களைக் கவர்ந்துகொண்டான்' என்பதுபோன்ற எண்ணங்களை ஒருவன் எப்போதும் நினைத்துக்கொண்டிருந்தால் அவனுடைய பகைமை (வைரம்) ஒருபோதும் தணியாது. 3

4. 'அவன் என்னை ஏசினான், என்னை அடித்தான், வென்றான், பொருளைக் கவர்ந்துகொண்டான்' என்று எவன் ஒருவன் மனத்தில் கொள்ளாமல் இருக்கிறானோ அவனுடைய வைரம் (பகைமை) சாந்தப்படுகிறது. 4

5. ஏனெனில், பகைமையைப் பகைமையினால் தணிக்க முடியாது. பகைமையை அன்பினாலேயே தணிக்க முடியும். இதுதான் தொன்றுதொட்டு வருகிற தர்மமாகும். 5

6. கலகம் செய்ய விரும்புவோர் 'நாங்கள் என்றைக்காவது இறப்போம்' என்பதை அறிகிறதில்லை. அறிந்தால் அவர்கள் கலகம் செய்வதை நிறுத்தி விடுவார்கள். 6

7. ஸுபானுபஸ்ஸிங் விஹரந்தங்
இந்த்ரியேஸு அஸங்வுதங்
போஜனம்ஹி அமத்தஞ்ஞுங்
குஸீதங் ஹீனவீரியங்
தங் வே பஸஹதீ மாரோ
வாதோ ருக்கங்வ துப்பலங் 7

8. அஸுபானுபஸ்ஸிங் விஹரந்தங்
இந்த்ரியேஸு ஸுஸங்வுதங்
போஜனம்ஹி ச மத்தஞ்ஞுங்
ஸத்தங் ஆரத்த வீரியங்
தங் வே நப்பஸஹதீ மாரோ
வாதோ ஸேலங்'வ பப்பதங் 8

9. அநிக்க ஸாவோ காஸாவங்
யோ வத்தங் பரிதஹெஸ்ஸதி
அபேதோ தமஸச்சேன
ந ஸோ காஸாவமரஹதி 9

10. யோ ச வந்தகஸாவஸ்ஸ
ஸீலேஸு ஸுஸமாஹிதோ
உபேதோ தமஸச்சேன
ஸ வே காஸாவமரஹதி 10

7. சிற்றின்பத்தை அடைய விரும்பியும், பஞ்சேந்திரியங்களை அடக்காமலும், மிதமிஞ்சிய உணவை உண்டும், சோம்பல் கொண்டும், சுருசுருப்பில்லாமலும் இருக்கிறவனை மாரன் (மன்மதன்), பலமற்ற மரத்தைச் சூறுவளிக் காற்று பெயர்த்து வீழ்த்துவது போல, வென்றுவிடுவான். 7

8. சிற்றின்பம் அசுசி (கெட்டது) என்று கண்டும், பஞ்சேந்திரியத்தை அடக்கியும், மித உணவு கொண்டும், பக்தியும் சுருசுருப்பும் அடைந்தும் உள்ள ஒருவனை, கற்பாறையாலான மலையைச் சூறுவளிக் காற்று அசைக்க முடியாததுபோல, மாரன் அசைக்க முடியாது. 8

9. யாரேனும் ஒருவர் மஞ்சள் (சீவர) ஆடையை உடுத்திக் கொள்ள விரும்புவாரானால், அவர் மாசுள்ள மனமுடையவராய் தன் அடக்கமும் உண்மையும் இல்லாமலிருப்பாரானால், மஞ்சள் (சீவர) ஆடை உடுப்பதற்கு அவர் தகுதியுள்ளவர் ஆகமாட்டார். 9

10. மனமாசுகளை நீக்கி, ஒழுக்கத்தில் நிலைபெற்று நின்று, தன்னடக்கமும் மெய்யுணர்வும் ஒருவர் பெற்றிருப்பாரானால், திண்ணமாக அவரே மஞ்சள் (சீவர) ஆடையுடுக்கத் தகுதியுடையவர் ஆவார். 10

11. அஸாரே ஸாரமதினோ
ஸாரே சாஸாரதஸ்ஸினோ
தே ஸாரங் நாதிகச்சந்தி
மிச்சாஸங்கப்பகோசரா 11

12. ஸாரங் ச ஸாரதோ ஞத்வா
அஸாரஞ் ச அஸாரதோ
தே ஸாரங் அதிகச்சந்தி
ஸம்மாஸங்கப்பகோசரா 12

13. யதா'காரங் துச்சன்னங்
வுட்டீ ஸமதிவிஜ்ஜதி
ஏவங் அபாவிதங் சித்தங்
ராகோ ஸமதி விஜ்ஜதி 13

14. யதாகா'ரங் ஸுச்சன்னங்
வுட்டீ ந ஸமதிவிஜ்ஜதி
ஏவங் சுபாவிதங் சித்தங்
ராகோ ந ஸமதிவிஜ்ஜதி 14

11. சாரம் அற்றவைகளைச் சாரம் உள்ளவையென்றும், சாரம் உள்ளவைகளை சாரம் அற்றவையென்றும் கொண்டிருப்பவர், தவறான காட்சியை யுடையவரா யிருப்பதனால், சாரத்தை (மெய்க் காட்சியை) யடைய மாட்டார். 11

12. சாரமுள்ளதைச் சாரம் என்றும், சாரம் அற்றதைச் சாரம் அற்றது என்றும் காண்கிறவர், மெய்க் காட்சியைக் கொண்டிருப்பதனாலே, சாரத்தை(மெய்யை) அடைகிறார்கள். 12

13. நன்றாக வேயப் பெறாத கூரை வீட்டில் மழை நீர் புகுவதுபோல, பண்படுத்தப்படாத மனத்தில் காம எண்ணங்கள் (ராகம்) புகுந்துவிடுகின்றன. 13

14. நன்றாக வேயப்பட்ட கூரை வீட்டுக்குள் மழை நீர் இறங்காததுபோல, பண்படுத்தப்பட்ட மனத்திற்குள் காம எண்ணங்கள் (ராகம்) புக முடியாது. 14

15. இத ஸோசதி பெச்ச ஸோசதி
பாபகாரீ உபயத்த ஸோசதி
ஸோ ஸோசதி ஸோ விஹஞ்ஞதி
திஸ்வா கம்ம கிலிட்டமத்தனோ 15

16. இத மோததி பெச்ச மோததி
கதபுஞ்ஞோ உபயத்த மோததி
ஸோ மோததி ஸோ பமோததி
திஸ்வா கம்ம விசுத்திமத்தனோ 16

17. இத தப்பதி பெச்ச தப்பதி
பாபகாரீ உபயத்த தப்பதி
பாபங் மே கதந்தி தப்பதி
பிய்யோ தப்பதி துக்கதிங் கதோ 17

18. இத நந்ததி பெச்ச நந்ததி
கதபுஞ்ஞோ உபயத்த நந்ததி
புஞ்ஞங் மே கதந்தி நந்ததி
பிய்யோ நந்ததி சுக்கதிங் கதோ 18

15. பாவஞ் செய்தவன் இம்மையிலும் துக்கமடைகிறான்; மறுமையிலும் துக்கமடைகிறான்; அவன் இரண்டிடங்களிலும் துக்கமடைகிறான். தன்னுடைய தீய செய்கைகளைக் கண்டு அவன் விசனமடைந்து அழிந்து போகிறான். 15

16. புண்ணியம் செய்தவன் இம்மையிலும் மகிழ்ச்சியடைகிறான்; மறுமையிலும் மகிழ்ச்சியடைகிறான்; அவன் இரண்டிடங்களிலும் மகிழ்ச்சியடைகிறான். தன்னுடைய நல்ல செய்கைகளைக் கண்டு அவன் மகிழ்ந்து மேன்மேலும் இன்பமடைகிறான். 16

17. பாவஞ் செய்தவன், இம்மையிலும் அழுங்குகிறான்; மறுமையிலும் அழுங்குகிறான்; அவன் இருமையிலும் அழுங்குகிறான். 'நான் பாவம் செய்தேன்' என்று அவன் மனம் புழுங்குகிறான். நரகத்திற் சென்று அவன் மேலும் மேலும் அழுது புலம்புகிறான். 17

18. நன்னெறியில் நடப்பவன் இம்மையிலும் உவகை கொள்கிறான்; மறுமையிலும் உவகை கொள்கிறான்; அவன் இருமையிலும் உவகை பெறுகிறான். 'நான் நல்லதைச் (புண்ணியத்தைச்) செய்தேன்' என்று நினைத்து அவன் இன்புறுகிறான். சுவர்க்கத்திற்குப் போய் நன்மைகளைத் துய்த்துக்கொண்டே இன்பமடைகிறான். 18

19. பஹும்பி சே ஸஹிதங் பாஸமானோ
ந தக்கரோ ஹோதி நரோ பமத்தோ
கோபோ'வ காவோ கணயங் பரேஸங்
ந பாகவா ஸாமஞ்ஞஸ்ஸ ஹோதி 19

20. அப்பம்பி சே ஸஹிதங் பாஸமானோ
தம்மஸ்ஸ ஹோதி அநுதம்மசாரீ
ராகஞ் ச தோஸஞ் ச பஹாய மோஹங்
ஸம்மப்பஜானோ ஸுவிமுத்தசித்தோ
அனுபாதியானோ இத வா ஹுரங் வா
ஸ பாகவா ஸாமஞ்ஞஸ்ஸ ஹோதி 20

யமகவக்கோ படமோ

---

19. ஒருவர் திரிபிடக புத்த தர்மங்களை முழுவதும் கற்று மிக உரக்க ஓதி உபதேசித்தாலும், அவர் அச்சூத்திரங்கள் கூறுகிறபடி நடக்கவில்லையானால், பிறருடைய பசுக்களைக் கணக்கெண்ணிக் கொண்டிருக்கும் இடையனையொப்ப, துறவிகள் அடையவேண்டிய பலனை அடையமாட்டார். 19

20. திரிபிடக புத்த தர்மங்களைச் சிறிதளவு ஓதினாலும், அவைகூறுகிறபடி ஒருவர் நடந்து, ஆசை பகை மோகம் முதலியவைகளை அகற்றி, நற்காட்சி பெற்று மனமாசு அற்று இருவகைப்பற்றுக்களையும் விட்டிருப்பாரானால், அவரே உண்மையில் துறவிகள் அடையும் தூய பயனை அடைவார். 20

முதலாவது யமக வர்க்கம்

அப்பமாத வக்கோ

1. அப்பமாதோ அமத பதங்
பமாதோ மச்சுனோ பதங்
அப்பமத்தா ந மீயந்தி
யே பமத்தா யதா மதா 21

2. ஏதங் விஸேஸதோ ஞத்வா
அப்பமாதம்ஹி பண்டிதா
அப்பமாதே பமோதந்தி
அரியானங் கோசரே ரதா 22

3. தே ஜாயினோ ஸாததிகா
நிச்சங் தள்ஹ பரக்கமா
புஸந்தி தீரா நிப்பாணங்
யோகக்கேமங் அனுத்தரங் 23

4. உட்டானவதோ ஸதிமதோ
ஸுசிகம்மஸ்ஸ நிஸம்மகாரினோ
ஸஞ்ஞதஸ்ஸ ச தம்மஜீவினோ
அப்பமத்தஸ்ஸ யஸோ'பிவட்டதி 24

அப்பிரமாத வர்க்கம்

1. ஊக்கமுடைமை (விழிப்புடைமை) இறவாமைக்கு (நிர்வாண மோக்ஷத்திற்கு) வழியாகும். ஊக்கம் இன்மை (மறதி) இறப்புக்கு வழியாகும். விழிப்புடையோர் இறக்கிறதில்லை; மறதியுடையோர் இறந்தவருக்குச் சமானமானவர். 21

2. ஊக்கம் உடைமை ஊக்கம் இல்லாமை என்னும் இவற்றின் நன்மையையும் தீமையையும் நன்கறிந்த அறிவுடையோர், ஆன்றோர்காட்டிய வழியில் சென்று அங்கே இன்புற்று இருக்கிறார்கள். 22

3. எப்போதும் முயற்சியுடனும் வீரியத்துடனும் தியானம் செய்து கொண்டிருப்பவர், நிருத்தர யோக க்ஷேமம் என்று சொல்லப்பட்ட நிர்வாண க்ஷேமத்தை அடைகிறார்கள். 23

4. முயற்சியும், விழிப்பும், குற்றமற்ற செய்கையும், சாந்தமும், தன்னடக்கமும் உள்ளவர்களாய் நல்லொழுக்கத்துடனிருக்கும் முயற்சியுடையோரின் புகழ் மேன்மேலும் வளர்கிறது. 24

5. உட்டானேனப்பமாதேன
ஸஞ்ஞமேன தமேன ச
தீபங் கயிராத மேதாவீ
யங் ஓகோ நாபிகீரதி 25

6. பமாதமனுயுஞ்ஜந்தி
பாலா தும்மேதினோ ஜனா
அப்பமாதஞ் ச மேதாவீ
தனங் ஸெட்டங்'வ ரக்கதி 26

7. மா பமாதமனுயுஞ்ஜேத
மா காமரதிஸந்தவங்
அப்பமத்தோ ஹி ஜாயந்தோ
பப்போதி விபுலங் சுகங் 27

8. பமாதங் அப்பமாதேன
யதா னுததி பண்டிதோ
பஞ்ஞாபாஸாதமாருய்ஹ
அஸோகோ ஸோகினிங் பஜங்
பப்பதட்டோ'வ பும்மட்டே
தீரோ பாலே அவெக்கதி 28

5. அறிவுள்ளவர்கள், தங்கள் முயற்சியினாலும், ஆற்றலினாலும், தன்னடக்கத்தினாலும், ஒழுக்கத்தினாலும், வெள்ளத்தினால் அழிக்கப்படாத அரண் அமைத்த தீவைப்போலத் தங்களைப் பலப்படுத்திக் கொள்கிறார்கள். 25

6. அறிவற்ற மூடர்கள் அசட்டைத் தன்மைக்கு இடங்கொடுக்கிறார்கள். அறிவுள்ளவர் விழிப்புத்தன்மையை, விலையுயர்ந்த செல்வத்தைப் போலப் போற்றுகிறார்கள். 26

7. அசட்டைத் தன்மைக்கு இடம்கொடுக்காதீர்கள்; காமசுகங்களில் பழகாதீர்கள். தியானத்தில் மனத்தைச் செலுத்தி விழிப்புடன் இருப்பவர் பெரிய இன்பத்தை அடையப் பெறுகிறார். 27

8. அறிவாளியாகிய ஒருவர் அசட்டைத்தன்மையை நீக்கி முயற்சியுடனிருப்பாரானால், அவர் ஞான மாளிகையின் உயரிய இடத்தை யடைந்திருப்பதனாலே, மலையின் உச்சியில் இருக்கும் ஓர் ஆள் அடிவாரத்தில் உள்ளவர்களைக் காண்பதுபோல, துக்கமும் அறியாமையும் உள்ள மக்களைக் காண்கிறார். 28

9. அப்பமத்தோ பமத்தேசு
சுத்தேசு பஹுஜாகரோ
அபலஸ்ஸங்'வ ஸீகஸ்ஸோ
ஹித்வா யாதி சுமேதஸோ 29

10. அப்பமாதேன மகவா
தேவானங் ஸெட்டதங் கதோ
அப்பமாதங் பஸங்ஸந்தி
பமாதோ கரஹிதோ ஸதா 30

11. அப்பமாதரதோ பிக்கு
பமாதே பயதஸ்ஸி வா
ஸஞ்ஞோனங் அணுங் தூலங்
டஹங் அக்கிவ கச்சதி 31

12. அப்பமாதரதோ பிக்கு
பமாதே பயதஸ்ஸி வா
அபப்போ பரிஹாணய
நிப்பாணஸ்ஸேவ ஸந்திகே 32

அப்பமாத வக்கோ துதியோ

---

9. சோம்பேரிகளிடையில் ஊக்கமுள்ளவராயும், தூங்குகிறவர்களிடையில் விழிப்புள்ளவராயும் இருக்கிற அறிஞர் ஒருவர், வல்லமையுள்ள குதிரை வலியற்ற குதிரைகளைக் கடந்து முன்னால் வெகு தூரம் ஓடுவது போல, எல்லோருக்கும் முன்னால் செல்கிறார். 29

10. முயற்சியினால்தான் மகவான் (இந்திரன் தேவர்களுக்குத் தலைவனானான்; முயற்சி போற்றிப் புகழப் படுகிறது; முயற்சியின்மை இகழப்படுகிறது. 30

11. சோம்பற்றன்மையை அஞ்சி முயற்சியை மேற்கொண்டுள்ள ஒருவர், பெரியனவும் சிறியனவுமான மனத்தளைகளை (விலங்குகளை), நெருப்பைப் போல எரித்துவிடுகிறார். 31

12. முயற்சியுடனும் விழிப்புடனும் இருந்து சோம்பற்றன்மையை அஞ்சுகிற ஒரு பிக்கு, வீழ்ச்சிக்கு உரியவர் அல்லர்; அவர் நிர்வாண மோக்ஷத்தின் அருகில் உள்ளவராவார். 32

இரண்டாவது அப்பிரமாத வர்க்கம்

சித்த—வக்கோ

1. பந்தனங் சபலங் சித்தங்
துரக்கங் துந்நிவாரயங்
உஜுங் கரோதி மேதாவீ
உஸுகாரோ'வ தேஜனங் 33

2. வாரிஜோ'வ தலே கித்தோ
ஓகமோகத உப்பதோ
பரிபந்ததி'தங் சித்தங்
மாரதெய்யங் பஹாதவே 34

3. துந்நிகஹஸ்ஸ லஹுனோ
யத்த காமநிபாதினோ
சித்தஸ்ஸ தமதோ ஸாது
சித்தங் தந்தங் சுகாவஹங் 35

4. சுதுத்தஸங் சுநிபுணங்
யத்த காம நிபாதினங்
சித்தங் ரக்கேத மேதாவீ
சித்தங் குத்தங் சுகாவஹங் 36

சித்த வர்க்கம்

1. அடக்கியாள்வதற்கும் காப்பதற்கும் அருமையானதும், சலித்துக்கொண்டே இருக்கிறதும் உறுதியற்றதும் ஆன மனத்தை அறிவாளிகள், வளைந்த அம்புகளை வேடன் நீட்டிவைப்பது போலச் செம்மைப் படுத்துகிறார்கள். 33

2. நீரில் வாழ்கிற மீனைப் பிடித்துத் தரைமேல் போட்டால் அது எப்படி துடிக்கிறதோ அதுபோல, மனமானது (தீயவனாகிய) மாரனுடைய உலகத்திலிருந்து தப்பித்துக்கொள்ளத் துடிக்கிறது. 34

3. அடக்கியாள்வதற்கு அருமையானதும், தன் போக்குப்படியே சஞ்சரிக்கிறதுமான மனத்தை அடக்குவது நல்லது; அடக்கியாளப்படுகிற மனமானது சந்தோஷத்தைத் தருகிறது. 35

4. அடக்கியாளக் கடினமானதும் நிலைத்து நிற்காமல் எப்போதும் அலைந்துகொண்டே யிருக்கிறதுமான மனத்தை, அறிவாளிகள் காவல் புரிவாராக; காக்கப்பட்ட மனம் சந்தோஷத்தைத் தருகிறது. 36

5. தூரங்கமங் ஏகசரங்
அஸரீரங் குஹாஸயங்
யே சித்தங் ஸஞ்ஞமெஸ்ஸந்தி
மொக்கந்தி மாரபந்தனு 37

6. அநவட்டிதசித்தஸ்ஸ
ஸத்தம்மங் அவிஜானதோ
பரிப்லவபஸாதஸ்ஸ
பஞ்ஞா ந பரிபூரதி 38

7. அநவஸ்ஸுத சித்தஸ்ஸ
அநந்வாஹதசேதஸோ
புஞ்ஞபாப பஹீணஸ்ஸ
நத்தி ஜாகரதோ பயங் 39

8. கும்பூபமங் காயமிமங் விதித்வா
நகரூபமங் சித்தமிதங் டபெத்வா
யோதேத மாரங் பஞ்ஞாயுதேன
ஜிதஞ்ச ரக்கே அநிவேஸனோ ஸியா 40

5. வெகுதூரம் சஞ்சரிக்கிறதும், தன்னந் தனியே அலைகிறதும், உடம்பு இல்லாமலே (இருதயமாகிய) குகையில் இருப்பதுமாகிய மனத்தை அடக்கியாள்கிறவர், மாரனுடைய தளையிலிருந்து தப்பித்துக் கொள்கிறார். 37

6. உறுதியற்ற மனத்தையுடையவரும், உண்மையான தர்மத்தை யறியாதவரும், நிலைபெற்ற கொள்கை இல்லாதவருமான எவரும் முழு ஞானத்தை யடையமாட்டார். 38

7. காமங்களினால் பற்றப்படாமலும் பகைமையில்லாமலும் உள்ள மனத்தோடு, நன்மை தீமைகளை விட்ட விழிப்புள்ள ஒருவருக்கு அச்சம் என்பதே இல்லை. 39

8. இந்த உடம்பு மட்குடம் போன்றது (அழியுந் தன்மையது) என்பதை அறிந்து, அரண் செய்யப்பட்ட நகரம் போல உறுதியோடு கூடிய மனத்துடன் இருந்து, அறிவாகிய ஆயுதங்களால் ஒருவர் மாரனை எதிர்ப்பாராக. பற்றற்ற மனத்துடன் வெற்றியை நிலை நிறுத்துவாராக. 40

9\. அசிரங் வதய'ங் காயோ
படவிங் அதிஸெஸ்ஸதி
சுத்தோ அபேதவிஞ்ஞாணோ
நிரத்தங்'வ கலிங்கரங் 41

10\. திஸோ திஸங் யங் தங் கயிரா
வேரீ வா பன வேரினங்
மிச்சாபணிஹிதங் சித்தங்
பாபியோ நங் ததோ கரே 42

11\. யங் தங் மாதா பிதா கயிரா
அஞ்ஞே வா பி'ச ஞாதகா
ஸம்மாபணிஹிதங் சித்தங்
ஸெய்யஸோ நங் ததோ கரே 43

சித்த-வக்கோ ததியோ

———

9. வெகு விரைவிலே, அந்தோ! இந்த உடம்பு உணர்ச்சியற்று தரையில் விழுந்து மரக்கட்டை போன்று ஒதுக்கித்தள்ளப்படும். 41

10. வைரங்கொண்டவன் தன்னால் வெறுக்கப்பட்டவனுக்குத் தீமை செய்வதைவிட அதிகமாக, அல்லது பகைவனுக்குப் பகைவன் தீமை செய்வதைவிட அதிகமாக, அடக்கியாளப்படாத மனமானது பெருந்தீங்கைச் செய்கிறது. 42

11. கட்டுப்படுத்தி நல்வழியில் நிறுத்தப்பட்ட மனமானது, தாயும் தந்தையும் வேறு சுற்றத்தாரும் செய்யாத நன்மைகளை விட அதிகமான நன்மைகளைச் செய்கிறது. 43

மூன்றாவது சித்தவர்க்கம்

புப்ப—வக்கோ

1. கோ இமங் படவிங் விஜெஸ்ஸதி ?
யமலோகஞ் ச இமங் ஸதேவகங்
கோ தம்மபதங் சுதேஸிதங் ?
குஸலோ புப்பமிவ பசெஸ்ஸதி ? 44

2. ஸேகோ படவிங் விஜெஸ்ஸதி
யமலோகஞ் ச இமங் ஸதேவகங்
ஸேகோ தம்மபதங் சுதேசிதங்
குஸலோ புப்பமிவ பசெஸ்ஸதி 45

3. பேணூபமங் காயமிமங் விதித்வா
மரீசிதம்மங் அபிஸம்புதானோ
செத்வான மாரஸ்ஸ பபுப்பகானி
அதஸ்ஸனங் மச்சுராஜஸ்ஸ கச்சே 46

4. புப்பானி ஹேவ பசினந்தங்
ப்யாஸத்தமனஸங் நரங்
சுத்தங் காமங் மஹோகோ'வ
மச்சு ஆதாய கச்சதி 47

புஷ்ப வர்க்கம்

1. இயமலோகமும் தேவலோகமும் ஆகிய இந்த உலகத்தை வெற்றி கொள்கிறவர் யார்? அறிவுள்ள பூக்காரன் ஒருவன், (மாலைதொடுக்க) நல்ல பூக்களைக் கொய்வதுபோல, நல்ல தர்ம உபதேசங்களைக் கொய்து எடுப்பவர் யார்? 44

2. இயம லோகமும் தேவலோகமும் ஆகிய இந்த உலகத்தைச் சேகர்* வெற்றி கொள்வார்கள்; அவர்கள்தாம், நல்ல பூக்காரன் நல்ல பூக்களைக் கொய்வது போல, நல்ல தர்மோபதேசங்களைக் கொய்தெடுப்பார்கள். 45

3. இவ்வுடம்பு நீறிற் குமிழி போன்றது என்பதை யறிந்து, இது கானல் நீர் போன்ற இயல்புடையது என்பதை யுணர்ந்து, மாரனுடைய புஷ்ப பாணங்களை அழித்து இயமனுடைய பார்வையிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும். 46

4. ஒருவர் (ஐம்புல இன்பமாகிய)பூக்களைப்பறித்துக் கொண்டும், அவைகளால் அவர் மனது பற்றிக் கொண்டும் இருக்கும் போது, பெருவெள்ளம் கிராமத்தை அடித்துக்கொண்டு போவதுபோல, அவரை மரணம் அடித்துக் கொண்டு போகிறது. 47

---

*(ஸேகர் = ஒன்றுமுதல் ஏழாவது படியாகிய ஸோதாபத்தி மார்க்கத்திலிருந்து அர்ஹந்த மார்க்கத்தை அடைந்தவர்)

5. புப்பானி ஹேவ பசினந்தங்
ப்யாஸத்தமனஸங் நரங்
அதித்தங் யேவ காமேசு
அந்தகோ குருதே வஸங் 48

6. யதாபி பமரோ புப்பங்
வண்ணகந்தங் அஹேடயங்
பலேதி ரஸமாதாய
ஏவங் காமே முனீ சரே 49

7. ந பரேஸங் விலோமானீ
ந பரேஸங் கதாகதங்
அத்தனோ' வ அவெக்கெய்ய
கதானி அகதானி ச 50

8. யதாபி ருசிரங் புப்பங்
வண்ணவந்தங் அகந்தகங்
ஏவங் சுபாஸிதா வாசா
அபலா ஹோதி அகுப்பதோ 51

5. ஒருவர் (ஐம்புல இன்பங்களாகிய) பூக்களைப் பறித்துக்கொண்டும், அவைகளில் அவர் மனது பற்றுக்கொண்டும் இருக்கும் போது, அவைகளால் திருப்தி அடைவதற்கு முன்பே, அவர் மரணத்தினால் வெல்லப்படுகிறார். 48

6. தேனீக்கள், பூவின் அழகையும் மணத்தையும் கெடுக்காமலே பூவிலுள்ள தேனை மட்டும் கொண்டுபோவது போல, துறவிகள் கிராமங்களில் (உணவுக்காகப்) போவாராக. 49

7. மற்றவருடைய குற்றங்களையும் அவர்கள் செய்ததும் செய்துகொண்டிருப்பதுமான காரியங்களையும் ஒருவர் காணாமலிருப்பாராக; அவர் தான் செய்த காரியங்களையும் செய்துகொண்டிருக்கும் காரியங்களையும் காண்பாராக. 50

8. ஒருவர் தாம் உபதேசிப்பது போல செய்கையிலும் நடக்காமலிருப்பாரானால், அவருடைய உபதேசங்கள், மணம் இல்லாத பூவைப்போலப் பயனற்றவையாகும். 51

9\. யதாபி ருசிரங் புப்பங்
வண்ணவந்தங் ஸகந்தகங்
ஏவங் சுபாஸிதா வாசா
ஸபலா ஹோதி ஸகுப்பதோ 52

10\. யதா'பி புப்பராஸிம்ஹா
கயிரா மாலாகுணே பஹூ
ஏவங் ஜாதேன மச்சேன
கத்தப்பங் குஸலங் பஹூங் 53

11\. ந புப்பகந்தோ படிவாதமேதி
ந சந்தனங் தகரமல்லிகா வா
ஸதஞ் ச கந்தோ படிவாதமேதி
ஸப்பாதிஸா ஸப்புரிஸோ பவாதி 54

12\. சந்தனங் தகரங் வாபி
உப்பலங் அத வஸ்ஸிகீ
ஏதேஸங் கந்தஜாதானங்
ஸீலகந்தோ அநுத்தரோ 55

9. ஒருவர் தாம் உபதேசிப்பதுபோலவே செய்கையிலும் நடப்பாரானால், அவருடைய போதனைகள், மிக்க அழகுள்ள பூவுக்கு நறுமணம் அமைந்திருப்பது போல, மிக்க பயனுடையவையாகும். 52

10. பூக்களைக்கொண்டு பலவிதமான மாலைகள் தொடுக்கப்படுவது போல, செத்துப்போகும் தன்மையுள்ள மனத்தைக் கொண்டு பல நன்மைகளைச் செய்யக் கூடும். 53

11. பூக்களின் மணமும், சந்தனம் தகரம் மல்லிகை முதலியவைகளின் மணமும் காற்றுக்கு எதிர்ப்புறமாக வீசுவதில்லை. ஆனால் அறிஞர்களின் (புகழாகிய) மணம் காற்றுக்கு எதிர்ப்புறமாகவும் வீசுகிறது. அறிவாளி எல்லாத் திசைகளிலும் புகழப்படுகிறான். 54

12. சந்தனம், தகரம், தாமரை, மல்லிகை முதலிய எல்லா மணங்களையும் விட, அறிஞருடைய நறுமணம் சிறந்தது. 55

13. அப்பமத்தோ அயங் கந்தோ
யா'யங் தகர சந்தினீ
யோ ச ஸீலவதங் கந்தோ
வாதி தேவேசு உத்தமோ 56

14. தேஸங் ஸம்பன்னஸீலானங்
அப்பமாதவிஹாரினங்
ஸம்மதஞ்ஞாவிமுத்தானங்
மாரோ மக்கங் ந விந்ததி 57

15. யதா ஸங்காரகானஸ்மிங்
உஜ்ஜிதஸ்மிங் மஹாபதே
பதுமங் தத்த ஜாயேத
ஸுசிகந்தங் மனோஹரங் 58

16. ஏவங் ஸங்காரபூதேசு
அந்தபூதே புதுஜ்ஜனே
அதிரோசதி பஞ்ஞாய
ஸம்மாஸம்புத்தஸாவகோ 59

புப்ப-வக்கோ சதுத்தோ

13. தகரம், சந்தனம் இவைகளினுடைய நறுமணம் அற்பமானது. அறிஞருடைய மேன்மையுள்ள நறுமணம் தேவர்களிடத்திலும் சென்று வீசுகிறது. 56

14. அறிஞராகவும், விழிப்புள்ள வாழ்க்கையுடையவராகவும், முழுஞானத்தினல் உயர்வு பெற்றவர்களாகவும் உள்ளவர்களே(அவர்கள் இருக்கும் இடத்தை) மாரன் அறியமாட்டான். 57

15. வழியில் கொட்டப்பட்ட குப்பைகளிலிருந்து நறுமணம் உள்ள அழகான தாமரைப்பூ மலர்கிறது. 58

16. அதுபோல, முழுஞானம் பெற்றவர்களின் சீடர்கள், குப்பை கூளங்களைப்போல அறியாமை நிறைந்துள்ள மக்களுக்குள்ளே, அறிவு ஒளிவீசி விளங்குகிறார்கள். 59

நான்காவது புஷ்பவர்க்கம்

பால—வக்கோ

1. தீகா ஜாகரதோ ரத்தி
தீகங் ஸந்தஸ்ஸ யோஜனங்
தீகோ பாலானங் ஸங்ஸாரோ
ஸத்தம்மங் அவிஜானதங் 60

2. சரஞ்சே நாதிகச்செய்ய
ஸெய்யங் ஸதிஸமத்தனோ
ஏகசரியங் தல்ஹங் கயிரா
நத்தி பாலே ஸஹாயதா 61

3. புத்தா மத்தி தனம் மத்தி
இதி பாலோ விஹஞ்ஞதி
அத்தாபி அத்தனோ நத்தி
குதோ புத்தா குதோ தனங்? 62

4. யோ பாலோ மஞ்ஞதி பால்யங்
பண்டிதோ வா'பி தேன ஸோ
பாலோ ச பண்டிதமானீ
ஸ வே பாலோ'தி வுச்சதி 63

பால வர்க்கம்

1. விழித்திருப்போருக்கு இரவு நீண்டிருக்கிறது. களைப்படைந்திருப்போருக்கு வழி பெருந்தூரமாயிருக்கிறது. சத்தர்மத்தை யறியாத மூடர்களுக்கு பிறப்பிறப்பாகிய சம்சார வட்டம் பெரியதாக இருக்கிறது. 60

2. தன்னைவிட மேலான, அல்லது தன்னைப் போன்ற அறிவுள்ள நண்பர்களை அடையமுடியாவிட்டால் அறிஞர் தன்னந்தனியே உறுதியாக இருக்கட்டும். ஏனென்றால், மூடர்களோடு நேசம் கூடாது. 61

3. "எனக்கு மக்கள் உள்ளனர், செல்வம் இருக்கிறது" என்று மூடர்கள் கவலைப்படுகிறார்கள். அவர்கள் தமக்குத் தாமே சொந்தமில்லாதபோது, மக்களைப்பற்றியும் செல்வத்தைப்பற்றியும் பேசுவதற்கு என்ன இருக்கிறது? 62

4. ஒருவர் தம் குற்றத்தை அறிவாரானால், அதனாலேயே அவர் அறிவாளியாகிறார். தான் அறிவாளி என்று நினைக்கிற ஒரு மூடன், உண்மையிலேயே மூடனாக இருக்கிறான். 63

5. யாவஜீவம்பி சே பாலோ
பண்டிதங் பயிருபாஸதி
ந ஸோ தம்மங் விஜானாதி
தப்பீ ஸூபரஸங் யதா 64

6. முஹூத்தமபி சே விஞ்ஞூ
பண்டிதங் பயிருபாஸதி
கிப்பங் தம்மங் விஜானாதி
ஜிவ்ஹா ஸூபரஸங் யதா 65

7. சரந்தி பாலா தும்மேதா
அமித்தேனேவ அத்தனா
கரொந்தா பாபகங் கம்மங்
யங் ஹோதி கடுகப்பலங் 66

8. ந தங் கம்மங் கதங் ஸாது
யங் கத்வா அநுதப்பதி
யஸ்ஸ அஸ்ஸுமுகோ ரோதங்
விபாகங் படிஸேவதி 67

5. மூடர், அறிஞருடன் தம் வாழ்நாள் முழுவதும் பழகினுலும், அகப்பை குழம்பின் சுவையை அறியாதது போல, அவர் தர்மத்தை அறியாமலிருக்கிருர். 64

6. அறிவுள்ளவர் ஞானிகளுடன் சிறிது நேரம் பழகினுலும், நாவானது குழம்பின் சுவையை அறிவது போல, அவர்கள் உடனே தர்மபோதனையை அறிந்து கொள்கிருர்கள் 65

7. அறிவற்ற மூடர், தாமே தமக்குப் பகைவர்களாய், பாபச்செயல்களைச் செய்துகொண்டு அலைகிருர்கள். அப்பாவச் செயல்களின் பலன் மிகவும் துன்பமாக இருக்கிறது. 66

8. தீய காரியங்களைச் செய்தவர், தாம் செய்த கர்மங்களுக்காக ஏங்குகிருர்கள். அதன் பயனைக் கண்ணீர் ததும்பும் முகத்துடன் அழுதுகொண்டே அனுபவிக்கிருர்கள். 67

9. தஞ்ச கம்மங் கதங் ஸாது
யங் கத்வா நானுதப்பதி
யஸ்ஸ பதீதோ ஸுமனோ
விபாகங் படிஸேவதி 68

10. மதுவா மஞ்ஞதி பாலோ
யாவ பாபங் ந பச்சதி
யதா ச பச்சதி பாபங்
அத பாலோ துக்கங் நிகச்சதி 69

11. மாஸே மாஸே குஸக்கேன
பாலோ புஞ்ஜேத போஜனங்
ந ஸோ ஸங்கததம்மானங்
கலங் அக்கதி ஸோலஸிங் 70

12. ந ஹி பாபங் கதங் கம்மங்
ஸஜ்ஜு கீரங்'வ முச்சதி
டஹந்தங் பாலமங்வேதி
பஸ்மச்சன்னோ'வ பாவகோ 71

9. நல்ல காரியங்களைச் செய்தவர், தாம் செய்த நல்ல காரியத்திற்காக ஏங்கித் தவிப்பதில்லை. அதன் பலனை இன்பமாகவும் உவகையுடனும் அனுபவிக்கிறார்கள். 68

10. மூடன், தான் செய்த பாவச் செயல்கள் பலன் தராதவரையில், அச்செயல்களைத் தேன் போன்று இனியதாகக் கருதுகிறான். பாவச் செயல்கள் பழுத்துப் பலன் தருகிறபோது அந்த மூடன் துன்பம் அடைகிறான். 69

11. ஒவ்வொரு மாதக் கடைசியிலும் மூடர்கள் தர்ப்பைப் புல்லின் நுனியளவு ஆகாரத்தை மட்டும் சாப்பிடுகிறார்கள்.* ஆனால், அவர்கள் ஸங்கததர்மத்தை அறிந்தவர்களுக்கு வீசம் பங்கு போலும் சமானமாக மாட்டார்கள். 70

12. பாலானது விரைவாகத் தயிர் ஆகாதது போல, பாபச் செயல்கள் விரைவில் பலன் தருவதில்லை. நெருப்பில் நீறு பூத்தது போல மூடர்கள் அதை யுணராமல் அதேயே செய்கிறார்கள். 71

(* இது உண்ணா நோன்பிருந்து கடுந் தபசு செய்பவர்களைப் பற்றிக் கூறியது.)

13. யாவதேவ அநத்தாய
ஞத்தங் பாலஸ்ஸ ஜாயதி
ஹந்தி பாலஸ்ஸ ஸுக்கங்ஸங்
முத்தமஸ்ஸ விபாதயங் 72

14. அஸதங் பாவனமிச்செய்ய
புரெக்காரஞ்ச பிக்குஸு
ஆவாஸேஸு ச இஸ்ஸரியங்
பூஜா பரகுலேஸு ச 73

15. மமேவ கதமஞ்ஞந்து
கிஹீ பப்பஜிதா உபோ
மமேவ அதிவஸா அஸ்ஸு
கிச்சா கிச்சேஸு கிஸ்மிசி
இதி பாலஸ்ஸ ஸங்கப்போ
இச்சா மானே ச வட்டதி 74

16. அஞ்ஞா ஹி லாபூபனிஸா
அஞ்ஞா நிப்பாணகாமினீ
எவமேதங் அபிஞ்ஞாய
பிக்கு புத்தஸ்ஸ ஸாவகோ
ஸக்காரங் நாபிநந்தெய்ய
விவேகமனுப்ரூஹயே 75

பால-வக்கோ பஞ்சமோ

13. இப்படியாக மூடர்களுடைய அறிவு, அவருடைய சொந்த அழிவுக்குக் காரணமாக இருந்து அவர் தலையைப் பிளந்து அவருடைய நன்மையை அழிக்கிறது. 72

14. மூடனாக உள்ள பிக்கு, தனக்குத் தகுதியில்லாத புகழையும் பிக்குகளின் தலைமைப் பதவியையும் விகாரைகளின் அதிகாரத்தையும், இல்லறத்தாரின் மரியாதையையும் அடைய விரும்புகிறார். 73

15. "இதை நான் செய்தேன் என்று இல்லறத்தாரும் துறவறத்தாரும் கருதவேண்டும்; சிறிதும் பெரிதுமான எல்லாக் காரியங்களையும் அவர்கள் என்னை முன் நிறுத்திச் செய்யவேண்டும்" என்று மூடர் நினைக்கிறார். அவருடைய ஆசையும், "தான்" என்னும் உணர்ச்சியும் அவரிடம் வளர்கிறது. 74

16. உண்மையில், உலக மோகங்களில் செலுத்தும் வழிவேறு; நிர்வாணமோக்ஷத்திற்குச் செலுத்தும் நெறி இன்னொன்று. ஆகவே, புத்தருடைய சீடர்களான பிக்குகள் இதையறிந்து, உலகப் புகழை நாடாமல், தனிமையை விரும்பி வளர்க்கவேண்டும். 57

ஐந்தாவது பாலவர்க்கம்

பண்டித—வக்கோ

1. நிதீனங்’ வ பவத்தாரங்
யங் பஸ்ஸே வஜ்ஜதஸ்ஸினங்
நிக்கய்ஹவாதிங் மேதாவிங்
தாதிஸங் பண்டிதங் பஜே
தாதிஸங்பஜமானஸ்ஸ
ஸெய்யோ ஹோதி ந பாபியோ 76

2. ஓவதெய்யானு ஸாஸெய்ய
அஸப்பா ச நிவாரயே
ஸதங் ஹி ஸோ பியோ ஹோதி
அஸதங் ஹோதி அப்பியோ 77

3. ந பஜே பாபகே மித்தே
ந பஜே புரிஸாதமே
பஜேத மித்தே கல்யாணே
பஜேத புரிஸுத்தமே 78

4. தம்மபீதி ஸுகங் ஸேதி
விப்பஸன்னேன சேதஸா
அரியப்பவேதிதே தம்மே
ஸதா ரமதி பண்டிதோ 79

பண்டித வர்க்கம்

1. குற்றங்களைச் சுட்டிக்காட்டிக் கண்டிக்கிற ஒருவரைக் கண்டால், அவரை, செல்வப் புதையல் இருக்கும் இடத்தைச் சுட்டிக் காட்டுகிறவர் எனக்கருதி, அவரோடு நட்புக்கொண்டு பழகவேண்டும். அப்படிப் பட்டவரை நண்பராகக் கொண்டு அவருடன் பழகுவது நன்மை பயக்குமேயன்றி தீமை பயக்காது. 76

2. பிறர் தீமை செய்வதைக் கண்டித்துத் தடுத்து அறிவு புகட்டுகிறவர்கள், நல்லோருக்கு அருமையான வர்கள். ஆனல், தீயவர்களுக்கு வெறுப்பானவர்கள். 77

3. தீயவர்களோடு நேசம் செய்யாதே. அற்பர்களோடு இணங்காதே. நேர்மையான நல்லோருடன் நட்புக்கொள். மேன்மக்களோடு சேர்ந்து பழகு. 78

4. உண்மையை உவப்புடன் நேசிக்கிறவர்கள், நிம்மதியான மனத்துடன் இன்பமாக இருக்கிறார்கள். அறிஞர்களான பண்டிதர்களின் உபதேசத்தில் அறிவாளிகள் உவகையடைகிறார்கள். 79

5. உதகங் ஹி நயந்தி நெத்திகா
உஸுகாரா நமயந்தி தேஜனங்
தாருங் நமயந்தி தச்சகா
அத்தாணங் தமயந்தி பண்டிதா 80

6. ஸேலோ யதா ஏககனோ
வாதேன ந ஸமீரதி
ஏவங் நிந்தா பஸங்ஸாஸு
ந ஸமிஞ்ஜந்தி பண்டிதா 81

7. யதா பி ரஹதோ கம்பீரோ
விப்பஸந்னோ அனாவிலோ
ஏவங் தம்மானி ஸுத்வான
விப்பஸீதந்தி பண்டிவா 82

8. ஸப்பத்த வே ஸப்புரிஸா சஜந்தி
ந காம காமா லபயந்தி ஸந்தோ
ஸுகேன புட்டா அத வா துகேன
ந உச்சாவசங் பண்டிதா தஸ்ஸயந்தி

5. பாசனக்காரர்கள் நீரைச் செலுத்திப் பாய்ச்சுகிறார்கள். அம்பு விற்போர், அம்புகளைக் கோணல் இல்லாமல் செவ்விதாகச் செய்கிறார்கள். தச்சர் மரங்களை வளைக்கிறார்கள். அறிஞர் தம்மைத் தாமே அடக்கி ஆள்கிறார்கள். 80

6. கற்பாறை, சூறாவளிக் காற்றுக்கும் அசையாதிருப்பது போல, அறிஞர் புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் அசையமாட்டார்கள். 81

7. ஆழமான குளத்தில் இருக்கிற மாசற்ற தெளிந்த நீரைப் போன்று, தர்ம உபதேசங்களைக்கேட்பதினாலே அறிஞர் மிகவும் தூய்மை அடைகிறார்கள். 82

8. அறிஞர்கள், எப்பொருளிலும் பற்றுவைப்பதில்லை. இன்பத்தினாலும் துன்பத்தினாலும் பற்றப்படாதபடியினாலே, பண்டிதர்கள் பெருமையடைவதுமில்லை தாழ்மை யடைவதுமில்லை. 83

9. ந அத்தஹேது ந பரஸ்ஸ ஹேது
ந புத்தமிச்சே ந தனங் ந ரட்டங்
ந இச்செய்ய அதம்மேன ஸமித்திமத்
[தனே
ஸ ஸீலவா பஞ்ஞவா தம்மிகோ ஸியா

10. அப்பகா தே மனுஸ்ஸேஸு
யே ஜனா பாரகாமினே
அதாயங் இதரா பஜா
தீரமேவானுதாவதி 85

11. யே ச கோ ஸம்மதக்காதே
தம்மே தம்மானுவத்தினே
தே ஜனா பாரமெஸ்ஸந்தி
மச்சுதெய்யங் ஸுதுத்தரச் 86

12. கண்ஹங் தம்மங் விப்பஹாய
ஸுக்கங் பாவேத பண்டிதோ
ஓகா அனேகங் ஆகம்ம
விவேகே யத்த தூரமங் 87

9. தனக்காகவும் பிறருக்காகவும் மக்கட் பேற்றையும் அரசாட்சியையும் விரும்பக்கூடாது. முறை தவறிய வழியில் தனது சொந்த நன்மையை நாடக் கூடாது. அப்படிப்பட்ட சீலவான் அறிவாளியாகவும் நீதிமானுகவும் இருக்கிறுர். 84

10. மக்களில் மிகச் சிலபேர்மட்டும், பிறவிப் பெருங்கடலைக் கடந்து அக்கரையைச் சேர்கிறுர்கள். மக்களில் பெரும்பான்மையோர் இக்கரைக்கே திரும்பி வந்துவிடுகிறுர்கள். 85

11. சத்தர்ம உபதேசத்தின்படி நடக்கிறவர்கள், கடத்தற்கு அரிய யமலோகத்தைக்கடந்து அக்கரையைச் சேருகிறுர்கள். 86

12. அறிஞரானவர் தீயதை நீக்கி நல்லதைக் கைக்கொண்டு அதன்படி நடக்கவேண்டும். இல்லறத்தை விட்டு, துய்ப்பதற்கு அருமையான ஏகாந்த இன்பத்துக்காக, தனிமையாயிருக்கிற துறவத்திற்குச் செல்லவேண்டும். 87

13\. தத்ராபிரதிமிச்செய்ய
ஹித்வா காமே அகிஞ்சனோ
பரியோதபெய்ய அத்தாநங்
சித்தக்லேஸேஹி பண்டிதோ 88

14\. யேஸங் ஸம்போதி அங்கேஸு
ஸம்மா சித்தங் ஸுபாவிதங்
ஆதான படிநிஸ்ஸக்கே
அனுபாதாய யே ரதா
கீணாஸவா ஜுதிமந்தோ
தே லோகே பரிநிப்புதா 89

பண்டித-வக்கோ சட்டோ

---

13. அறிஞர் இன்பசுகங்களை விட்டொழித்து, எல்லாவற்றையும் துறந்து, மனமாசுகளையெல்லாம் சுத்தம் செய்து, தூய்மையுடன் உவகையோடு இருக்க வேண்டும். 88

14. ஸம்போதியங்கத்தில் மனத்தை நிறுத்திய அறிஞர்கள், எதிலும் பற்றற்றவர்களாய், பற்றுக்களை விடுவதில் ஆசையுள்ளவர்களாய், மாசு இல்லாமல் ஒளி விட்டுப் பிரகாசிக்கிறார்கள். அவர்கள் இந்த உலகத்திலேயே நிர்வாண மோக்ஷத்தை அடைந்தவர் ஆவர். 89

ஆறாவது பண்டித வர்க்கம்.

அரஹந்த—வக்கோ

1. கதத்தினோ விஸோகஸ்ஸ
விப்பமுத்தஸ்ஸ ஸப்பதி
ஸப்ப கந்தப்பஹீணஸ்ஸ
பரிலாஹோ ந விஜ்ஜதி 90

2. உய்யுஞ்ஜந்தி ஸதிமந்தோ
ந நிகேதே ரமந்தி தே
ஹங்ஸா'வ பல்லலங் ஹித்வா
ஓகமோகங் ஜஹந்தி தே 91

3. யேஸங் ஸந்நிசயோ நத்தி
யே பரிஞ்ஞாதபோஜனா
ஸுஞ்ஞதோ அநிமித்தோ ச
விமொக்கோ யேஸ கோசரோ
ஆகாஸே'வ ஸகுந்தானங்
கதி தேஸங் துரந்நயங் 92

அர்ஹந்த வர்க்கம்

1. தம்முடைய (பிறப்பு இறப்பாகிய) பிரயாணத்தை முடித்துக்கொண்டு, எல்லா துக்கங்களினின்றும் விலகிக்கொண்டு, எல்லாவித பற்றுக்களையும் விட்டுவிட்டு, எல்லா வழியிலும் தம்மை உயர்த்திக்கொண்டவருக்குக் கவலை என்பது இல்லை. 90

2. விழிப்புள்ளவர்களாய் தம்மைத்தாமே திருத்திக்கொண்டு இல்வாழ்க்கையில் பற்று இல்லாதவர்கள், நீர் நிலையை விட்டுப் பறந்து போகிற அன்னப் பறவையைப்போல, இல்லறவாழ்க்கையை விட்டுப் போகிறார்கள். 91

3. பொருளாசையை விட்டு, உணவைக் கட்டுப்படுத்தி, குறியற்ற சூனியமான நிர்வாண மோக்ஷம் ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு இருப்பவருடைய அடிச்சுவடுகள், ஆகாயத்தில் பறக்கும் பறவைகளின் சுவடுகள் காணப்படாததுபோல, காணப்படா. 92

4. யஸ்ஸாஸவா பரிக்கிணா
ஆஹாரே ச அநிஸ்ஸிதோ
ஸுஞ்ஞதோ அநிமித்தோ ச
விமொக்கோ யஸ்ஸ கோசரோ
ஆகாஸே வ ஸகுந்தானங்
பதங் தஸ்ஸ துரங்நயங் 93

5. யஸ்ஸிந்த்ரியானி ஸமதங் கதானி
அஸ்ஸா யதா ஸாரதிநா ஸுதந்தா
பஹீணமானஸ்ஸ அனாஸவஸ்ஸ
தேவாபி தஸ்ஸ பிஹயந்தி தாதினோ

6. படவிஸமோ நோ விருஜ்ஜதி
இந்தகிலூபமோ தாதி ஸுப்பதோ
ரஹதோ'வ அபேதகத்தமோ
ஸங்ஸாரா ந பவந்தி தாதினோ 95

4. யார் ஆஸவங்களை* அழித்து விட்டாரோ, யார் உணவில் ஆசையற்றுக் குறியற்ற சூனியமான நிர்வாண மோக்ஷத்தில் நோக்கமாக இருக்கிறாரோ அவர் சென்ற பாதையின் அடிச்சுவடுகள், ஆகாயத்தில் பறந்து சென்ற பறவைகளின் பாதை அறியப்படாதது போன்று, அறியப்படா. 93

5. குதிரைப்பாகனால் குதிரைகள் அடக்கப்படுவதுபோன்று, தமது ஐம்புலன்களையும் அடக்கிச் சாந்தப்படுத்திய, குற்றங்களை நீக்கிய பெரியோரைத் தேவர்களும் உயர்வாக மதிக்கிறார்கள். 94

6. நிலத்தைப்போன்று பொறுமையும், வாயில் நிலைபோன்று உறுதியும், சேறு அற்ற ஆழமான குளத்தின் நீர் போன்று தூய்மையும் உள்ளவருக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை. 95

---

*ஆஸவங்கள் = நால்வகைக் குற்றங்கள். அவை 1. காமம் அல்லது சிற்றின்ப ஆசை. 2. பவம் (பிறப்பு) 3. திட்டி (பொய்க்காட்சி) 4. அவிச்சை (அறியாமை))

7. ஸந்தங் தஸ்ஸ மனங் ஹோதி
ஸந்தா வாசா ச கம்ம ச
ஸம்மதஞ்ஞா விமுத்தஸ்ஸ
உபஸந்தஸ்ஸ தாதினோ 96

8. அஸ்ஸத்தோ அகதஞ்ஞூ ச
ஸந்திச்சேதோ ச யோ நரோ
ஹதாவகாஸோ வந்தாஸோ
ஸ வே உத்தமபோரிஸோ 97

9. காமே வா யதி வா ரஞ்ஞே
நின்னே வா யதி வா தலே
யத்தாரஹந்தோ விஹரந்தி
தங் பூமிங் ராமணெய்யகங் 98

10. ரமணீயானி அரஞ்ஞானி
யத்த ந ரமதீ ஜனோ
வீதராகா ரமெஸ்ஸந்தி
ந தே காமகவேஸினோ 99

அரஹந்த-வக்கோ ஸத்தமோ

7. நற்காட்சியுடையவருடைய மனமும் வாக்கும் காயமும் அமைதியடைந்திருக்கின்றன. அவர் முற்றிலும் விடுதலையடைந்து முழுச்சாந்தியடைந்திருக்கிறார். 96

8. நற்காட்சியடைந்து, பிறப்பு இறப்பு என்னும் தளைகளை அறுத்து, பிறவா நிலையடைந்து, எல்லா ஆசைகளையும் அறுத்தவர் யாரோ அவர்தான் உண்மையான உத்தம புருஷன் ஆவர். 97

9. நாடாக இருந்தாலும் காடாக இருந்தாலும், மேட்டு நிலமாக இருந்தாலும், பள்ளமாக இருந்தாலும் அர்ஹந்தர் எங்கேயிருக்கிறாரோ அந்த இடம் இன்பகரமானது. 98

10. உலகவாழ்க்கையில் பற்றுள்ளவர்களுக்குக் காடானது இனிமை தருவதில்லை. ஆனால், ஆசைகளை அறுத்த பெரியோர் காடுகளில் இனிமை காண்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் இன்ப சுகங்களில் கருத்தைச் செலுத்துவதில்லை. 99

ஏழாவது அர்ஹந்தவர்க்கம்

ஸஹஸ்ஸ—வக்கோ

1. ஸஹஸ்ஸமபி சே காதா
அநத்தபத ஸங்ஹிதா
ஏகங் அத்தபதங் ஸெய்யோ
யங் ஸுத்வா உபஸம்மதி 100

2. ஸஹஸ்ஸமபி சே காதா
அநத்தபத ஸங்ஹிதா
ஏகங் காதாபதங் ஸெய்யோ
யங் ஸுத்வா உபஸம்மதி 101

3. யோ சே காதாஸதங் பாஸே
அனத்தபதஸங்ஹிதா
ஏகங் தம்மபதங் ஸேய்யோ
யங் ஸுத்வா உபஸம்மதி 102

4. யோ ஸஹஸ்ஸங் ஸஹஸ்ஸேன
ஸங்காமே மானுஸே ஜினே
ஏகஞ்ச ஜெய்ய அத்தானங்
ஸ வே ஸங்காமஜுத்தமோ 103

ஆயிர வர்க்கம்

1. பொருளற்ற ஆயிரம் வார்த்தைகளைவிட, மன அமைதியைத் தருகின்ற பொருள் நிறைந்த ஒரு வார்த்தை மேலானது. 100

2. மன அமைதியைத் தருகிற ஒரு செய்யுளானது பயனற்ற ஆயிரம் செய்யுளைவிட மேலானது. 101

3. பயனற்ற ஆயிரம் செய்யுட்களைப் படிப்பதைவிட, மன அமைதியைத் தருகிற ஒரு செய்யுளைப் படிப்பது மிக மேலானது. 102

4. பதினாயிரக்கணக்கான வீரர்களைப் போர்க்களத்திலே வென்றவர், தன்னைத்தானே அடக்கி வென்றவர் ஆகிய இரண்டு வீரர்களில், பின்னவரே பெரிய வீரர் ஆவார். 103

5. அத்தா ஹவே ஜிதங் ஸெய்யோ
யா சாயங் இதரா பஜா
அத்ததந்தஸ்ஸ போஸஸ்ஸ
நிச்சங் ஸஞ்ஞதசாரினோ 104

6. நேவ தேவோ, ந கந்தப்போ
ந மாரோ ஸஹ ப்ரம்ஹுனா
ஜிதங் அபஜிதங் கயிரா
ததாரூபஸ்ஸ ஜந்துனோ 105

7. மாஸே மாஸே ஸஹஸ்ஸேன
யோ யஜேத ஸதங் ஸமங்
ஏகஞ்ச பாவிதத்தானங்
முஹூத்தமபி பூஜயே
ஸா யேவ பூஜனா ஸெய்யோ
யஞ்சே வஸ்ஸஸதங் ஹூதங் 106

8. யோ சே வஸ்ஸஸதங் ஜந்து
அக்கிங் பரிசரே வனே
ஏகஞ்ச பாவிதத்தானங்
முஹூத்தமபி பூஜயே
ஸாயேவ பூஜனா ஸெய்யோ
யஞ்சே வஸ்ஸஸதங் ஹூதங் 107

5, 6. மற்றவர்களை வென்று அடக்குவதை விடத் தன்னைத்தானே வென்று அடக்குவது மேலானது. தம்மைத்தாமே வென்று அடக்கமாக இருப்பவரைத் தேவர்களும், கந்தர்வரும், மாரனும், பிரமனும் கூட வெல்லமுடியாது. 104, 105

7. மாதந்தோறும் ஆயிரக்கணக்கான யாகங்களை நூறுண்டுகள் வரையில் செய்தாலும், தம்மைத்தாமே வென்று அடக்கிய பெரியோரை ஒரு நிமிஷம் வழிபடுவதினால் உண்டாகும் பலன், அந்நூறுண்டுகளாகச் செய்த யாக பலனைவிட மேலானது. 106

8. ஒருவர் காட்டுக்குச் சென்று நூறுண்டுகளாக எக்கியத்தீயை வளர்த்து வந்தாலும் அவர், தன்னைத்தானே வென்று அடக்கிய பெரியார் ஒருவரை ஒரு நிமிஷம் வணங்குவார் ஆனால், அதன் பலன் நூறுண்டு செய்த எக்கிய பலனைவிட மேலானது. 107

9. யங் கிஞ்சி யிட்டங் வ ஹுதங் வ
[லோகே
ஸங்வச்சரங் யஜேத புஞ்ஞபேகோ
ஸப்பம்பி தங் ந சதுப்பாகமேதி
அபிவாதனு உஜ்ஜுகதேஸு ஸெய்யோ

10. அபிவாதனஸீலிஸ்ஸ
நிச்சங் வத்தாபசாயினோ
சத்தாரோ தம்மா வட்டந்தி
ஆயு வண்ணோ ஸுகங் பலங் 109

11. யோ சே வஸ்ஸஸதங் ஜீவே
துஸ்ஸீலோ அஸமாஹிதோ
ஏகாஹங் ஜீவிதங் ஸெய்யோ
ஸீலவந்தஸ்ஸ ஜாயினோ 110

12. யோ சே வஸ்ஸஸதங் ஜீவே
துப்பஞ்ஞோ அஸமாஹிதோ
ஏகாஹங் ஜீவிதங் ஸெய்யோ
பஞ்ஞாவந்தஸ்ஸ ஜாயினோ 111

9. இவ்வுலகில் புகழும் புண்ணியமும் பெறுதற் பொருட்டு ஒருவர் ஒரு ஆண்டு வரையில் செய்யும் யாக யாக்கிய பலனனது, ஞானியொருவரை வழிபடுவதனல் உண்டாகும் நன்மையில் கால்பாகத்துக்கும் ஈடாகாது.

10. ஞானத்தினுலும் வயதினுலும் மூத்த பெரியோர்களை எப்போதும் வணங்குகிறவர்களுக்கு ஆயுள், அழகு, இன்பம், ஆற்றல் ஆகிய நான்கும் உண்டாகின்றன. 109

11. ஒழுக்கங்களுடன் தியானத்தைச்செய்கின்ற ஒருவருடைய ஒரு நாள் வாழ்க்கையானது, ஒழுக்கங் கெட்ட, மனத்தையடக்காத ஒருவருடைய நூறு ஆண்டு வாழ்க்கையைவிட மேலானது. 110

12. மன அடக்கம் இல்லாத அஞ்ஞானமுடைய ஒருவருடைய நூறு ஆண்டு வாழ்க்கையைவிட, ஞானமும் தியானமும் உள்ள ஒருவருடைய ஒரு நாள் வாழ்க்கை மேன்மை யுடையது. 111

13. யோ சே வஸ்ஸஸதங் ஜீவே
குஸீதோ ஹீநவீரியோ
ஏகாஹங் ஜீவிதங் ஸெய்யோ
விரிய மாரபதோ தல்ஹங் 112

14. யோ சே வஸ்ஸஸதங் ஜீவே
அபஸ்ஸங் உதயவ்யயங்
ஏகாஹங் ஜீவிதங் ஸெய்யோ
பஸ்ஸதோ உதயவ்யயங் 113

15. யோ சே வஸ்ஸஸதங் ஜீவே
அபஸ்ஸங் அமதங் பதங்
ஏகாஹங் ஜீவிதங் ஸெய்யோ
பஸ்ஸதோ அமதங் பதங் 114

16. யோ சே வஸ்ஸஸதங் ஜீவே
அபஸ்ஸங்தம்மமுத்தமங்
ஏகாஹங்- ஜீவிதங் ஸெய்யோ
பஸ்ஸதோ தம்மமுத்தமங் 115

ஸஹஸ்ஸ-வக்கோ அட்டமோ

---

13. முயற்சி இல்லாமல் சோம்பலோடு இருக்கிற ஒருவருடைய நூறு ஆண்டு வாழ்க்கையைவிட, ஆற்றலோடும் ஊக்கத்தோடும் முயற்சி செய்கிற ஒருவருடைய ஒரு நாளைய வாழ்க்கை மேன்மையுடைத்து.

14. உலக இயற்கையில் நடைபெறுகிற ஆக்கம் அழிவுகளைக் காண்கிற ஒருவருடைய ஒருநாளைய வாழ்க்கையானது, அவைகளைக் காணாத ஒருவருடைய நூறு ஆண்டு வாழ்க்கையைவிட மேலானது. 113

15. பிறவா நிலையை (மோக்ஷத்தை)க் காண்கிற ஒருவருடைய ஒரு நாளைய வாழ்க்கையானது, அவைகளைக் காணாத ஒருவருடைய நூறாண்டு வாழ்க்கையைவிட மேன்மையானது. 114

16. உத்தம தர்மத்தை அறிந்த ஒருவருடைய ஒரு நாளைய வாழ்க்கையானது, அவ்வுத்தம தர்மத்தைக் காணாத ஒருவருடைய நூறு ஆண்டு வாழ்க்கையைவிட மேலானது. 115

எட்டாவது ஆயிர வர்க்கம்

பாப—வக்கோ

1. அபித்தரேத கல்யாணே
பாபா சித்தங் நிவாரயே
தந்தங் ஹி கரோதோ புஞ்ஞங்
பாபஸ்மிங் ரமதீ மனோ 116

2. பாபங் சே புரிஸோ கயிரா
ந தங் கயிரா புனப்புனங்
ந தம்ஹி சந்தங் கயிராத
துக்கோ பாபஸ்ஸ உச்சயோ 117

3. புஞ்ஞங் சே புரிஸோ கயிரா
கயிராதேதங் புனப்புனங்
ந தம்ஹி சந்தங் கயிராத
ஸுகோ புஞ்ஞஸ்ஸ உச்சயோ 118

4. பாபோ'பி பஸ்ஸதி பத்ரங்
யாவ பாபங் ந பச்சதி
யதா ச பச்சதி பாபங்
அத பாபோ பாபானி பஸ்ஸதி 119

பாப வர்க்கம்

1. நல்ல காரியங்களைச் செய்ய ஒருவர் விரைந்து முற்பட வேண்டும். தீய எண்ணங்களைத் தடுக்க வேண்டும். ஏனென்றால், புண்ணிய காரியங்களைச் செய்யத் தாமதப்பட்டால், மனம் தீய எண்ணங்களில் ஆசை கொள்கிறது. 116

2. பாவ காரியத்தைச் செய்ய நேர்ந்துவிட்டதானாலும் மீண்டும் மீண்டும் அப்பாவ காரியத்தையே செய்யாமல் இருப்பாராக; செய்ய விரும்பாமல் ஒழிவாராக. ஏனென்றால், பாவம் அதிகப்படுவதால் துக்கம் ஏற்படுகிறது. 117

3. புண்ணிய காரியத்தை ஒருவர் செய்வாரானால் மீண்டும் மீண்டும் அப்புண்ணியச்செயலைச் செய்வாராக; அதில் அவர் ஆசைகொள்வாராக. ஏனென்றால், புண்ணியங்கள் அதிகப்படுவதால் இன்பம் உண்டாகிறது. 118

4. பாவங்களைச் செய்கிறவர், தாம் செய்த பாவம் முதிர்ச்சியடையாதவரையில் சந்தோஷத்தை அனுபவிக்கிறார். ஆனால், பாவங்கள் முதிர்ந்து பயனைத் தரும்போது துன்பங்களை அனுபவிக்கிறார். 119

5. பத்ரோபி பஸ்ஸதி பாபங்
யாவ பத்ரங் ந பச்சதி
யதா ச பச்சதி பத்ரங்
அத பத்ரோ பத்ராணி பஸ்ஸதி 120

6. மா' பமஞ்ஞேத பாபஸ்ஸ
ந மங் தங் ஆகமிஸ்ஸதி
உதபிந்து நிபாதேன
உதகும்போ'பி பூரதி
பூரதி பாலோ பாபஸ்ஸ
தோகதோகம்பி ஆசினங் 121

7. மா பமஞ்ஞேத புஞ்ஞஸ்ஸ
ந மங் தங் ஆகமிஸ்ஸதி
உதபிந்து நிபாதேன
உதகும்போ'பி பூரதி
பூரதி தீரோ புஞ்ஞஸ்ஸ
தோகதோகம்பி ஆசினங் 122

8. வாணிஜோ'வ பயங் மக்கங்
அப்ப ஸத்தோ மஹத்தனோ
விஸங் ஜீவிதுகாமோ வ
பாபானி பரிவஜ்ஜயே 123

5. புண்ணியங்களைச் செய்கிறவர், தாம் செய்யும் புண்ணிய காரியங்கள் முதிர்ச்சியடையாதவரையில் துன்பங்களை அனுபவிக்கிறார். ஆனால், புண்ணியங்கள் முதிர்ந்து பலன் தரும்போது இன்பங்களைக் காண்கிறார். 120

6. "அது என்னை அணுகாது" என்று தீய காரியத்தைப்பற்றி எளிதாக நினைக்கவேண்டாம். நீர், துளித்துளியாகச் சொட்டினாலும் முடிவில் குடம் நிறைந்து விடுகிறது. ஆகவே, மூடர்கள் சிறிது சிறிதாகத் தீமைகளைத் தேடிக் கொள்கிறார்கள். 121

7. "அது என்னிடம் வராது" என்று புண்ணிய காரியத்தைப் பற்றி அற்பமாக நினைக்க வேண்டாம். நீர், துளித்துளியாகச் சொட்டினாலும் நீர்க் குடம் நிறைந்து விடுகிறது. ஆகையால், அறிவாளி சிறிது சிறிதாகப் புண்ணியத்தைத் தேடி நிறப்பிக் கொள்கிறார். 122

8. சொற்ப சாத்துடன் பெரும் பொருளைக் கொண்டு செல்லுகிற வாணிகன், அச்சமுள்ள வழியை விட்டு விலகி நல்லவழியிலே செல்லுவது போலவும், உயிர் வாழ விரும்புவோர் நஞ்சை உண்ணாமல் விலக்குவது போலவும், பாபச் செயலைவிட்டு விலகுங்கள். 123

9\. பாணிம்ஹி சே வணோ நாஸ்ஸ
ஹரெய்ய பாணிநா விஸங்
நாப்பணங் விஸமந்வேதி
நத்தி பாபங் அகுப்பதோ 124

10\. யோ அப்பதுட்டஸ்ஸ நரஸ்ஸ
துஸ்ஸதி
ஸுத்தஸ்ஸ போஸஸ்ஸ அநங்கணஸ்ஸ
தமேவ பாலங் பச்சேதி பாபங்
ஸுகுமோ ரஜோ படிவாதங்'வ
கித்தோ 125

11\. கப்பமேகே' படஜ்ஜந்தி
நிரயங் பாபகம்மிநோ
ஸக்கங் ஸுகதிநோ யந்தி
பரிநிப்பந்தி அநாஸவா 126

12\. ந அந்தலிக்கே ந ஸமுத்தமஜ்ஜே
ந பப்பதானங் விவரங் பவிஸ்ஸ
ந விஜ்ஜதி ஸோ ஜகதிப்பதேஸோ
யத்தட்டிதோ முச்செய்ய பாபகம்மா

9. கையில் புண் இல்லையானால் அதில் நஞ்சினை எடுக்கலாம். புண் இல்லாத கையை நஞ்சு தாக்காது. தீய காரியத்தைச் செய்யாதவரை பாபம் ஒன்றும் செய்யாது. 124

10. தீங்கில்லாத, குற்றமற்ற, தூய நல்லவரைத் துன்புறுத்துகிற மூடன் மேலே, காற்றுக்கு எதிராகத் தூற்றப்பட்ட தூசியைப் போன்று, பாபம் விழுந்து படிகிறது. 125

11. சிலர் கருவில் தங்கி பிறக்கிறார்கள். பாபிகள் நரகத்தில் பிறக்கிறார்கள். நல்லவர் சுவர்க்கம் செல்லுகிறார்கள். பற்றற்றோர் நிர்வாண மோக்ஷம் அடைகிறார்கள் 126

12. பாபம் செய்தவர் அவ்வினைப்பயனிலிருந்து தப்பித்துக்கொள்ள, இவ்வுலகத்திலும் விண்ணிலும் இடம் இல்லை; கடலின் நடுவிலும் இடம் இல்லை; மலைக் குகைகளிலும் இடம் இல்லை. 127

13. ந அந்தலிக்கே ந ஸமுத்தமஜ்ஜே
ந பப்பதானங் விவரங் பவிஸ்ஸ
ந விஜ்ஜதி ஸோ ஜகதிப்பதேஸோ
யத்தட்டிதங் நப்பஸஹேத மச்சு 128

பாப-வக்கோ நவமோ

13. சாவை வராமல் தடுக்க இவ்வுலகத்திலே, ஆகாயத்திலாயினும், கடலின் நடுவிலாயினும், மலைக் குகைகளிலாயினும் ஒளிய இடம் இல்லை. 128

ஒன்பதாவது பாப வர்க்கம்

தண்ட—வக்கோ

1. ஸப்பே தஸந்தி தண்டஸ்ஸ
ஸப்பே பாயந்தி மச்சுனோ
அத்தானங் உபமங் கத்வா
ந ஹனெய்ய ந காதயே 129

2. ஸப்பே தஸந்தி தண்டஸ்ஸ
ஸப்பேஸங் ஜீவிதங் பியங்
அத்தானங் உபமங் கத்வா
ந ஹனெய்ய ந காதயே 130

3. ஸுககாமானி பூதானி
யோ தண்டேன விஹிங்ஸதி
அத்தனோ ஸுகமேஸானோ
பெச்ச ஸோ ந லபதே ஸுகங் 131

4. ஸுககாமானி பூதானி
யோ தண்டேன ந ஹிங்ஸதி
அத்தனோ ஸுகமேஸானோ
பெச்ச ஸோ லபதே ஸுகங் 132

தண்ட வர்க்கம்

1. எல்லோரும் தண்டனைக்கு அஞ்சுகிறார்கள் எல்லோரும் மரணத்தை அஞ்சுகிறார்கள். மற்ற உயிர்களையும் தம்முயிர் போலவே கருதி, கொல்லாமலும் கொலைக்கு உடன்படாமலும் இருப்பாராக. 129

2. எல்லோரும் தண்டனைக்கு அஞ்சுகிறார்கள். எல்லோருக்கும் வாழ்க்கை இனிமையானது. மற்ற உயிர்களையும் உன் உயிரோடு ஒப்பிட்டு நோக்கி ஒன்றையும் கொல்லாதே; கொல்விக்கவும் உடன்படாதே.

3. இன்பமாக வாழ விரும்புகிற உயிர்களை ஒருவர், தன் சுகத்தை மட்டும் விரும்பித் தண்டித்துத் துன்புறுத்தினால், அப்படிப்பட்டவர் இறந்த பிறகு சுகம் பெற மாட்டார். 131

4. சுகமாயிருக்க விரும்புகிற ஏனைய உயிர்களை ஒருவர், தம்முடைய சொந்த சுகத்தின் பொருட்டு, தண்டித்துத் துன்புறுத்தாது இருப்பாரானால், அவர் இறந்த பிறகும் சந்தோஷத்தை அடைகிறார். 132

5. மாவோச பருஸங் கஞ்சி
வுத்தா படிவதெய்யு தங்
துக்கா ஹி ஸாரம்பகதா
படிதண்டா புஸெய்யு தங் 133

6. ஸ சே நேரேஸி அத்தாநங்
கங்ஸோ உபஹதோ யதா
ஏஸ பத்தோஸி நிப்பாணங்
ஸாரம்போ தே ந விஜ்ஜதி 134

7. யதா தண்டேன கோபாலோ
காவோ பாசேதி கோசரங்
ஏவங் ஜரா ச மச்சு ச
ஆயுங் பாசெந்தி பாணிநங் 135

8. அத பாபானி கம்மானி
கரங் பாலோ ந புஜ்ஜதி
ஸேஹி கம்மேஹி தும்மேதோ
அக்கிதட்டோ'வ தப்பதி 136

9. யோ தண்டேன அதண்டேஸு
அப்பதுட்டேஸு துஸ்ஸதி
தஸந்நமஞ்ஞதரங் டானங்
கிப்பமேவ நிகச்சதி 137

5. யாரிடத்திலும் கடுஞ்சொற்களைப் பேசாதே. கடுஞ்சொல் பேசியவர் கடுஞ்சொற்களால் தாக்கப்படுவர்; சுடு சொற்கள், உண்மையாகவே, துன்பந்தருகின்றன. அடிக்கு அடி திருப்பி அடிக்கப்படும். 133

6. உடையுண்ட வெண்கலமணி ஓசையற்றிருப்பது போல, நீ உன்னை அடக்கிக்கொண்டால், நிர்வாண மோக்ஷத்தை அடைந்தவன் ஆவாய். ஏனென்றால் வினைசெய்யும் தன்மை உன்னிடம் இல்லை. 134

7. இடையன் கோல்கொண்டு ஆனிரைகளைப் புற்றரைக்கு ஓட்டுவதுபோல, நரைதிரையும் சாக்காடும் மனித ஆயுளை ஓட்டுகின்றன. 135

8. ஆயினும் மூடன், தான் செய்யும் காரியத்தின் தன்மையை உணராமலே, தீயகாரியங்களைச் செய்கிறான். தன்னைத்தானே எரித்துக் கொள்வதுபோல, அவன் தன் செய்கையாலேயே துக்கத்தினால் எரிக்கப்படுகிறான். 136

9. தீமையற்றவரும் சாத்வீகமாக உள்ளவரும் ஆகிய நல்லவரைத் தண்டித்துத் துன்புறுத்துகிறவர்கள், இந்தப் பத்து நிலைகளை அடைவார்கள்:— 137

10. வேதனங் பருஸங் ஜானிங்
ஸரீரஸ்ஸ ச பேதநங்
கருகங் வா பி ஆபாதங்
சித்தக்கேபங்'வ பாபுணே 138

11. ராஜதோ வா உபஸ்ஸக்கங்
அப்பக்கானங் வ தாருணங்
பரிக்கயங் வ ஞாதீனங்
போகானங் வ பகங்குரங் 139

12. அதவாஸ்ஸ அகாரானி
அக்கி டஹதி பாவகோ
காயஸ்ஸ பேதா துப்பஞ்ஞோ
நிரயங் ஸோ'பபஜ்ஜதி 140

13. ந நக்கசரியா ந ஜடா ந பங்கா
நாநாஸிகா தண்டிலஸாயிகா வா
ராஜோ ச ஜல்லங் உக்குடிகப்பதானங்
ஸோதெந்தி மச்சங் அவிதிண்ணகங்கங்

10. அவர்கள் மிக்க வேதனையையாவது, நஷ்டத்தையாவது, தேகத் துன்பத்தையாவது, துன்பத்தைத்தரும் நோயையாவது, மனமாறுட்டத்தையாவது;

11. அரச தண்டனையையாவது, சுடுவது போன்ற நிந்தனையையாவது, சுற்றத்தாரை இழந்துவிடுவதையாவது, பொருள் அழிவையாவது; 139

12. தீப்பிடித்து வீடு எரிந்து போவதையாவது ஆகியவற்றை அடையப் பெறுவார்கள். மேலும் இறந்த பின்னர் அவர்கள் நரகத்தில் சென்று பிறப்பார்கள். 140

13. அம்மணமாகத் திரிந்தாலும், சடைத்தலையாக இருந்தாலும், அழுக்குடம்புடன் இருந்தாலும், பட்டினி நோன்பு நோற்றாலும், வெற்றுத்தரையில் படுத்தாலும், அழுக்கிலும் தூசியிலும் புரண்டாலும், காலில் நின்று தவம் செய்தாலும், இவர்கள் தமது ஐயங்களை நீக்கிக்கொள்ளாதவராயிருந்தால், இவை யாவும் அவரைத் தூய்மைப்படுத்தமாட்டா. 141

14. அலங்கதோ சேபி ஸமங் சரெய்ய
ஸந்தோ தந்தோ நியதோ ப்ரஹ்மசாரீ
ஸப்பேஸு பூதேஸு நிதாய தண்டங்
ஸோ ப்ராஹ்மணோ ஸோ ஸமணோ
[ஸ பிக்கு 142

15. ஹிரீ நிஸேதோ புரிஸோ
கோசி லோகஸ்மிங் விஜ்ஜதி
யோ நிந்தங் அப்பபோததி
அஸ்ஸோ பத்ரோ கஸாமிவ 143

16. அஸ்ஸோ யதா பத்ரோ கஸா
[நிவிட்டோ
அதாபினோ ஸங்வகினோ பவாத
ஸத்தாய ஸீலேந ச விரியேண ச
ஸம்பன்னவிஜ்ஜாசரணா பதிஸ்ஸதா
பஹஸ்ஸத துக்கமிதங் அநப்பகங் 144

14. நல்லுடை உடுத்தியவராக இருந்தாலும், (உடம்பை வருத்தித் தவம் செய்யாமல் இருந்தாலும்) அவர், சாந்தமும் அமைதியும் அடக்கமும், தூய்மையும் உடையவராய், உயிர்களைத் துன்புறுத்தாமல் இருப்பாரானல், அவரே பிராமணர்§ ஆவார்; அவரே சமணர்† ஆவார்; பிக்கு‡ ஆவார். 142

15. நன்கு வளர்க்கப்பட்ட குதிரையானது தன் மீது குறடா அடிவிழாதபடி நடந்து கொள்வது போல, பழி பாவங்களுக்கு அஞ்சி நிந்தனைக்கு நாணி நல்வழியில் ஒழுகுவோர் மிகச்சிலர். 143

16. குறடாவினல் அடியுண்ட நல்ல குதிரையைப் போன்று, உற்சாகமாகவும் குற்றத்தைத் திருத்திக் கொள்பவனுகவும் இரு. மன உறுதியினுலும், தர்மத்தை ஆராய்வதினுலும், ஞானம் ஒழுக்கங்களை உடைமையினுலும், விழிப்புடன் இருப்பதினுலும் அளவற்ற துக்கங்களைப் போக்குவாயாக. 144

---

§ தீமைகளை விலக்கினவர் பிராமணர்.

† தீமைகளை வரவொட்டாமல் தடுத்தவர் சமணர்.

‡ தீமைகளை நீக்கியும் தடுத்தும், ஒழித்தும் விட்டவர் பிக்கு.

17\. உத்தகங் ஹி நயந்தி நெத்திகா
உஸுகாரா நமயந்தி தேஜநங்
தாருங் நமயந்தி தச்சகா
அத்தானங் தமயந்தி ஸுப்பதா 145

தண்ட-வக்கோ தஸமோ

17. நீர்ப் பாசனக்காரர் நீரைச் செலுத்துகிறார்கள்; அம்புகளைச்செய்வோர் அம்புகளை அமைக்கிறார்கள்; தச்சர் மரங்களை வளைக்கிறார்கள். நல்லவர்கள் தம்மைத் தாமே அடக்குகிறார்கள். 145

பத்தாவது தண்டவர்க்கம்.

ஜரா—வக்கோ

1. கோ நு ஹாஸோ கிமானந்தோ
நிச்சங் பஜ்ஜலிதே ஸதி
அந்தகாரேன ஓனத்தா
பதீபங் ந கவெஸ்ஸத 146

2. பஸ்ஸ சித்தகதங் பிம்பங்
அருகாயங் ஸமுட்டிதங்
ஆதுரங் பஹூஸங்கப்பங்
யஸ்ஸ நத்தி துவங் டிதி 147

3. பரிஜிண்ணமிதங் ரூபங்
ரோக நிட்டங் பபங்குரங்
பிஜ்ஜதி பூதிஸந்தேஹோ
மரணந்தங் ஹி ஜீவிதங் 148

4. யானிமானி அபத்தானி
அலாபூனேவ ஸாரதே
காபோதகானி அட்டீனி
தானி திஸ்வான கா ரதி? 149

*ஜரா வர்க்கம்

1. உலகம் பற்றி எரிகிறபோது களிப்பும் சிரிப்பும் என்ன இருக்கிறது? இருளினால் சூழப்பட்டிருக்கிற நீ ஏன் வெளிச்சத்தை நாடக்கூடாது? 146

2. அலங்கரிக்கப்பட்ட இந்த உடம்பைப் பார்; நிலைத்து நிற்காததும், நோய்க்கு இடமாக உள்ளதும், (எலும்புகளால்) குவிக்கப்பட்டதும், புண்ணுள்ளதும் ஆன, வெகுவாக (நல்லதென்றும் இனியதென்றும்) கருதப்படுகிற இந்த உடம்பைப்பார். 147

3. இந்தத் தேகம் தேயும் தன்மையுள்ளது; நோய்க்கிடமானது; அழிவையுடையது; அசுத்தமான இந்த உடல் அழிந்துவிடுகிறது. மனிதவாழ்க்கை சாவினால் முடிவடைகிறது. 148

4. புறா நிறமுள்ள எலும்புகள் வேனிற்காலத்தில் புறத்தே எறியப்படுகிற சுரைக் காயைப் போன்றன. இவற்றைக் காணும்போது உனக்கு என்ன சந்தோஷம் இருக்கிறது? 149

---

*ஜரை = மூப்பு.

5. அட்டீநங் நகரங் கதங்
மங்ஸலோஹித லேபனங்
யத்த ஜரா ச மச்சு ச
மானோ மக்கோ ச ஓஹிதோ 150

6. ஜீரந்தி வே ராஜரதா ஸுசித்தா
அதோ ஸரீரம்பி ஜரங் உபேதி
ஸதஞ்ச தம்மோ ந ஜரங் உபேதி
ஸந்தோ ஹவே ஸப்பி பவேதயந்தி

7. அப்பஸ்ஸுதாயங் புரிஸோ
பலிவத்தோ’வ ஜீரதி
மங்ஸானி தஸ்ஸ வட்டந்தி
பஞ்ஞா தஸ்ஸ ந வட்டதி 152

8. அநேகஜாதி ஸங்ஸாரங்
ஸந்தாவிஸ்ஸங் அநிப்பிஸங்
கஹகாரகங் கவேஸந்தோ
துக்கா ஜாதி புனப்புனங் 153

5. இந்த நகரம் எலும்பினுல் கட்டப்பட்டு தசையினுலும் இரத்தத்தினுலும் பூசப்பெற்றுள்ளது. இதில், நரைதிரையும், சாக்காடும், அகங்காரமும், கபடமும் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. 150

6. அரசனுடைய அலங்காரம் செய்யப்பட்ட தேரும் அழிந்துவிடுகிறது. அது போல உடம்பும் நரை திரை மூப்புக்களையுடையது. ஆனுல், நல்ல தர்மம் ஒருபோதும் அழிகிறதில்லை. நல்லவர், நல்லவர்களுக்கு இதனைப் போதிக்கிருர்கள். 151

7. கல்வி அறிவு இல்லாத ஆள் எருதைப் போன்று வளர்கிறுன். அவனுடைய சதை வளர்கிறது; ஆனுல், அவன் அறிவு வளரவில்லை. 152

8. இந்த வீட்டை (உடம்பை)க் கட்டுகிற கொல்லனைத்தேடித் தேடி வீணுக அனேக பிறப்புக்களில் அலைந்தேன். சம்சாரம் (பிறப்பு இறப்பு) எப்போதும் துன்பமுடையது. 153

9. கஹகாரக! திட்டோ’ஸி
புன கேஹங் ந காஹஸி
ஸப்பா தே பாஸுகா பக்கா
கஹகூடங் விஸங்கிதங்
விஸங்காரகதங் சித்தங்
தண்ஹாநங் கயமஜ்ஜகா 154

10. அசரித்வா ப்ரஹ்மசரியங்
அலத்தா யொப்பனே தனங்
ஜிண்ணகொஞ்சா’வ ஜாயந்தி
கிணமச்சே’வ பல்லலே 155

11. அசரித்வா ப்ரஹ்மசரியங்
அலத்தா யொப்பனே தனங்
ஸெந்தி சாபாதிகிணெ’வ
புராணநி அநுத்துநங் 156

ஜரா-வக்கோ ஏகாதஸமோ

9. ஓ! வீட்டைக் கட்டும் கொல்லனே! நீ கண்டு பிடிக்கப்பட்டாய். உன்னுடைய, கூரையின் மோட்டு விளிம்பு உடைத்துவிட்டன. வலிச்சல்கள் தூளாக்கப் பட்டன. கட்டப்படாததற்கு, விடுபட்டதற்கு (வீட்டிற்கு, நிர்வாண மோக்ஷத்திற்கு) என்னுடைய மனம் செல்கிறது. ஆசை அறுக்கப்பட்டது. 154

10. இளமையிலேயே தூய வாழ்க்கையை மேற்கொண்டு ஒழுகாதவரும் செல்வத்தைத் தேடிக்கொள்ளாதவரும் (தமது முதுமையில்), மீனில்லாத குளத்தில் இரை தேடி காத்திருக்கும் கிழக்கொக்கைப்போலச் சோர்ந்து அழிவர். 155

11. இளமையிலேயே தூயவாழ்க்கை கொள்ளாதவரும், செல்வப்பொருளைத் தேடிக்கொள்ளாதவரும், தமது முதுமையில், சிதைந்துபோன வில்லைப் போன்று, கடந்துபோன காலத்தை எண்ணி எண்ணிக் கிடப்பார்கள். 156

பதினொன்றாவது ஜராவர்க்கம்

———

அத்த—வக்கோ

1\. அத்தானங் சே பியங் ஜஞ்ஞா
ரக்கெய்ய நங் ஸுரக்கிதங்
திண்ணமஞ்ஞதரங் யாமங்
படிஜக்கெய்ய பண்டிதோ 157

2\. அத்தானமேவ படமங்
பதிரூபே நிவேஸயே
அதஞ்ஞமநுஸாஸெய்ய
ந கிலிஸ்ஸெய்ய பண்டிதோ 158

3\. அத்தானங் சே ததா கயிரா
யதஞ்ஞ மநுஸாஸதி
ஸுதந்தோ வத தம்மேத
அத்தா ஹி கிர துத்தமோ 159

4\. அத்தா ஹி அத்தனோ நாதோ
கோ ஹி நாதோ பரோ ஸியா?
அத்தன’வ ஸுதந்தேன
நாதங் லபதி துல்லபங் 160

அத்த வர்க்கம்

1. தம்மை நேசிக்கிறவர் தம்மைத்தாமே காத்துக் கொள்ளக்கடவர். அறிவாளி, மூன்று யாமத்திலும் தம்மைத்தாமே காத்துக்கொள்ளவேண்டும். 157

2. ஒருவர் முதலில் தம்மை நல்வழியில் நிறுத்திக்கொள்ளவேண்டும். பிறகுதான் மற்றவர்களுக்கு உபதேசிக்கவேண்டும். இத்தகைய ஆள் நிந்திக்கப்படமாட்டார். 158

3. மற்றவர்களுக்கு உபதேசிக்கிற காரியத்தை, உபதேசிப்பவர் தாமே செய்கையில் செய்து காட்டக்கடவர்; முதலில் தம்மை ஒழுக்கத்தில் நிறுத்திக்கொண்டு பிறகு மற்றவரை நிறுத்தட்டும். ஏனென்றால், தன்னை அடக்கி நடப்பது கடினமானது. 159

4. நீயே உனக்குத் தலைவன். உன்னையன்றி வேறு யார்தான் உனக்குத் தலைவராகக்கூடும்? ஒருவர் தம்மைத் தாமே அடக்கி ஒழுகக்கற்றுக் கொண்டால் அவர் பெறுதற்கரிய தலைவரைப் பெற்றவராவார். 160

5. அத்தனா'வ கதங் பாபங்
அத்தஜங் அத்தஸம்பவங்
அபிமந்ததி தும்மேதங்
வஜிரங் வஸ்மமயங் மணிங் 161

6. யஸ்ஸ அச்சந்ததுஸ்ஸீல்யங்
மாலுவா ஸாலமிவொத்ததங்
கரோதி ஸோ ததத்தானங்
யதா நங் இச்சதீ திஸோ 162

7. ஸுகரானி அஸாதூனி
அத்தனோ அஹிதானி ச
யங் வே ஹிதங் ச ஸாதுங் ச
தங் வே பரமதுக்கரங் 163

8. யோ ஸாஸனங் அரஹதங்
அரியானங் தம்மஜீவினங்
படிக்கோஸதி தும்மேதோ
திட்டிங் நிஸ்ஸாய பாபிகங்
பலானி கட்டகஸ்ஸேவ
அத்தகஞ்ஞாய பல்லதி 164

5. பாவம் உன்னிடத்திலே தோன்றி உன்னுலேயே செய்யப்படுகிறது. அறுக்க முடியாத மணிகளை வைரமணி அறுப்பது போல, மூடர்களைப் பாவம் அறுக்கிறது. 161

6. சால மரத்தின் மீது மாலுவகொடி படர்வது போல, ஒருவருடைய தீய ஒழுக்கமானது அவர் மீது படர்கிறது. அவர் தன்னுடைய பகைவர் தனக்குச் செய்ய நினைக்கும் தீமைகளைத் தானே செய்துகொள்ளுகிறுர். 162

7. ஆக்கத்தைத் தராததும் தீமையைப் பயப்பனவும் ஆகிய செயல்களைச் செய்வது எளிது. நன்மையைத் தருகிற நல்ல காரியங்களைச் செய்வது மிக்க அரிது. 163

8. மூடனானவன் மூடக்கொள்கையுடையவனுக இருப்பதனுலே, மேலோரால் காட்டப்படுகிற நல்ல நீதியான போதனைகளை வெறுத்து ஒதுக்கி, கட்டகச் செடியானது தனது பூவினுலே தன்னை அழித்துக் கொல்வதுபோல, தன்னைத்தானே அழித்துக்கொள்கிறுன். 164

9. அத்தனா'வ கதங் பாபங்
அத்தனா ஸங்கிலிஸ்ஸதி
அத்தனா அகதங் பாபங்
அத்தனா'வ விஸுஜ்ஜதி
ஸுத்தி அஸுத்தி பச்சத்தங்
நாஞ்ஞோ அஞ்ஞங் விஸோதயே 165

10. அத்ததத்தங் பரத்தேன
பஹுனாபி ந ஹாபயே
அத்ததத்தமபிஞ்ஞாய
ஸதத்தபஸுதோ ஸியா 166

அத்த-வக்கோ த்வாதஸமோ

---

9. உன்னாலேயே பாபம் செய்யப்படுகிறது; உன்னையே அது அசுத்தப்படுத்துகிறது. பாவம் செய்யாமலிருப்பவர் தன்னைத்தானே சுத்தம் செய்துகொள்கிறார். பாபமும் புண்ணியமும் உன்னாலேயே செய்யப்படுகின்றன. ஒருவர் இன்னொருவரைச் சுத்தம் செய்யமுடியாது. 165

10. பிறர் எத்தகைய பெரியவராக இருந்தாலும், அவர் நன்மையின் பொருட்டு மற்றவர் தமது சொந்த நன்மைகளை விட்டுவிடக்கூடாது. தனது சொந்த நன்மை இன்னதென்பதைத் தெரிந்துகொண்ட பிறகு அதனை நன்கு செய்க. 166

பன்னிரண்டாவது அத்தவர்க்கம்

லோக—வக்கோ

1. ஹீனங் தம்மங் ந ஸேவெய்ய
பமாதேன ந ஸங்வஸே
மிச்சா திட்டிங் ந ஸேவெய்ய
ந ஸியா லோகவத்தனோ 167

2. உத்திட்டே நப்பமஜ்ஜெய்ய
தம்மங் ஸுசரிதங் சரே
தம்மசாரீ ஸுகங் ஸேதி
அஸ்மிங் லோகே பரம்ஹி ச 168

3. தம்மங் சரே ஸுசரிதங்
ந நங் துச்சரிதங் சரே
தம்மசாரீ ஸுகங் ஸேதி
அஸ்மிங் லோகே பரம்ஹி ச 169

4. யதா புப்புலகங் பஸ்ஸே
யதா பஸ்ஸே மரீசிகங்
ஏவங் லோகங் அவெக்கந்தங்
மச்சுராஜா ந பஸ்ஸதி 170

லோக வர்க்கம்

1. இழிவான காரியத்தைச் செய்யாதே. அசட்டையாயிராதே. தவறான கொள்கையைக் கொள்ளாதே. உலகவளர்ச்சியை (மீண்டும் மீண்டும் பிறப்பதை) வளர்த்துக் கொள்ளாதே. 167

2. அசட்டையாயில்லாமல் விழிப்பாக இரு. தர்மத்தை முழுவதும் கைக்கொண்டு ஒழுகு. தர்மப்படி நடக்கிறவர்கள் அவ்வுலகத்திலும் இவ்வுலகத்திலும் சுகம் அடைகிறார்கள். 168

3. தர்மத்தை நல்வழியில் செலுத்தி நட; தீய வழியில் செலுத்தி நடக்காதே. தர்ம வழியில் ஒழுகுபவர், இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் சுகம் அடைகிறார்கள். 169

4. இவ்வுலக வாழ்க்கையை, நீரில் குமிழி போன்றும், கானல் நீரைப்போன்றும் காண்கிறவர் யாரோ அவரை, யமராஜன் காணமாட்டான். 170

5. ஏத பஸ்ஸதிமங் லோகங்
சித்தங் ராஜரதூபமங்
யத்த பாலா விஸீதந்தி
நத்தி ஸங்கோ விஜானதங் 171

6. யோ ச புப்பே பமஜ்ஜித்வா
பச்சா யோ நப்பமஜ்ஜதி
ஸோ இமங் லோகங் பபாஸேதி
அப்பா முத்தோ'வ சந்திமா 172

7. யஸ்ஸ பாபங் கதங் கம்மங்
குஸலேன பிதீயதி
ஸோ இமங் லோகங் பபாஸேதி
அப்பா முத்தோ'வ சந்திமா 173

8. அந்தபூதோ அயங் லோகோ
தநுகெத்த விபஸ்ஸதி
ஸகுந்தோ ஜாலமுத்தோ'வ
அப்போ ஸக்காய கச்சதி 174

5. அரசருடைய அலங்கரிக்கப்பட்ட தேரைப் போன்று இருக்கிற இந்த உலகத்தைப் (உடம்பை) பாருங்கள். மூடர்கள் இதில் பற்றுக்கொண்டு அமிழ்ந்து விடுகிறார்கள். ஆனால், அறிஞர்கள் இதில் பற்றுக் கொள்வதில்லை. 171

6. முன்பு அசட்டையாக இருந்து, பிறகு விழிப் படைந்து முயற்சியோடிருப்பவர், மேகத்தில் மறை யுண்டிருந்த வெண்ணிலா, அதை விட்டு வெளிப்பட் டதைப்போன்று, பிரகாசிக்கிறார். 172

7. தீய செயல்களை நல்ல செயல்களினாலே மறைத்துவிட்ட ஒருவர், மேகத்திலிருந்து வெளிப் பட்ட வெண்ணிலாவைப்போல விளங்குகிறார். 173

8. இவ்வுலகம் இருள் அடைந்தது, இதன் உண்மை இயல்பைக் காண்கிறவர் மிகச் சிலர். வலையில் அகப்பட்ட பறவை அதிலிருந்து தப்பித்துக் கொள்வதுபோல, சிலர் மட்டும் இதிலிருந்து தப்பித் துக்கொள்கிறார்கள். 174

9. ஹங்ஸாதிச்சபதே யந்தி
ஆகாஸே யந்தி இத்தியா
நிய்யந்தி தீரா லோகம்ஹா
ஜெத்வா மாரங் ஸவாஹிநிங் 175

10. ஏகங் தம்மங் அதீதஸ்ஸ
முஸாவாதிஸ்ஸ ஜந்துநோ
விதிண்ண பரலோகஸ்ஸ
நத்தி பாபங் அகாரியங் 176

11. ந வே கதரியா தேவலோகங் வஜந்தி
பாலா ஹவே நப்பஸங்ஸந்தி தானங்
தீரோ ச தானங் அநுமோதமானோ
தேநேவ ஸோ ஹோதி ஸுகீ பரத்த

12. பதவ்யா ஏகரஜ்ஜேன
ஸக்கஸ்ஸ கமனேனவா
ஸப்பலோகாதி பச்சேன
ஸோதாபத்திபலங் வரங் 178

லோக-வக்கோ தேரஸமோ

9. அன்னப்பறவைகள் வானத்தில் பறக்கின்றன. இத்தி (சித்தி) அடைந்தவர் ஆகாயத்தில் பறக்கிறார்கள். தீயவனான மாரனை அவனுடைய படையோடு வென்ற தீரர்கள் உலகத்தைக் கடந்து நிர்வாண மோக்ஷத்தை அடைகிறார்கள். 175

10. ஒப்பற்ற தர்மத்தை இகழ்ந்து ஒதுக்கிவிட்டு, பொய்யையே பேசிக்கொண்டு, பரலோகத்தைப் பற்றிச் சிந்திக்காமல் இருக்கிற பாவத்தைப் போன்று வேறு பாவச்செயல் கிடையாது. 176

11. கருமிகள் தேவலோகத்தை அடைகிறது இல்லை. மூடர்கள் தானதர்மத்தைப் புகழ்வதில்லை, ஆனால், தீரர்களான அறிவாளிகள் தானதர்மங்களைப் புகழ்ந்து செய்கிறபடியினாலே இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் சுகம் பெறுகிறார்கள். 177

12. ஸோதாபத்திபலம் அடைந்தவர்கள், அரச பதவியைவிட, உலகங்களை ஆளும் சக்கரவர்த்தி பதவியைவிட, சுவர்க்க பதவியைவிட, மேலான பதவியை அடைகிறார்கள். 178

பதின்மூன்றாவது லோகவர்க்கம்

புத்த—வக்கோ

1. யஸ்ஸ ஜிதங் நாவஜீயதி
ஜிதமஸ்ஸ நோ யாதி கோசி லோகே
தம்புத்தமனந்தகோசரங்
அபதங் கேன பதேன நெஸ்ஸத? 179

2. யஸ்ஸ ஜாலினீ விஸத்திகா
தண்ஹா நத்தி குஹிஞ்சி நேதவே
தம்புத்தமனந்தகோசரங்
அபதங் கேன பதேன நெஸ்ஸத? 180

3. யே ஜானபஸுதா தீரா
நெக்கம்மூபஸமே ரதா
தேவா'பி தேஸங் பிஹயந்தி
ஸம்புத்தானங் ஸதீமதங் 181

4. கிச்சோ மநுஸ்ஸபடிலாபோ
கிச்சங் மச்சானஜீவிதங்
கிச்சங் ஸத்தம்மஸவணங்
கிச்சோ புத்தானங் உப்பாதோ 182

புத்த வர்க்கம்

1. பிறப்பு இறப்பாகிய வழியை நீக்கி, ஆசையறுத்து, வெல்லப்படாத வெற்றியையுடைய ஞானியாகிய புத்தரை (உலக வழியில்) நீ எந்தப் பாதையில் செலுத்தமுடியும்? 179

2. (உலக) நெறியை நீத்தவரும் அளவற்ற ஞானம் உடையவரும் நச்சுத்தன்மையுள்ள ஆசைத் தளையை அறுத்தவருமாகிய புத்தரை நீ எந்த (உலக) வழியில் செலுத்த இயலும்? 180

3. விழிப்புடன் தியானத்தில் அமர்ந்து துறவு பூண்டு முழுஞானம் பெற்றவரை தேவரும் விரும்புகிறார்கள். 181

4. மனிதராகப் பிறப்பது அருமையானது. மனிதராக வாழ்வது அருமையானது. சத்தர்மத்தை கேட்பது அருமையானது. புத்தராகப்பிறப்பது (புத்த பதவியை அடைவது) அருமையானது. 182

78418

5. ஸப்பபாபஸ்ஸ அகரணங்
குஸலஸ்ஸ உபஸம்பதா
ஸசித்த பரியோதபனங்
ஏதங் புத்தானஸாஸனங் 183

6. கந்தீ பரமங் தபோ திதிக்கா
நிப்பாணங் பரமங் வதந்தி புத்தா
ந ஹி பப்பஜிதோ பரூபகாதீ
ஸமணோ ஹோதி பரங் விஹேட
யந்தோ 184

7. அநூபவாதோ அநூபகாதோ
பாதிமொக்கே ச ஸங்வரே
மத்தஞ்ஞுதா ச பத்தஸ்மிங்
பந்தங் ச ஸயனாஸனங்
அதிசித்தே ச ஆயோகோ
ஏதங் புத்தான ஸாஸனங் 185

8. ந கஹாபண வஸ்ஸேன
தித்தி காமேஸு விஜ்ஜதி
அப்பஸ்ஸாதா துகா காமா
இதி விஞ்ஞாய பண்டிதோ 186

5. 'பாவங்களைச் செய்யாதிரு; நல்லவற்றைச் செய்; மனதைச் சுத்தப்படுத்து' என்னும் இவை புத்தருடைய போதனைகளாக இருக்கின்றன. 183

6. 'பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்ல துறவு ஆகும், நிர்வாண மோக்ஷம் மேலான பதவியாகும்' என்று புத்தர்கள் கூறுகிறார்கள். பிறரைத் துன்புறுத்திக் கஷ்டப் படுத்துகிறவர் சந்நியாசியும் ஆகமாட்டார்; சமணரும் ஆகமாட்டார். 184

7. 'நிந்திக்காதே; துன்புறுத்தாதே; பாதி மோக்கவழியைப் பின்பற்றிநட; மித உணவுகொள், ஏகாந்தமாக இருந்து தியானத்தில் பழகு' என்னும் இவையே புத்தருடைய உபதேசங்களாகும் 185

8. பொன் காணத்தை (நாணயத்தைப்) பொழிந்தாலும் காம ஆசையைத் திருப்திப்படுத்த முடியாது. காம இச்சை சிறுபோது இன்பமும் பிறகு துக்கத்தையும் கொடுக்கிறது என்பதை அறிந்தவனே ஞானியாவான். 186

9. அபி திப்பேஸு காமேஸு
ரதிங் ஸோ நாதிகச்சதி
தண்ஹக்கய ரதோ ஹோதி
ஸம்மாஸம்புத்த ஸாவகோ 187

10, பஹுங் வே ஸரணங் யந்தி
பப்பதானி வனநி ச
ஆராமருக்கசேத்யானி
மநுஸ்ஸா பயதஜ்ஜிதா 188

11. நேதங் கோ ஸரணங் கேமங்
நேதங் ஸரணமுத்தமங்
நேதங் ஸரணமாகம்ம
ஸப்பதுக்கா பமுச்சதி 189

12. யோ ச புத்தங் ச தம்மங் ச
ஸங்கங் ச ஸரணங் கதோ
சத்தாரி அரியஸச்சானி
ஸம்மப்பஞ்ஞாய பஸ்ஸதி 190

9. தேவசுகங்களையும் விரும்பாதே. முழுஞானம் பெற்றவரின் சீடர்கள் ஆசையை (பற்றை) அழிக்க ஊக்கமுள்ளவராய் இருக்கிறார்கள். 187

10. அச்சங்கொண்டவர், மலைகளையும், காடுகளையும், சோலைகளையும், துறவிகள் வசிக்கும் இடங்களையும் தமக்குப் புகலிடமாகச் சரணம் அடைகிறார்கள். 188

11. இவை யாவும் நல்ல புகலிடம் ஆகா. மேலும், இப்புகலிடங்கள் துக்கத்தைப் போக்குவன அல்ல. 189

12. புத்தரையும் தர்மத்தையும் சங்கத்தையும் சரணம் அடைந்து, நற்சாட்சி பெற்று நான்கு வாய்மைகளான :— 190

13. துக்கங் துக்கஸமுப்பாதங்
துக்கஸ்ஸ ச அதிக்கமங்
அரியங்சட்டங்கிகங் மக்கங்
துக்கூபஸமகாமினங் 191

14. ஏதங் கோ ஸரணங் கேமங்
ஏதங் ஸரணமுத்தமங்
ஏதங் ஸரணமாகம்ம
ஸப்பதுக்கா பமுச்சதி 192

15. துல்லபோ புரிஸாஜஞ்ஞோ
ந ஸோ ஸப்பத்த ஜாயதி
யத்த ஸோ ஜாயதீ தீரோ
தங் குலங் ஸுகமேததி 193

16. ஸுகோ புத்தானங் உப்பாதோ
ஸுகா ஸத்தம்மதேஸனு
ஸுகா ஸங்கஸ்ஸ ஸாமக்கி
ஸமக்கானங் தபோ ஸுகோ 194

13. துக்கம், துக்க காரணம், துக்க நீக்கம், துக்கத்தை நீக்கும் வழி ஆகிய இவைகளையும், துன்பத்தை நீக்குகிற மார்க்கத்திற்கு அழைத்துச் செல்லுகிற அஷ்டாங்க மார்க்கத்தையும் காண்கிறவர்கள், 191

14. உண்மையான புகலிடத்தை யடைகிருர்கள். இந்தப்புகலிடம் மேலானது. இதை யடைந்தவர் எல்லாத் துன்பங்களி லிருந்தும் விடுபடுகிருர்கள். 192

15. புருஷஞானி (புத்தர்) கிடைப்பது அருமை. அவர்கள் எப்போதும் தோன்றுவது இல்லை. இந்தத் தீரன் பிறந்த குலம் மேன்மையடைகிறது. 193

16. புத்தர்களின் தோற்றம் சுகமானது. அவர்கள் போதிக்கும் சத்தர்மம் சுகமானது. சங்கத்தில் சேர்வது சுகமானது. சங்கத்தில் சேர்ந்தவரின் சன்மார்க்க ஞானம் சுகமானது. 194

17. பூஜாரஹே பூஜயதோ
புத்தே யதி வ ஸாவகே
பபஞ்ச ஸமதிக்கந்தே
திண்ணஸோகபரித்தவே 195

18. தே தாதிஸே பூஜயதோ
நிப்புதே அகுதோ ,பயே
ந ஸக்கா புஞ்ஞங் ஸங்காதுங்
இமெத்தமிதி கேனசி 196

புத்த-வக்கோ சுத்தஸமோ

---

17. ஆசையைக்கடந்து, பொய்க்காட்சியை நீக்கி துன்பங்களையும் துக்கங்களையும் அறுத்த புத்தர்களை யாவது அவருடைய சீடர்களையாவது போற்றி வணங்குகிறவர்கள், 195

18. நிர்வாண மோக்ஷம் அடைந்து, எவ்வித அச்சங்களையும் அகற்றினவர்களைப் போற்றி வணங்குகிறவர்கள், இவ்வளவு அவ்வளவு என்று மதிப்பிடமுடியாத புண்ணியசீலர் ஆவார்கள். 196

பதினான்காவது புத்தவர்க்கம்

ஸுக—வக்கோ

1. ஸுஸுகங் வத ஜீவாம
வேரினேஸு அவேரினோ
வேரினேஸு மனுஸ்ஸேஸு
விஹராம அவேரினோ 197

2. ஸுஸுகங் வத ஜீவாம
ஆதுரேஸு அனாதுரா
ஆதுரேஸு மனுஸ்ஸேஸு
விஹராம அனாதுரா 198

3. ஸுஸுகங் வத ஜீவாம
உஸ்ஸுகேஸு அனுஸ்ஸுகா
உஸ்ஸுகேஸு மனுஸ்ஸேஸு
விஹராம அனுஸ்ஸுகா 199

4. ஸுஸுகங் வத ஜீவாம
யேஸங் னோ நத்தி கிஞ்சனங்
பீதிபக்கா பவிஸ்ஸாம
தேவா ஆபஸ்ஸரா யதா 200

சுக வர்க்கம்

1. ஆ! பகைக்கிறவர்களிடம் அன்பு செலுத்தி உவகையோடு வாழ்கிறோம். பகைக்கிறவர் இடையே பகையற்று வாழ்கிறோம். 197

2. ஆ! ஆதுரத்தோடு (பத்துவிதமான வருத்தங்களோடு) வாழ்கிற மக்களுடன் ஆதுரம் இல்லாமல் உவகையோடு வாழ்கிறோம். வருத்தம் உறுகிறவர் இடையிலே வருத்தம் இல்லாமல் வாழ்கிறோம். 198

3. ஆ! அவா (ஆசை) உடையவர்களோடு அவா இல்லாமல் உவகையோடு வாழ்கிறோம். அவா உடையவர்களிடையிலே ஆசையற்று இன்பமாக வாழ்கிறோம். 199

4. ஆ! எமக்கென்று ஒருபொருளும் இல்லாமல் உவகையோடு வாழ்கிறோம். ஒளிரும் மேனியோடு விளங்குகிற ஆபஸ்ஸர தேவர்களைப்போல இன்பத்தில் தங்கி வாழ்கிறோம். 200

5. ஜயங் வேரங் பஸவதி
துக்கங் ஸேதி பராஜிதோ
உபஸந்தோ ஸுகங் ஸேதி
ஹித்வா ஜயபராஜயங் 201

6. நத்தி ராகஸமோ அக்கி
நத்தி தோஸஸமோ கலி
நத்தி கந்தஸமா துக்கா
நத்தி ஸந்திபரங் ஸுகங் 202

7. ஜிகச்சா பரமா ரோகா
ஸங்கார பரமா துகா
ஏதங் ஞத்வா யதாபூதங்
நிப்பாணபரமங் ஸுகங் 203

8. ஆரோக்யபரமா லாபா
ஸந்துட்டீ பரமங் தனங்
விஸ்ஸாஸபரமா ஞாதி
நிப்பாணபரமங் ஸுகங் 204

5. வெற்றிவீரன் பகைமையை வளர்க்கிறான். தோல்வியுற்றவன் நோவுடன் கிடக்கிறான். வெற்றியையும் தோல்வியையும் விரும்பாத சாந்த முடையவன் உவகையோடு வாழ்கிறான். 201

6. ஆசையைப் போன்ற நெருப்பு வேறொன்றும் இல்லை. பகைமையைப் போன்ற பாவம் வேறு ஒன்றும் இல்லை. ஐம்புலன்களால் ஏற்படுகின்ற நோயைப் போன்ற நோய் வேறொன்றும் இல்லை. சாந்தியைப் (நிர்வாண மோக்ஷம்) போன்ற உயர்ந்த சுகம் வேறொன்றும் இல்லை. 202

7. பசியானது நோயாகும். சம்ஸ்காரங்கள் (ஐம்புலன்கள்) பெரிய துன்பமாகும். இந்த உண்மையை உள்ளபடி அறிந்து பரம சுகமாகிய நிர்வாண மோக்ஷத்தைப் பெறவேண்டும். 203

8. உடல் நலம் பெரிய ஊதியம் ஆகும். வேண்டாமை (திருப்தி) பெரியசெல்வமாகும். நம்பத்தகுந்தவர் நல்ல உறவினர் ஆவர். நிர்வாண மோக்ஷம் மிக உயர்ந்த சுகம் ஆகும். 204

9. பவிவேகரஸங் பீத்வா
ரஸங் உபஸமஸ்ஸ ச
நித்தரோ ஹோதி நிப்பாபோ
தம்மபீதிரஸங் பிபங் 205

10. ஸாஹு தஸ்ஸனமரியானங்
ஸந்நிவாஸோ ஸதா ஸுகோ
அதஸ்ஸனேன பாலானங்
நிச்சமேவ ஸுகீ ஸியா 206

11. பாலஸங்கதசாரீ ஹீ
தீகமத்தான ஸோசதி
துக்கோ பாலேஹி ஸங்வாஸோ
அமித்தேனே'வ ஸப்பதா
தீரோ ச ஸுகஸங்வாஸோ
ஞாதீனங் வ ஸமாகமோ 207

12. தஸ்மாஹி
தீரஞ்ச பஞ்ஞஞ்ச பஹுஸ்ஸுதங் ச
தோரய்ஹஸீலங் வதவந்தமாரியங்
தங் தாதிஸங் ஸப்புரிஸங் ஸுமேதங்
பஜேத நக்கத்தபதங்'வ சந்திமா

ஸுகவக்கோ பண்ணரஸமோ

9. அமைதி, ஏகாந்தம் என்பவற்றை அருந்தி உண்மையின் சுவையில் நாட்டமுடையவர், எல்லாவித மான பாவங்களிலிருந்தும் அச்சங்களிலிருந்தும் விடு பட்டவர் ஆவர். 205

10. அறிவாளிகளான ஞானிகளைப் பார்ப்பது புனிதமானது; அவர்களுடன் வசிப்பது எப்போதும் இனிமையானது. ஆனால், மூடர்களைப் பாராமலிருப் பவர் இன்பமாக இருக்கிறார். 206

11. ஏனென்றால், மூடர்களுடன் பழகுகிறவர் நெடுங்காலம் துன்பம் அடைகிறார். மூடர்களுடன் நட் பாக இருப்பவர், பகைவருடன் நட்புச் செய்தவர் போலத் துன்பம் அடைகிறார். அறிஞருடன் நட்புக் கொள்வது, உறவினருடன் பழகுவது போன்று இன்ப கரமானது. 207

12. ஆகையினாலே, அறிவும் சிந்தனையும் படிப் பும் உடையவராய், நல்வழியில் செலுத்தும் வன்மை யுடையவராய், கடைமையை அறிந்து நடப்பவராய் உள்ள பெரியோரைப் பின்பற்றி நடப்பாயாக. அப்படிப்பட்ட அறிவும் குணமும் உடையவரை, விண்மீன்கள் சென்ற வழியே செல்லுகிற வெண் ணிலாவைப்போல, பின்பற்றிச் செல்வாயாக. 208

பதினைந்தாவது சுகவர்க்கம்

பிய—வக்கோ

1. அயோகே யுஞ்ஜமத்தானங்
யோகஸ்மிங் ச அயோஜயங்
அத்தங் ஹித்வா பியக்காஹி
பிஹேதத்தானுயோகினங் 209

2. மா பியேஹி ஸமாகஞ்சி
அப்பியேஹி குதாசனங்
பியானங் அதஸ்ஸனங் துக்கங்
அப்பியானங் ச தஸ்ஸனங் 210

3. தஸ்மா பியங் ந கயிராத
பியாபாயோஹி பாபகோ
கந்தா தேஸங் ந விஜ்ஜந்தி
யேஸங் நத்தி பியாப்பியங் 211

4. பியதோ ஜாயதீ ஸோகோ
பியதோ ஜாயதீ பயங்
பியதோ விப்பமுத்தஸ்ஸ
நத்தி ஸோகோ குதோ பயங்? 212

பிரிய வர்க்கம்

1. விரும்பத்தகாதவற்றில் விருப்பங்கொண்டு விரும்பத்தக்கவைகளை விலக்கி, தமக்குப்பிரியமானவற்றைச் செய்து நல்லவற்றை விலக்குகிறவர்கள், நல்ல காரியம் ஒன்றையே செய்கிறவர்களைக் கண்டு பொறாமைப்படுகிறார்கள். 209

2. பிரியமானவற்றில் மனத்தைச் செலுத்தாதே. வெறுப்பானவற்றிலும் மனத்தைச் செலுத்தாதே. பிரியமானதும் துக்கத்தைத்தருகிறது; வெறுப்புள்ளதும் துக்கத்தை உண்டாக்குகிறது. 210

3. ஆகையினாலே பிரியம் கொள்ளாதே. ஏனென்றால், பிரியமானவர்களைப் பிரியும் போது துக்கம் உண்டாகிறது. விருப்பும் வெறுப்பும் அற்றவர்களுக்குத் தளை (பற்று) இல்லை. 211

4. பிரியமானவைகளிலிருந்து துக்கம் உண்டாகிறது. விருப்புள்ளவைகளிலிருந்து அச்சமும் உண்டாகிறது. விருப்பத்தை முழுவதும் விட்டவர்களுக்குத் துக்கம் இல்லை; அச்சத்தைப்பற்றிப் பேச வேண்டியது என்ன இருக்கிறது? 212

5. பேமதோ ஜாயதீ ஸோகோ
பேமதோ ஜாயதீ பயங்
பேமதோ விப்பமுத்தஸ்ஸ
நத்தி ஸோகோ குதோ பயங்? 213

6. ரதியா ஜாயதீ ஸோகோ
ரதியா ஜாயதீ பயங்
ரதியா விப்பமுத்தஸ்ஸ
நத்தி ஸோகோ குதோ பயங் 214

7. காமதோ ஜாயதீ ஸோகோ
காமதோ ஜாயதீ பயங்
காமதோ விப்பமுத்தஸ்ஸ
நத்தி ஸோகோ குதோ பயங்? 215

8. தண்ஹாய ஜாயதீ ஸோகோ
தண்ஹாய ஜாயதீ பயங்
தண்ஹாய விப்பமுத்தஸ்ஸ
நத்தி ஸோகோ குதோ பயங்? 216

5. ஆசை (பிரேமை) யிலிருந்து துன்பம் உண்டாகிறது; ஆசையிலிருந்து அச்சமும் உண்டாகிறது. ஆசையிலிருந்து முழுதும் நீங்கினவர்களுக்குத் துன்பம் இல்லை; அச்சத்தைப்பற்றிப்பேச என்ன இருக்கிறது? 213

6. வாஞ்சைகளிலிருந்து துன்பம் உண்டாகிறது; அச்சமும் உண்டாகிறது. வாஞ்சைகளை முழுவதும் நீக்கினவர்களுக்குத் துன்பம் இல்லை; அச்சத்தைப்பற்றிப்பேச என்ன இருக்கிறது? 214

7. காமத்திலிருந்து துன்பம் உண்டாகிறது; அச்சமும் உண்டாகிறது. காமத்தை முற்றும் விட்டவர்களுக்குத் துன்பம் உண்டாவதில்லை; அச்சத்தைப் பற்றிப்பேச என்ன இருக்கிறது? 215

8. பற்றுக்களினாலே (தண்ஹா) துன்பம் உண்டாகிறது; அச்சமும் உண்டாகிறது. பற்றுக்களை முற்றும் விட்டவர்களுக்குத் துன்பம் இல்லை; அச்சத்தைப்பற்றிப் பேச என்ன இருக்கிறது? 216

9. ஸீலதஸ்ஸன ஸம்பந்நங்
தம்மட்டங் ஸச்சவாதினங்
அத்தனோ கம்ம குப்பானங்
தங் ஜனோ குருதே பியங் 217

10. சந்தஜாதோ அனக்காதே
மனஸா ச புடோ ஸியா
காமேஸு ச பத்த சித்தோ
உத்தங் ஸோதோ'தி வுச்சதி 218

11. சிரப்பவாஸிங் புரிஸங்
தூரதோ ஸோத்திமாகதங்
ஞாதிமித்தா ஸுஹஜ்ஜா ச
அபினந்தந்தி ஆகதங் 219

12. ததே'வ கதபுஞ்ஞம்பி
அஸ்மா லோகா பரங் கதங்
புஞ்ஞானி பதிகண்ஹந்தி
பியங் ஞாதிங்' வ ஆகதங் 220

பியவக்கோ ஸோலஸமோ

9. சீலத்தையும் ஞானத்தையும் நேர்மையையும் உண்மையையும் உடையவர்களாய் தமது கடமையைச் செய்கிறவர்களை மக்கள் விரும்புகிறார்கள். 217

10. நிர்வாண மோக்ஷத்தை நாடி, அதனைத் தன் மனத்தில் இருத்தி ஆசைகளை அறுத்தவர், 'நீரோட்டத்தினால் மேலே இழுத்துச் செல்லப்பட்டவர் (உத்தம் ஸோதோ) என்று கூறப்படுகிறார். 218

11. நெடுநாளைக்குப் பின்னர் தொலைதூரத்திலிருந்து வந்த ஒருவரை, அவரது சுற்றத்தாரும் நண்பரும் அன்பரும் நன்கு வரவேற்பதுபோல, 219

12. புண்ணியம் செய்தவர்கள் இவ்வுலகத்தை விட்டு மறு உலகத்திற்குச் செல்லும் போது, திரும்பி வந்தவனைச் சுற்றத்தார் வரவேற்பதுபோல, அவருடைய புண்ணியங்கள் அவர்களை வரவேற்கின்றன. 220

பதினாறாவது பிரியவர்க்கம்

கோத—வக்கோ

1\. கோதங் ஜஹே விப்பஜஹெய்ய மானங்
ஸங்யோஜனங் ஸப்பமதிக்கமெய்ய
தங் நாமரூபஸ்மிங் அஸஜ்ஜமானங்
அகிஞ்சனங் நானுபதந்தி துக்கா 221

2\. யோ வே உப்பதிதங் கோதங்
ரதங் பந்தங்'வ தாரயே
தமஹங் ஸாரதிங் ப்ரூமி
ரஸ்மிக்காஹோ இதரோ ஜனோ 222

3\. அக்கோதேன ஜினே கோதங்
அஸாதுங் ஸாதுனா ஜினே
ஜினே கதரியங் தானேன
ஸச்சேன அலிகவாதினங் 223

4\. ஸச்சங் பணே ந குஜ்ஜெய்ய
தஜ்ஜா'ப்பஸ்மிம்பி யாசிதோ
எதேஹி தீஹி டானேஹி
கச்சே தேவான ஸந்திகே 224

கோத வர்க்கம்

1. கோபத்தை விடுவாயாக. "நான்" என்கிற மானத்தை நீக்குவாயாக. அருவுருவை (நாமரூபத்தை)ப் பற்றறுத்து, எப்பொருளிலும் ஆசையற்றவரைத் துக்கம் அணுகாது. 221

2. தவமுன பாதையில் சென்ற தேரை (வண்டியை) மீட்டு நல்ல பாதையில் செலுத்துவது போல, கோபத்தை அடக்கிக்காத்தவரைத் தேர்ப் பாகன் என்று கூறுவேன். அவ்வாறு செய்யாதவர் கடிவாளத்தை மட்டும் பிடித்திருப்போர் ஆவர். 222

3. கோபத்தை அன்பினுல் வெல்க. தீமையை நன்மையினுல் வெல்க. கருமியைத் தானத்தினுல் வெல்க. பொய்யை மெய்யினுல் வெல்க. 223

4. உண்மை பேசுவாயாக. சினத்தைத் தவிர்ப்பாயாக. உன்னிடம் இருப்பது மிகக் கொஞ்சமாக இருந்தாலும், யாசிக்கிறவர்களுக்கு அதையும் ஈவாயாக. இம்மூன்று செய்கையினுலும் ஒருவர், தேவர்கள் இருக்கும் இடத்திற்குச் செல்லுகிருர். 224

5. அஹிங்ஸகா யே முனயோ
நிச்சங் காயேன ஸங்வுதா
தே யந்தி அச்சுதங் டானங்
யத்த கந்த்வா ந ஸோசரே 225

6. ஸதா ஜாகரமானானங்
அஹோரத்தானுஸிக்கினங்
நிப்பாணங் அதிமுத்தானங்
அத்தங் கச்சந்தி ஆஸவா 226

7. போராணமேதங் அதுல
நேதங் அஜ்ஜதனாமிவ
நிந்தந்தி துண்ஹிமாஸீனங்
நிந்தந்தி பஹுபாணினங்
மிதபாணிம்பி நிந்தந்தி
நத்தி லோகே அநிந்திதோ 227

8. ந சாஹு ந ச பவிஸ்ஸதி
ந சேதரஹி விஜ்ஜதி
ஏகந்தங் நிந்திதோ போஸோ
ஏகந்தங் வா பஸங்ஸிதோ 228

5. உடம்பில் பற்றற்று அஹிம்சையைக் கடைப் பிடித்த முனிவர்கள் துன்பம் இல்லாத இறவாத நிலையை அடைகிறார்கள். 225

6. விழிப்புடன் இருந்து, இரவும் பகலும் தம்மை நல்வழியில் பழக்கி நிர்வாண மோக்ஷத்தில் நாட்டமுடையவருடைய ஆசவங்கள்* அழிந்து விடுகின்றன.

7. ஆதுலனே! இது தொன்றுதொட்டு வருகிறது; இன்று உண்டானது அல்ல; மௌனியாக இருப்பவனை நிந்திக்கிறார்கள்; அதிகமாகப் பேசுகிற வாயாடிகளையும் நிந்திக்கிறார்கள்; அன்றியும், அளவாகப் பேசுகிறவர்களையும் நிந்திக்கிறார்கள். 227

8. முழுவதும் இகழப் படுபவரும், முழுவதும் புகழப்படுகிறவரும் அன்றும் இல்லை; இன்றும் இல்லை; என்றும் இல்லை. 228

---

*அர்ஹந்த வர்க்கம் 5 ஆவது பாட்டுரையில், ஆசவங்கள் என்ன என்பது விளக்கப்பட்டன. ஆங்குக் காண்க.

9. யஞ்சே விஞ்ஞூ பஸங்ஸந்தி
அனுவிச்ச ஸுவே ஸுவே
அச்சித்தவுத்திங் மேதாவிங்
பஞ்ஞாஸீலஸமாஹிதங் 229

10. நெக்கங் ஜம்போநதஸ்ஸேவ
கோ தங் நிந்திதுமரஹதி?
தேவா'பி தங் பஸங்ஸந்தி
ப்ரஹ்முணா'பி பஸங்ஸிதோ 230

11. காயப்பகோபங் ரக்கெய்ய
காயேன ஸங்வுதோ ஸியா
காயதுச்சரிதங் ஹித்வா
காயேன ஸுசரிதங் சரே 231

12. வசீபகோபங் ரக்கெய்ய
வாசாய ஸங்வுதோ ஸியா
வசீ துச்சரிதங் ஹித்வா
வாசாய ஸுசரிதங் சரே 232

9. குற்றமற்ற நல்லொழுக்கமும் அறிவும் ஞானமும் உடையவரை நாள்தோறும் நன்கறிந்து, அறிஞர்கள் புகழ்வார்களானால்; 229

10. ஜம்புநதம் என்னும் பொன் போன்று தூய்மையான அவர்களை யார்தான் நிந்திக்கக்கூடும்? அப்படிப்பட்ட அவர்கள், தேவர்களாலும் பிரம்மராலும் புகழப்படுகிறார்கள். 230

11. உடம்பினால் உண்டாகிற குற்றங்களை அடக்கிக் காக்க. உடம்பை அடக்கி ஆள்க. உடம்பினால் உண்டாகும் தீயகாரியங்களை விலக்கி நல்ல காரியங்களைச் செய்க. 231

12. வாக்கினால் உண்டாகும் குற்றங்களை அடக்குக. வாக்கினை அடக்கி ஆள்க. வாக்கினால் உண்டாகும் தீமைகளை நீக்கி, நல்ல வாக்குடையவராக இருக்க வேண்டும். 232

13\. மனோபகோபங் ரக்கெய்ய
மனஸா ஸங்வுதோ ஸியா
மனோ துச்சரிதங் ஹித்வா
மனஸா ஸுசரிதங் சரே 233

14\. காயேன ஸங்வுதா தீரா
அதோ வாசாய ஸங்வுதா
மனஸா ஸங்வுதா தீரா
தே வே ஸுபரிஸங்வுதா 234

கோதவக்கோ ஸத்தரஸமோ

13. மனத்தினால் உண்டாகும் குற்றங்களை அடக்குக. மனத்தை அடக்கி ஆள்க. மனக்குற்றங்களை நீக்கி, மனத்தினால் நல்ல எண்ணங்களை எண்ணுக.

14. உடல், வாக்கு, மனம் இவைகளை அடக்கி ஆள்கிற அறிஞர் உண்மையாகவே நல்ல அடக்கம் உடையவர் ஆவர்.

பதினேழாவது கோதவர்க்கம்

மல—வக்கோ

1. பண்டுபலாஸோ'வ தானி'ஸி
யமபுரிஸா'பி ச தங் உபட்டிதா
உய்யோகமுகே ச திட்டஸி
பாதெய்யம்பி ச தே ந விஜ்ஜதி 235

2. ஸோ கரோஹி தீபமத்தனோ
கிப்பங் வாயம பண்டிதோ பவ
நித்தந்தமலோ அநங்கணோ
திப்பங் ஆரியபூமிமேஹிஸி 236

3. உபநீத வயோ'வ தானி'ஸி
ஸம்பயாதோ'ஸி யமஸ்ஸ ஸந்திகே
வாஸோ'பி ச நத்தி அந்தரா
பாதெய்யம்பி ச தே ந விஜ்ஜதி 237

4. ஸோ கரோதி தீபமத்தனோ
கிப்பங் வாயம பண்டிதோ பவ
நித்தந்தமலோ அனங்கணோ
ந புன ஜாதி ஜராங் உபேஹிஸி 238

மல வர்க்கம்

1. இப்போது நீ பழுத்துப்போன இலைபோல் ஆய்விட்டாய். யமதூதர் உன்னை அணுகுகிறார்கள். நீ இறந்து போகும் நிலையில் இருக்கிறாய். நீ செல்லும் வழிக்கு உணவு உன்னிடம் இல்லை. 235

2. ஆகவே உன்னைத் தீவு போல (அரண்) செய்து கொள். ஊக்கமும் அறிவும் உடையவனாக இரு. உன்னுடைய மாசுகள் நீங்கி, நீ பாவம் அற்றவனாய், ஒளியுடன் விளங்குகிற உயர்ந்த உலகத்திற்குச் செல்வாய். 236

3. உன் வாழ்நாள் முடிந்துவிட்டது. யமனுடைய முன்னிலையில் நீ இருக்கிறாய். நீ செல்லும் வழியில் தங்க இடமும் உண்ண உணவும் இல்லை. 237

4. ஆகவே, உன்னைத் தீவுபோன்று (அரண்) செய்துகொள். ஊக்கமும் அறிவும் உடையவனாக இரு. உன்னுடைய மாசுகள் நீங்கி நீ பாவம் அற்றவனாகிவிட்டால், பிறக்கவும் இறக்கவும் மாட்டாய். 238

5. அனுபுப்பேன மேதாவீ
தோகதோகங் கணே கணே
கம்மாரோ ரஜதஸ்ஸேவ
நித்தமே மலமத்தனோ 239

6. அயஸா'வ மலங் ஸமுட்டிதங்
ததுட்டாய தமேவ காததி
ஏவங் அதிதோனசாரினங்
ஸககம்மானி நயந்தி துக்கதிங் 240

7. அஸஜ்ஜாயமலா மந்தா
அனுட்டானமலா கரா
மலங் வண்ணஸ்ஸ கோஸஜ்ஜங்
பமாதோ ரக்கதோ மலங் 241

8. மலித்தியா துச்சரிதங்
மச்சேரங் தததோ மலங்
மலா வே பாபகா தம்மா
அஸ்மிங் லோகே பரம்ஹி ச 242

5. அறிவாளியானவர், தட்டான் வெள்ளியில் உள்ள களிம்பைப் போக்குவது போல, கணந்தோறும் சிறிது சிறிதாகத் தம்முடைய மாசுகளைப் போக்கிக் கொள்கிறார். 239

6. இரும்பினால் உண்டான துரு இரும்பையே அழித்துவிடுவதுபோல, தீய நெறியில் செல்வோர் தம் தீய செயல்களினால் அழிக்கப்படுகிறார். 240

7. பாராயணம் செய்யாமலிருப்பது மந்திரத்திற்குக் குற்றமாகும். பழுதுபார்க்காம லிருப்பது வீட்டிற்குக் குற்றம் ஆகும். சோம்பலானது அழகுக்குக் குற்றம் ஆகும். அசட்டைத்தனமாக இருப்பது காவலுக்குக் குற்றம் ஆகும். 241

8. ஒழுக்கயீனமாக நடப்பது பெண்டிர்க்குக் குற்றம் ஆகும். பொருளில் பற்றுள்ளம் வைப்பது வள்ளலுக்குக் குற்றம் ஆகும். உண்மையாகவே, தீய கருமங்களைச் செய்வது இம்மைக்கும் மறுமைக்கும் குற்றம் ஆகும். 242

9. ததோ மலா மலதரங்
அவிஜ்ஜா பரமங் மலங்
ஏதங் மலங் பஹத்வான
நிம்மலா ஹோத பிக்கவோ 243

10. ஸுஜீவங் அஹிரிகேன
காகஸூரேன தங்ஸினா
பக்கந்தினா பகப்பேன
ஸங்கிலிட்டேன ஜீவிதங் 244

11. ஹிரீமதா ச துஜ்ஜீவங்
நிச்சங் ஸுசி கவேஸினா
அலீநேனப்பகப்பேன
ஸத்தாஜீவேன பஸ்ஸதா 245

12. யோ பாணமதிபாதேதி
முஸாவாதஞ்ச பாஸதி
லோகே அதின்னங் ஆதியதி
பரதாரங் ச கச்சதி 246

9. அழுக்கு (குற்றம்)களில் எல்லாம் அறியாமை என்னும் அழுக்கு மிகக்கொடியது. இது பெரிய குற்றம். பிக்குகளே! இந்த அழுக்கை நீக்குங்கள்; அழுக்கற்று இருங்கள். 243

10. காக்கை போன்று வெட்கம் இல்லாமல், துணிவும் பழிச்சொல்லும் குற்றச்செயலும் உடைய ஒருவருக்கு இவ்வுலக வாழ்க்கை இன்பகரமாகக் காணப்படுகிறது. 244

11. அமைதியும் நிதானமும், சுருசுருப்பும் தன்னடக்கமும் உடையவராய் எப்போதும் தூய்மையை நாடிக்கொண்டு தீமையற்றவராக உள்ள ஞானிக்கு உலக வாழ்க்கை துன்பகரமாக இருக்கிறது.

12. உலகத்திலே, உயிரைக் கொல்கிறவரும் பொய்பேசுகிறவரும், திருடுகிறவரும், பிறன் மனைவியை விரும்புகிறவரும், 246

13. ஸுராமேரயபானங் ச
யோ நரோ அனுயுஜ்ஜதி
இதேவமேஸோ லோகஸ்மிங்
மூலங் கணதி அத்தனோ 247

14. ஏவங் போ புரிஸ ஜானாஹி
பாபதம்மா அஸஞ்ஞதா
மா தங் லோபோ அதம்மோ ச
சிரங் துக்காய ரந்தயுங் 248

15. ததாதி வே யதாஸத்தங்
யதா பஸாதனங் ஜனோ
தத்த யோ மங்குபாவங் வா
பரேஸங் பானபோஜனே
ந ஸோ திவா வா ரத்திங் வா
ஸமாதிங் அதிகச்சதி 249

16. யஸ்ஸ சேதங் ஸமுச்சின்னங்
மூலகச்சங் ஸமூஹதங்
ஸ வே திவா வா ரத்திங் வா
ஸமாதிங் அதிகச்சதி 250

13. மயக்கம் உண்டாக்குகிற குடிவகைகளைக் குடிக்கிறவரும் இவ்வுலகத்திலேயே தமது வேரைத் தாமே தோண்டிக்கொள்கிறார்கள். 247

14. ஓ புருஷனே! இதைத் தெரிந்துகொள். அடக்கப்படாத தீய எண்ணங்கள் இப்படிப்பட்டவை. ஆகவே, தீய நடத்தைகளும் பேராசையும் உன்னைத் தீராத துக்கத்தில் இழுத்துச்செல்ல விடாதே. 248

15. மக்கள் தங்கள் சக்திக்கும் பக்திக்கும் தக்கவாறு தானம் செய்கிறார்கள். ஒருவர் மற்றவருக்கு உணவும் பானமும் கொடுப்பதைக் கண்டு பொறாமைப்படுகிறவர், இரவிலும் பகலிலும் மனச்சாந்தியடையமாட்டார். 249

16. இந்தப் பொறாமையை அடியோடு பெயர்த்தெறிந்து முழுவதும் அழித்து விட்டவர்கள், இரவிலும் பகலிலும் மனச்சாந்தி (சமாதி) அடைகிறார்கள்.

17. நத்தி ராகஸமோ அக்கி
நத்தி தோஸஸமோ கஹோ
நத்தி மோஹஸமங் ஜாலங்
நத்தி தண்ஹாஸமா நதீ 251

18. ஸுதஸ்ஸங் வஜ்ஜமஞ்ஞேஸங்
அத்தனோ பன துத்தஸங்
பரேஸங் ஹி ஸோ வஜ்ஜானி
ஓ புணாதி யதா புஸங்
அத்தனோ பன சாதேதி
கலிங்'வ கிதவா ஸடோ 252

19. பரவஜ்ஜானுபஸ்ஸிஸ்ஸ
நிச்சங் உஜ்ஜானஸஞ்ஞினோ
ஆஸவா தஸ்ஸ வட்டந்தி
ஆரா ஸோ ஆஸவக்கயா 253

20. ஆகாஸே பதங் நத்தி
ஸமணோ நத்தி பாஹிரே
பபஞ்சாபிரதா பஜா
நிப்பபஞ்சா ததாகதா 254

17. காமத்தீ போன்று வேறு தீ இல்லை. பகைமையைப் போன்று வேறு உறுதியான பிடி இல்லை. மோகவலை போன்று வேறு வலை இல்லை. ஆசை வெள்ளம் போன்று வேறு வெள்ளம் இல்லை. 251

18. பிறருடைய குற்றம் எளிதில் காணப்படுகிறது. ஆனால், தன்னுடைய குற்றத்தைக் காண்பது கடினமாக இருக்கிறது. பிறருடைய் குற்றங்களை, பதரைக் தூற்றுவது போன்று தூற்றுகிறவர், தந்திரமுள்ள சூதாடி தன் தோல்வியை மறைப்பதற்காகச் சூதுக்காயை ஒளிப்பதுபோல, தன் சொந்தக் குற்றத்தை மறைக்கிறார். 252

19. எப்போதும் பிறர் குற்றத்தைக்கண்டு குறை கூறுகிறவர்கள், தம்முடைய குற்றங்களை வளரவிடுகிறார்கள். அவர்கள் தமது குற்றங்களை அழிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். 253

20. ஆகாயத்திலே பாதைகள் இல்லை. வேறு சமயத்தில் (உண்மையான) துறவிகள் இல்லை. மக்கள், உலகத்திலே இச்சைகளை வளர்க்கிறார்கள். ததாகதர் (புத்தர்)கள் இச்சைகளை வளர்ப்பதில்லை. 254

21. ஆகாஸே பதங் நத்தி
ஸமணோ நத்தி பாஹிரே
ஸங்காரா ஸஸ்ஸதா நத்தி
நத்தி புத்தானமிஞ்ஜிதங் 255

மலவக்கோ அட்டாரஸமோ

---

21. வானத்தில் பாதைகள் இல்லை. வேறு சமயத்தில், (உண்மையான) துறவிகள் இல்லை. நிலை நிற்கும்படியான பொருள் உலகத்தில் ஒன்றும் இல்லை.

பதினெட்டாவது மலவர்க்கம்

தம்மட்ட—வக்கோ

1. ந தேன ஹோதி தம்மட்டோ
யேனத்தங் ஸஹஸா நயே
யோ ச அத்தங் அனத்தஞ்ச
உபோ நிச்செய்ய பண்டிதோ 256

2. அஸாஹஸேன தம்மேன
ஸமேன நயதீ பரே
தம்மஸ்ஸ குத்தோ மேதாவீ
தம்மட்டோ'தி பவுச்சதி 257

3. ந தேன பண்டிதோ ஹோதி
யாவதா பஹு பாஸதி
கேமீ அவேரீ அபயோ
பண்டிதோ'தி பவுச்சதி 258

4. ந தாவதா தம்மதரோ
யாவதா பஹு பாஸதி
யோ ச அப்பம்பி ஸுத்வான
தம்மங் காயேன பஸ்ஸதி
ஸ வே தம்மதரோ ஹோதி
யோ தம்மங் நப்பமஜ்ஜதி 259

தம்மட்ட வர்க்கம்

1. வழக்கில் தீர்ப்பளிப்பதினாலேயே ஒருவர் நீதிபதி யாகமாட்டார். பண்டிதரான ஒருவர் மெய்யையும் பொய்யையும் ஆராய்ந்து பார்த்து, 256

2. யோசனையோடு பக்ஷபாதமில்லாமல் நேர்மையாகத் தீர்ப்பளிக்கிறார். தர்மத்தினால் போற்றப்படுகிற அந்த அறிஞர் பண்டிதர் எனப்படுவார். 257

3. ஒருவர் அதிகமாகப் பேசுவதனாலேயே அறிஞர் ஆகமாட்டார். பொறுமையும் அன்பும் அச்சமும் உடையவராய், அச்சமில்லாதவர் யாரோ அவரே பண்டிதர் எனப்படுவார். 258

4. ஒருவர் அதிகமாகப் பேசுகிறபடியினாலேயே தர்மத்தை அறிந்தவர் ஆகமாட்டார். தான் கேட்டது சிறிதளவாக இருந்தாலும் அதை மனத்தில் ஆழ்ந்து சிந்தித்துப் பதியவைத்து, அதை உறுதியாகப் பிடித்திருப்பவரே தர்மத்தை அறிந்தவர் ஆவார். 259

5. ந தேன தேரோ ஹோதி
யேனஸ்ஸ பலிதங் ஸிரோ
பரிபக்கோ வயோ தஸ்ஸ
மோகஜிண்ணோ'தி வுச்சதி 260

6. யம்ஹி ஸச்சஞ்ச தம்மோ ச
அஹிங்ஸா ஸஞ்ஞமோ தமோ
ஸ வே வந்தமலோ தீரோ
தேரோ இதி பவுச்சதி 261

7. ந வாக்கரணமத்தேன
வண்ணபொக்கரதாய வா
ஸாதுரூபோ நரோ ஹோதி
இஸ்ஸுகீ மச்சரீ ஸடோ 262

8. யஸ்ஸ சேதங் ஸமுச்சின்னங்
மூலகச்சங் ஸமூஹதங்
ஸ வந்ததோஸோ மேதாவீ
ஸாதுரூபோதி வுச்சதி 263

5. தன்னுடைய தலைமயிர் நரைத்துவிட்டதி ஞலேயே ஒருவர் தேரர் ஆகமாட்டார். அவருடைய வயதுமட்டும் முதிர்ந்து விட்டது. அவர் "வீணுக வளர்ந்தவர்" எனப்படுவார். 260

6. உண்மையும், நேர்மையும் அஹிம்சையும் அடக்கமும் உள்ளவர் யாரோ, அந்தக் குற்றமற்ற அறிஞர் உண்மையாகவே தேரர் என்னும் பெயருக்கு உரியவர் ஆவார். 261

7. பொறாமையும் வெறுப்பும் கபடமும் உள்ள வர்கள், அழகாக இருப்பதனுலேயோ அல்லது இனிமையாகப் பேசுவதனுலேயோ சாது ஆகமாட் டார்கள். 262

8. இவைகளையெல்லாம் யாரொருவர் வேரொடு பிடுங்கி எறிந்து விட்டாரோ, பகைமையை விட்டவர் யாரோ அந்த அறிஞரே சாது எனப்படுவார். 263

9. ந முண்டகேன ஸமணோ
அப்பதோ அலிகங் பணங்
இச்சாலோப ஸமாபன்னோ
ஸமணோ கிங் பவிஸ்ஸதி 264

10. யோ ச ஸமேதி பாபானி
அனு தூலானி ஸப்பஸோ
ஸமிதத்தா ஹி பாபானங்
ஸமணோதி பவுச்சதி 265

11. ந தேன பிக்கு ஹோதி
யாவதா பிக்கதே பரே
விஸ்ஸங் தம்மங் ஸமாதாய
பிக்கு ஹோதி ந தாவதா 266

12. யோத புஞ்ஞஞ்ச பாபஞ்ச
பாஹெத்வா ப்ரஹ்மசரிய வா
ஸங்காய லோகே சரதி
ஸ வே பிக்கூ'தி வுச்சதி 267

9. தான் மேற்கொண்ட (துறவுக்) கடமையை விட்டு, பொய்யைப் பேசுகிற ஒருவர், தன்து தலையை மழித்துவிட்டதனலேயே சமணர் (துறவி) ஆகமாட்டார். ஆசைகளையும் அவாவையும் விடாதவர் எப்படிச் சமணர் ஆவார்? 264

10. சிறிதும் பெரிதும் ஆகிய எல்லாவிதமான பாவங்களையும் அடக்கினவர் யாரோ அவரே சமணர் (துறவி) ஆவார். ஏனென்றால், அவர் எல்லாப் பாவங்களையும் அடக்கியிருக்கிறார். 265

11. பிறரிடம் பிச்சை கேட்பதனலேயே ஒருவர் பிக்கு ஆகமாட்டார். தர்ம மார்க்கத்திலிருந்து தவறி நடக்கிறவரும் பிக்கு ஆகமாட்டார். 266

12. புண்ணியம் பாவம் இரண்டினையும் விட்டு பிரமசரியங் காத்து, இவ்வுலகத்திலே தூய்மையான வாழ்க்கை வாழ்கிறவர் யாரோ அவர்தான் பிக்கு என்று கூறப்படுகிறார். 267

13\. ந மோனேன முனீ ஹோதி
மூல்ஹரூபோ அவித்தஸு
யோ ச துலங்'வ பக்கய்ஹ
வரமாதாய பண்டிதோ 268

14\. பாபானி பரிவஜ்ஜேதி
ஸ முனீ தேன ஸோ முனி
யோ முனாதி உபோ லோகே
முனீ தேன பவுச்சதி 269

15\. ந தேன அரியோ ஹோதி
யேன பாணானி ஹிங்ஸதி
அஹிங்ஸா ஸப்பபாணானங்
அரியோ'தி பவுச்சதி 270

16\. ந ஸீலப்பதமத்தேன
பாஹுஸச்சேன வா புன
அதவா ஸமாதிலாபேன
விவிச்ச ஸயனேன வா 271

13. மூடத்தனமும் அறியாமையும் உள்ள ஒருவர் மௌன விரதம் பூண்டிருப்பதனாலேயே முனிவர் ஆகமாட்டார். அறிஞரான ஒருவர், தராசைத்தூக்கி நிறுத்தி எடை காண்பவர் போல, சீர்தூக்கிப் பார்த்து நல்லதை மட்டும் ஏற்றுக்கொண்டு, 268

14. பாவங்களைத் தள்ளிவிடுகிறவர் யாரோ அவரே முனிவர் ஆவார். ஏனென்றால் இரண்டு உலகங்களையும் நிறுத்துப் பார்க்கிறவர் ஆகையினாலே அவர் முனிவர் எனப்படுகிறார். 269

15. உயிர்களை இம்சித்து வதை செய்கிறவர் ஆரியர் (உயர்ந்தவர்) ஆகமாட்டார். எல்லா உயிர்களிடத்திலும் அன்புள்ளவர் (அகிம்சையோடிருப்பவர்) ஆரியர் (மேலோர்) எனப்படுவர். 270

16. சீலத்தினாலும், நல்லொழுக்கத்தினாலும், அதிகமாகக் கற்றதினாலும், சமாதி நிலையில் இருப்பதனாலும், அல்லது ஏகாந்த வாழ்க்கை வாழ்வதினாலும்,

17\. புஸாமி நெக்கம்ம ஸுகங்
அபுதுஜ்ஜனஸேவிதங்
பிக்கு விஸ்ஸாஸமாபாதி
அப்பத்தோ ஆஸவக்கயங் 272

தம்மட்டவக்கோ ஏகூனவீஸதிமோ

---

17. "சாதாரண மக்கள் அடையாத துறவு இன்பத்தை நான் அடைந்தேன்" என்று அறிவதனாலும் மாத்திரம், ஓ பிக்குகளே! சாந்தியடையமுடியாது. ஆஸவங்களை ஒழித்தால்தான் சாந்தியடைய முடியும். 272

பத்தொன்பதாவது தம்மட்ட வர்க்கம்

மக்க—வக்கோ

1. மக்கானட்டங்கிகோ ஸெட்டோ
ஸச்சானங் சதுரோ பதா
விராகோ ஸெட்டோ தம்மானங்
திபதானஞ்ச சக்குமா 273

2. ஏஸோ'வ மக்கோ நத்தஞ்ஞோ
தஸ்ஸனஸ்ஸ விஸுத்தியா
ஏதங் ஹி தும்ஹே படிபஜ்ஜத
மாரஸ்ஸேதங் பமோஹணங் 274

3. ஏதங் ஹி தும்ஹே படிபன்னா
துக்கஸ்ஸந்தங் கரிஸ்ஸத
அக்காதோ வே மயா மக்கோ
அஞ்ஞாய ஸல்லஸத்தனங் 275

4. தும்ஹேஹி கிச்சங் ஆதப்பங்
அக்காதாரோ ததாகதா
படிபன்னா பமொக்கந்தி
ஜாயினோ மாரபந்தனா 276

மார்க்க வர்க்கம்

1. எல்லா மார்க்கங்களை விட அட்டாங்க மார்க்கம் மேன்மையானது. வாய்மைகளி லெல்லாம் நான்கு வாய்மைகளே மேலானவை. தர்மங்களிலெல்லாம் ஆசையற்ற (நிர்வாண) தர்மம் மேலானது. மனிதர்களி லெல்லாம் (ஞானக்) கண்ணுள்ளவர் (புத்தர்) மேலானவர். 273

2. நற்காட்சி பெறுவதற்கு இதுவே சிறந்த மார்க்கம்; வேறு மார்க்கம் இல்லை. இந்த மார்க்கத்தைப் பின்பற்றி நடப்பாயாக. ஏனென்றால் இது மாரனைத் திகைக்கச் செய்கிறது. 274

3. இந்த வழியில் நீ நடப்பதனாலே நீ துக்கத்தை நீக்கலாம். அம்பு போன்ற கூர்மையான துன்பங்களை அகற்றுவதற்கு இந்த வழியைக் காட்டினேன். 275

4. நீயே ஊக்கத்தோடு முயற்சி செய்ய வேண்டும். புத்தர்கள் வழியை மட்டும் காட்டுவார்கள். இதை மனத்தில் பதியவைத்து இதன்படி நடக்கிறவர்கள், தீயவனான மாரனுடைய தளையிலிருந்து நீங்குகிறார்கள். 276

5. ஸப்பே ஸங்காரா அநிச்சா'தி
யதா பஞ்ஞாய பஸ்ஸதி
அத நிப்பிந்ததி துக்கே
ஏஸ மக்கோ விஸுத்தியா 277

6. ஸப்பே ஸங்காரா துக்கா'தி
யதா பஞ்ஞாய பஸ்ஸதி
அத நிப்பிந்ததி துக்கே
ஏஸ மக்கோ விஸுத்தியா 278

7. ஸப்பே தம்மா அனத்தா'தி
யதா பஞ்ஞாய பஸ்ஸதி
அத நிப்பிந்ததி துக்கே
ஏஸ மக்கோ விஸுத்தியா 279

8. உட்டானகாலம்ஹி அனுட்டஹானோ
யுவா பலீ ஆலஸியா உபேதோ
ஸம்ஸன்னஸங்கப்பமனோ குஸீதோ
பஞ்ஞாய மக்கங் அலஸோ ந விந்ததி

5. சம்ஸ்காரங்கள் எல்லாம் அழிந்து போகிறவை என்பதைக் கண்டு உணர்ந்து, துக்கத்தை வெறுக்கிறவர்களுக்கு இதுவே சுத்தமான வழியாகும்.

6. சம்ஸ்காரப் பொருள்களெல்லாம் துக்கந் தருவன என்பதை ஞானத்தினுல் உணர்ந்து, துக்கத்தை வெறுக்கிறவர்களுக்கு இதுவே சுத்தமான மார்க்கமாகும். 278

7. எல்லாப் பொருள்களும் அனுத்மம் என்பதை ஞானத்தினுல் உணர்ந்து, துக்கத்தை வெறுக்கிறவர்களுக்கு இதுவே சுத்தமான மார்க்கம் ஆகும். 279

8. இளமையும் வலிவும் உடையவனுக இருந்தும், சோம்பலாகவும் அசட்டையாகவும் முயற்சி இல்லாமலும் இருக்கிற மந்த புத்தியுள்ள சோம்பேறி, அறிவு வழியைக் காணமாட்டான். 280

9. வாசானுரக்கீ மனஸா ஸுஸங்வுதோ
காயேன ச அகுஸலங் ந கயிரா
ஏதே தயோ கம்மபதே விஸோதயே
ஆராதயே மக்கங் இஸிப்பவேதிதங்

10. யோகா வே ஜாயதி பூரீ
அயோகா பூரிஸங்கயோ
ஏதங் த்வேதாபதங் ஞத்வா
பவாய விபவாய ச
ததத்தானங் நிவேஸெய்ய
யதா பூரி பவட்டதி 282

11. வனங் சிந்தத மா ருக்கங்
வனதோ ஜாயதீ பயங்
செத்வா வனஞ்ச வனதஞ்ச
நிப்பனா ஹோத பிக்கவோ 283

12. யாவங் ஹி வனதோ ந சிஜ்ஜதி
அனுமத்தோ'பி நரஸ்ஸ நாரிஸு
படிபத்தமனோ'வ தாவ ஸோ
வச்சோ கீரபகோ'வ மாதரி 284

9. மொழி (பேச்சு) யினால் உண்டாகும் குற்றங்களை நீக்கி, மனத்தை அடக்கி, உடம்பினாலும் தீய செயல்களைச் செய்யாதிருப்பாயாக. மனமொழிமெய்களாகிய இம்மூன்றினாலும் உண்டாகும் தீமைகளை நீக்கி மேலோர் காட்டிய நல்வழியில் செல்க. 281

10. மனத்தை ஒரு நிலைப்படுத்துவதனாலே (யோகத்தினாலே) ஞானத்தைப் பெறலாம். மனத்தை ஒரு நிலைப்படுத்தா விட்டால் ஞானத்தைப் பெறமுடியாது. ஊதியம் தருவதும் ஊதியம் தராததுமான இந்த இரண்டு வழிகளையும் தெரிந்து ஞானம் வளர்கிற வழியில் நடப்பாயாக. 282

11. பிக்குகளே! ஒரு மரத்தை மட்டும் வெட்டி வீழ்த்தாதீர்கள். (ஆசையாகிய) காடுமுழுவதையும் வெட்டித் தள்ளுங்கள். ஆசையாகிய காட்டிலிருந்து ஆபத்து உண்டாகிறது. ஆகவே, காடு முழுவதையும் புதர்களோடு வெட்டிக் காட்டை ஒழியுங்கள். 283

12. ஏனென்றால், மங்கையரைப்பற்றிய ஆசை சிறியதாக இருந்தாலும் அது அழிக்கப்படாமல் இருக்குமானால், பாலுண்டு வளரும் கன்றைப்போல அது வளர்ந்துவிடும். 284

13\. உச்சிந்த ஸிநேஹமத்தனோ
குமுதங் ஸாரதிகங்'வ பாணிநா
ஸந்திமக்கமேவ ப்ரூஹய
நிப்பாணங் ஸுகதேன தேஸிதங் 285

14\. இத வஸ்ஸங் வஸிஸ்ஸாமி
இத ஹேமந்த கிம்ஹஸு
இதி பாலோ விசிந்தேதி
அந்தராயங் ந புஜ்ஜதி 286

15\. தங் புத்தபஸு ஸம்மத்தங்
வ்யாஸத்தமனஸங் நரங்
ஸுத்தங் காமங் மஹோகோ'வ
மச்சு ஆதாய கச்சதி 287

16\. ந ஸந்தி புத்தா தாணாய
ந பிதா ந பி பந்தவா
அந்தகேனாதிபன்னஸ்ஸ
நத்தி ஞாதிஸு தாணதா 288

13. தாமரையை நீரிலிருந்து அறுப்பதுபோல, ஆசையை உன் கையினாலே அறுப்பாயாக. சுகதரால் போதிக்கப்பட்ட நிர்வாண மோக்ஷமாகிய சாந்தவழியில் செல்வாயாக. 285

14. "கார்காலத்தில் இங்கே தங்குவேன், குளிர்காலத்திலும் வேனிற்காலத்திலும் இங்கிங்கே வசிப்பேன்" என்று மூடர்கள் சிந்தித்துக் கொண்டு துன்பங்களை உணர்கிறதில்லை. 286

15. புத்திரர், பசு முதலிய சம்பத்துக்களில் ஒருவன் மகிழ்ச்சி கொண்டிருப்பானானால். தூங்கிக் கொண்டிருக்கிறபோது கிராமத்தைப் பெரு வெள்ளம் அடித்துக்கொண்டு போவது போல, அவனைச் சாவு அடித்துக்கொண்டு போகிறது. 287

16. சாவினால் (மரணத்தினால்) இழுத்துக் கொண்டு போகப்பட்டவர்களுக்கு மக்களாலும், தகப்பனாலும், சுற்றத்தினராலும் பாதுகாப்பு கிடையாது. ஏனென்றால், உறவினரால் அவருக்குப் பாதுகாப்பு இல்லை. 288

17. ஏதமத்தவஸங் ஞத்வா
பண்டிதோ ஸீலஸங்வுதோ
நிப்பாணகமனங் மக்கங்
கிப்பமேவ விஸோதயே 289

மக்கவக்கோ வீஸதிமோ

---

17. அறிவினுல் தன்னை அடக்கியாள்கிற ஞானவான், இந்த உண்மையை அறிந்து, நிர்வாண மோக்ஷத்திற்குச் செல்லும் வழியை இப்போதே செம்மைப்படுத்த வேண்டும். 289

இருபதாவது மார்க்க வர்க்கம்.

பகிண்ணக—வக்கோ

1. மத்தா ஸுகபரிச்சாகா
பஸ்ஸே சே விபுலங் ஸுகங்
சஜே மத்தாஸுகங் தீரோ
ஸம்பஸ்ஸங் விபுலங் ஸுகங் 290

2. பரதுக்கூபதானேன
அத்தனோ ஸுகமிச்சதி
வேரஸங்ஸக்கஸங்ஸட்டோ
வேரா ஸோ ந பரிமுச்சதி 291

3. யங்ஹி கிச்சங் ததபவித்தங்
அகிச்சங் பன கயிரதி
உந்நலாநங் பமத்தானங்
தேஸங் வட்டந்தி ஆஸவா 292

4. யேஸஞ்ச ஸுஸமாரத்தா
நிச்சங் காயகதாஸதி
அகிச்சங் தே நஸேவந்தி
கிச்சே ஸாதச்சகாரினோ
ஸதானங் ஸம்பஜானனங்
அத்தங் கச்சந்தி ஆஸவா 293

பகிண்ணக வர்க்கம்

1. சிறு இன்பத்தை விடுவதனாலே, பெரிய இன்பத்தை அறிஞர் ஒருவர் காண்பாரானால், அப் பெரிய இன்பத்திற்காகச் சிறிய இன்பத்தைத் துறப் பாராக. 290

2. தன் சொந்த இன்பத்தைக் கருதி பிறருக் குத் துன்பத்தை ஒருவர் உண்டாக்கினால், பகைமை என்கிற தளையில் அகப்பட்டு அப்பகைமையிலிருந்து விடுபடுகிறதில்லை. 291

3. செய்யவேண்டிய காரியத்தைச் செய்யாமல் விடுகிறார்கள். செய்யக்கூடாத காரியத்தைச் செய்கி றார்கள். இவ்வாறு அசட்டைத்தன முள்ளவர்களின் ஆசவம் (ஆசை) பெருகுகிறது. 292

4. சிந்தனை உள்ளவர்கள் உடம்பை நல்லவழி யிலே பழக்கி, செய்யவேண்டிய காரியங்களைச் செய்ய முயற்சியோ டிருக்கிறார்கள். விழிப்பும் சிந்தனையும் உள்ள அவர்களின் ஆசவங்கள் அழிந்து போகின்றன.

5. மாதரங் பிதரங் ஹந்த்வா
ராஜானோ த்வே ச கத்தியே
ரட்டங் ஸாநுசரங் ஹந்த்வா
அநீகோ யாதி ப்ராஹ்மணோ 294

6. மாதரங் பிதரங் ஹந்த்வா
ராஜானோ த்வே ச ஸொத்தியே
வெய்யக்க பஞ்சமங் ஹந்த்வா
அநீகோ யாதி ப்ராஹ்மணோ 295

7. ஸுப்பபுத்தங் பபுஜ்ஜந்தி
ஸதா கோதமஸாவகா
யேஸங் திவா ச ரத்தோ ச
நிச்சங் புத்தகதா ஸதி 296

8. ஸுப்பபுத்தங் பபுஜ்ஜந்தி
ஸதா கோதமஸாவகா
யேஸங் திவா ச ரத்தோ ச
நிச்சங் தம்மகதா ஸதி 297

5. (ஆசையாகிற) தாயைக் கொன்று, (அகங்காரம்) என்கிற தந்தையைக் கொன்று, (பொறிகளும் புலன்களுமாகிய) வீரராகிய இரண்டு அரசர்களையும் வென்று, (பற்று அல்லது ஆசை) என்கிற அரசாட்சியை அழித்த பிராமணர் துக்கம் இல்லாமல் போகிறார். 294

6. தாயையும், தந்தையையும், குருமாராகிய இரண்டு அரசர்களையும் கொன்று ஐந்து தடைகளையும் வென்று, (பிறவியையறுத்து சாவாநிலையை யடைந்து) பிராமணர் துக்கம் இல்லாமல் போகிறார். 295

7. கோதமருடைய (புத்தருடைய) சீடர்கள், புத்தருடைய பெருமையை இரவும் பகலும் இடைவிடாமல் சிந்தித்துக்கொண்டே முழு ஞானியாகிறார்கள். 296

8. கோதமருடைய சீடர்கள், தருமத்தினுடைய பெருமையை இரவும் பகலும் இடைவிடாமல் சிந்தித்துக்கொண்டே முழு ஞானியாகிறார்கள். 297

9. ஸுப்பபுத்தங் பபுஜ்ஜந்தி
ஸதா கோதமஸாவகா
யேஸங் திவா ச ரத்தோ ச
நிச்சங் ஸங்ககதா ஸதி 298

10. ஸுப்புத்தங் பபுஜ்ஜந்தி
ஸதா கோதமஸாவகா
யேஸங் திவா ச ரத்தோ ச
நிச்சங் காயகதா ஸதி 299

11. ஸுப்பபுத்தங் பபுஜ்ஜந்தி
ஸதா கோதமஸாவகா
யேஸங் திவா ச ரத்தோ ச
அஹிங்ஸாய ரதோ மனோ 300

12. ஸுப்பபுத்தங் பபுஜ்ஜந்தி
ஸதா கோதமஸாவகா
யேஸங் திவா ச ரத்தோ ச
பாவனாய ரதோ மனோ 301

9. கோதமருடைய சீடர்கள் (பிக்ஷுக்) சங்கத்தினுடைய பெருமையை இரவும் பகலும் இடைவிடாமல் சிந்தித்துக்கொண்டே முழு ஞானியாகிறார்கள். 298

10. கோதமருடைய சீடர்கள் உடம்பைப் பற்றி இரவும் பகலும் இடைவிடாமல் சிந்தித்துக்கொண்டே முழு ஞானியாகிறார்கள். 299

11. கோதமருடைய சீடர்கள், அகிம்சையை இரவும் பகலும் இடைவிடாமல் சிந்தித்துக் கொண்டே முழு ஞானியாகிறார்கள். 300

12. கோதமருடைய சீடர்கள், இரவும் பகலும் இடைவிடாமல் பாவனா தியானத்தில் இருந்து கொண்டே முழு ஞானியாகிறார்கள். 301

13. துப்பப்பஜ்ஜங் துரபிரமங்
துராவாஸா கரா துகா
துக்கோ' ஸமானஸங்வாஸோ
துக்கா நுபதிதத்தகூ
தஸ்மா ந வத்தகூ ஸியா
ந ச துக்கா னுபதிதோ ஸியா 302

14. ஸத்தோ ஸீலேன ஸம்பந்நோ
யஸோ போக ஸமப்பிதோ
யங் யங் பதேஸங் பஜதி
தத்த தத்தேவ பூஜிதோ 303

15. தூரே ஸந்தோ பகாஸெந்தி
ஹிமவந்தோ'வ பப்பதோ
அஸந்தெத்த ந திஸ்ஸந்தி
ரத்திகித்தோ யதாஸரோ 304

16. ஏகாஸனங் ஏகஸெய்யங்
ஏகோ சரமதந்திதோ
ஏகோ தமயமத்தானங்
வநந்தே ரமிதோ ஸியா 305

பகிண்ணக வக்கோ ஏகவீஸதிமோ

13. உலகத்தைத் துறப்பது கடினமானது. இல்லற வாழ்க்கை துன்பமானது. சரிசமானம் இல்லாதவரோடு பழகுவது துன்பமானது. திரிந்து உழல்வது துன்பமானது. ஆகையினுலே, (பிறப்பு இறப்பாகிய) பாதையில் திரிந்து துன்பத்தினுல் தொடரப்படாமல் இருப்பாயாக. 302

14. சீலமும் ஞானமும் உடையவர், புகழும் செல்வமும் பெறுகிறுர்கள். அவர்கள் எந்நாட்டிற் சென்றுலும் எங்கே இருந்தாலும் அங்கங்கே மரியாதை பெறுகிறுர்கள். 303

15. நல்லவர்கள் தூரத்தில் இருந்தாலும், இமய மலையைப் போன்று காணப்படுகிறுர்கள். தீயவர், இருட்டில் எய்யப்பட்ட அம்புபோலக் காணப்படாமல் இருக்கிறுர்கள். 304

16. தனியே இருந்து, தனியே அமர்ந்து, தனியே நடந்து, தனியே அடக்கமாயிருப்பவர், காட்டிலேயும் இன்பத்தைக் காண்கிறுர்கள். 305

இருபத்தொன்றுவது பகிண்ணக வர்க்கம்.

நிரய—வக்கோ

1. அபூதவாதீ நிரயங் உபேதி
யோ சாபி கத்வா ந கரோமீதி' சாஹ
உபோ'பி தே பெச்ச ஸமா பவந்தி
நிஹீநகம்மா மநுஜா பரத்த 306

2. காஸாவகண்டா பஹவோ
பாபதம்மா அஸஞ்ஞதா
பாபா பாபேஹி கம்மேஹி
நிரயங் தே உபபஜ்ஜரே 307

3. ஸெய்யோ அயோகுலோ புத்தோ
தத்தோ அக்கிஸிகூபமோ
யஞ்சே புஞ்ஜெய்ய துஸ்ஸீலோ
ரட்டபிண்டங் அஸஞ்ஞதோ 308

4. சத்தாரி டாணநி நரோ பமத்தோ
ஆபஜ்ஜதி பரதாரூபஸேவீ
அபுஞ்ஞலாபங் ந நிகாமஸெய்யங்
நிந்தங் ததீயங் நிரயங் சதுத்தங் 309

நிரய வர்க்கம்

1. பொய்யன் நரகம் செல்கிறான்; ஒன்றைச் செய்துவிட்டு "நான் இதைச்செய்யவில்லை" என்கிறவனும் நரகம் செல்கிறான். இழிசினராகிய இவ்விருவரும் ஒருதன்மைத்தாக, மறுமையில் துன்பமுள்ள ஒரே இடத்திற்குச் செல்லுகிறார்கள். 306

2. துவர் (காஷாய) ஆடை தரித்தவர்களிலும், கெட்டவர்களும் அடக்கம் அற்றவர்களுமான தீயவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் தமது தீய செயல்களினாலே நிரயத்தில் சென்று பிறக்கிறார்கள்.

3. அடக்கம் அற்று தீய ஒழுக்கம் உள்ள துறவிகள், நாட்டில் சென்று பிச்சை ஏற்று உண்பதைக் காட்டிலும், பழுக்கக் காய்ந்த நெருப்பைக் கக்கும் இரும்பு உருண்டைகளை விழுங்குவது நல்லது. 308

4. பிறன் மனைவியிடத்துச் சோரம் போகிறவனுக்கு இந்நான்கு தீமைகள் விளைகின்றன :— பாவம், அமைதியான தூக்கம் இன்மை, பழிச்சொல், நரகம். 309

5. அப்புஞ்ஞலாபோ ச கதீ ச பாபிகா
பீதஸ்ஸ பீதாய ரதீ ச தோகிகா
ராஜா ச தண்டங் கருகங் பணேதி
தஸ்மா நரோ பரதாரங் ந ஸேவே

6. குஸோ யதா துக்கஹீதோ
ஹத்தமேவாநுகந்ததி
ஸாமஞ்ஞங் துப்பராமட்டங்
நிரயாயூபகட்டதி 311

7. யங் கிஞ்சி ஸிதிலங் கம்மங்
ஸங்கிலிட்டஞ்ச யங் வதங்
ஸங்கஸ்ஸரங் ப்ரஹ்மசரியங்
ந தங் ஹோதி மஹப்பலங் 312

8. கயிரா சே கயிராதேனங்
தல்ஹமேனங் பரக்கமே
ஸிதிலோ ஹி பரிப்பாஜோ
பிய்யோ ஆகிரதே ரஜங் 313

5. மேலும் அவன் பாவத்தை யடைந்து மறுமையில் தீக்கதி யடைகிறான். அச்சம் உள்ள ஒருவன் அச்சம் உள்ள ஒருத்தியோடு கூடா ஒழுக்கத்தினால் அடையும் இன்பம் மிகச் சிறியது. அரசனும் அவனைக் கடுமையாக ஒறுக்கினான். ஆகவே, பிறன் மனைவியை விரும்பாதிருப்பாயாக. 310

6. தர்ப்பைப்புல்லைத் தவறான முறையில் பற்றி இழுத்தால், அது கையை அறுத்து விடுகிறது. அது போல, தீயவழியில் துறவறத்தைச் செலுத்துகிறவர்கள் நரகத்தை யடைகிறார்கள். 311

7. சிரத்தையோடு செய்யாத காரியம், நியமம் தவறிச் செய்யப்பட்ட செயல், ஒழுக்கமற்ற பிரமசரியம் ஆகிய இவை நல்ல பலனைக் கொடுப்பதில்லை. 312

8. எதையேனும் செய்ய வேண்டுமானால் அதைச் சரியாகச் செய்க. ஒழுக்கந்தவறிய துறவி தீமைகளையே அதிகமாகப் பரப்புகிறார். 313

9. அகதங் துக்கதங் ஸெய்யோ
பச்சா தபதி துக்கதங்
கதஞ்ச ஸுகதங் ஸெய்யோ
யங் கத்வா நானுதப்பதி 314

10. நகரங் யதா பச்சந்தங்
குத்தங் ஸந்தரபாஹிரங்
ஏவங் கோபேத அத்தானங்
கணோ வே மா உபச்சகா
கணாதீதா ஹி ஸோசந்தி
நிரயம்ஹி ஸமப்பிதா 315

11. அலஜ்ஜிதா யே வஜ்ஜந்தி
லஜ்ஜிதாயே ந லஜ்ஜரே
மிச்சாதிட்டி ஸமாதானா
ஸத்தா கச்சந்தி துக்கதிங் 316

12. அபயே ச பயதஸ்ஸினோ
பயே சாபயதஸ்ஸினோ
மிச்சாதிட்டி ஸமாதானா
ஸத்தா கச்சந்தி துக்கதிங் 317

9. தீய கருமத்தைச் செய்யாமல் விடுவது நல்லது. ஏனென்றால், தீச்செயல்கள் பிறகு துன்பத்தைத் தருகின்றன. நல்ல காரியத்தை நன்றாகச் செய். ஏனென்றால், நல்ல காரியத்தைச் செய்வதினாலே எவரும் வருத்தம் அடைகிறதில்லை. 314

10. எல்லைப்புறத்தில் இருக்கிற நகரத்தை உள்ளும் புறமும் அரண் செய்து பாது காப்பதுபோல, ஒருவன் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்க. கணப்பொழுதையும் வீணாகக் கழிக்காதே. கணப் பொழுதுகளை நல்வழியில் செலுத்தாதவன் நிரயத்தில் சென்று வருந்துகிறான். 315

11. வெட்கப்பட வேண்டாத காரியத்தில் வெட்கப்படுவதும், வெட்கப்பட வேண்டியவற்றில் வெட்கப்படாமலும் இருக்கிறவர்கள், தவறான காட்சியைக் கொண்டிருப்பதனாலே, நரகத்தை அடைகிறார்கள். 316

12. அஞ்ச வேண்டியவற்றில் அஞ்சாமையையும், அஞ்சவேண்டாதவற்றில் அச்சத்தையும் காண்கிறவர்கள், தவறான காட்சியைப் பெற்றிருப்பதனாலே, நரகத்திற்குச் செல்கிறார்கள். 317

13. அவஜ்ஜே வஜ்ஜமதிநோ
வஜ்ஜே சாவஜ்ஜதஸ்ஸிநோ
மிச்சாதிட்டி ஸமாதாநா
ஸத்தா கச்சந்தி துக்கதிங் 318

14. வஜ்ஜஞ்ச வஜ்ஜதோ ஞத்வா
அவஜ்ஜஞ்ச அவஜ்ஜதோ
ஸம்மாதிட்டி ஸமாதாநா
ஸத்தா கச்சந்தி ஸுக்கதிங் 319

நிரயவக்கோ பாவீஸதமோ

13. தவறில்லாதவற்றைத் தவருனவை என்றும், தவறுள்ளவற்றைத் தவறில்லாதவை என்றும் நினைக்கிறவர்கள், தீக்காட்சி யுடையவர்கள் ஆகையினலே, நரகம் அடைகிருர்கள். 318

14. தவருனவற்றைத் தவறு என்றும், தவறில்லாதவற்றைத் தவறற்றவை என்றும் அறிகிறவர்கள், நற்காட்சி யுடையவர்கள் ஆகையினலே, சுவர்க்கம் அடைகிருர்கள். 319

இருபத்திரண்டாவது நிரயவர்க்கம்

நாக—வக்கோ

1. அஹங் நாகோ'வ ஸங்காமே
சாபாதோ பதிதங் ஸரங்
அதிவாக்யங் திதிக்கிஸ்ஸங்
துஸ்ஸீலோ ஹி பஹுஜ்ஜனோ 320

2. தந்தங் நயந்தி ஸமிதிங்
தந்தங் ராஜாபிரூஹதி
தந்தோ ஸெட்டோ மநுஸ்ஸேஸு
யோதிவாக்யங் திதிக்கதி 321

3. வரமஸ்ஸதரா தந்தா
ஆஜாநீயா ச ஸிந்தவா
குஞ்ஜரா ச மஹாநாகா
அத்ததந்தோ ததோ வரங் 322

4. ந ஹி ஏதேஹி யானேஹி
கச்செய்ய அகதங் திஸங்
யதாத்தனு ஸுதந்தேன
தந்தோ தந்தேன கச்சதி 323

நாகவர்க்கம்

1. யானையானது, போர்க்களத்திலே எய்யப் பட்ட அம்பை எவ்வாறு தாங்கிக்கொள்கிறதோ அது போல, நிந்தையான சொற்களை நான் பொறுத்துக் கொள்வேன். ஏனென்றால், உலகத்திலே தீயவர்களே அதிகமாக இருக்கிறார்கள். 320

2. பழகிய யானை ஊர்வலத்தில் கொண்டுபோகப் படுகிறது. பழகிய யானையை அரசர் ஊர்ந்து செல்கி றார்கள். தம்மை நல்வழியில் பழக்கிப் பிறர் கூறுகிற நிந்தனைகளைப் பொறுத்துக் கொள்கிறவர்கள், மக்களில் மேலானவர்கள். 321

3. பழகிய குதிரை நல்லது; அதுபோன்று பழகிய சிந்துதேசத்துக் குதிரை சிறந்தது. அது போலவே, பழக்கப்பட்ட குஞ்சர யானையும் கொம்பன் யானையும் மேலானவை. ஆனால் தன்னைத்தானே அடக்கி ஆளப்பழகியவன் இவை எல்லாவற்றிலும் மேலானவன். 322

4. தம்மைத்தாமே அடக்கப்பழகி மனத்தை நல்வழியில் செலுத்துவதனாலே அடக்கமுள்ள ஞானி கள் நிர்வாண மோக்ஷத்திற்குப் போவதுபோல, இத் தகைய ஊர்திகளில் ஏறிக்கொண்டு ஒருவரும் நிர்வாண மோக்ஷத்திற்குப் போகமுடியாது. 323

5. தனபாலகோ நாம குஞ்ஜரோ
கடுகப்பபேதனோ துந்நிவாரயோ
பத்தோ கபலங் ந புஞ்ஜதி
ஸுமரதி நாகவனஸ்ஸ குஞ்ஜரோ 324

6. மித்தீ யதா ஹோதி மஹக்கஸோ ச
நித்தாயிதா ஸம்பரிவத்தஸாயீ
மஹாவராஹோ'வ நிவாபபுட்டோ
புனப்புனங் கப்பமுபேதி மந்தோ 325

7. இதங் புரே சித்தமசாரி சாரிகங்
யே நிச்சகங் யத்த காமங் யதாஸுகங்
தத்ஜஜஹங் நிக்கஹெஸ்ஸாமி
யோனிஸோ
ஹத்திப்பபின்னங் விய
அங்குஸக்கஹோ 326

8. அப்பமாதரதா ஹோத
ஸசித்தமனுரக்கத
துக்கா உத்தரதத்தானங்
பங்கே ஸத்தோ'வ குஞ்ஜரோ 327

5. அடக்கிப்பழக்கி ஆளமுடியாத தனபாலன் என்னும் பெயருள்ள யானையானது, பிடிக்கப்பட்ட பொழுது, கவளத்தை உண்ணாமல் தான் இருந்த காட்டுக்குச் செல்ல ஏங்குகிறது. 324

6. சோம்பலும் பெருந்திண்டியும் உறக்கமும் உடையவராய், பன்றிகள் சேற்றில் புரள்வது போல இப்புறமும் அப்புறமும் புரண்டு கொண்டிருக்கிற மூடர்கள், மீண்டும் மீண்டும் பிறந்து கொண்டே இருக்கிறார்கள். 325

7. இந்த மனமானது முன்பு, தன் விருப்பம் போல கண்டபடி எல்லாம் அலைந்து திரிந்துகொண்டிருந்தது. யானைப்பாகன், மதமுள்ள யானையை அடக்கிப் பழக்குவதுபோல, இன்று என் மனத்தை அடக்கிப் பழக்குவேன். 326

8. விழிப்பாக இரு. உன் மனத்தை நன்றாகக் காத்துக்கொள். சேற்றில் அகப்பட்ட யானை அதிலிருந்து முயன்று வெளிவருவது போல, துக்கங்களிலிருந்து உன்னை வெளியேற்றிக்கொள். 327

9. ஸசே லபேத நிபகங் ஸஹாயங்
ஸத்திங் சரங் ஸாது விஹாரி தீரங்
அபிபுய்ய ஸப்பானி பரிஸ்ஸயானி
சரெய்ய தேனத்தமனோ ஸதீமா 328

10. நோ சே லபேத நிபகங் ஸஹாயங்
ஸத்திங் சரங் ஸாதுவிஹாரி தீரங்
ராஜா'வ ரட்டங் விஜிதங் பஹாய
ஏகோ சரே மாதங்கரஞ்ஞே'வ நாகோ

11. ஏகஸ்ஸ சரிதங் ஸெய்யோ
நத்தி பாலே ஸஹாயதா
ஏகோ சரே ந ச பாபானி கயிரா
அப்பொஸ்ஸுக்கோ மாதங்கரஞ்ஞே'வ
நாகோ 330

12. அத்தம்ஹி ஜாதம்ஹி ஸுகா ஸஹாயா
துட்டீ ஸுகா யா இதரீ தரேன
புஞ்ஞங் ஸுகங் ஜீவிதஸங்கயம்ஹி
ஸப்பஸ்ஸ துக்கஸ்ஸ ஸுகங் பஹா
ணங் 331

9. நல்லொழுக்கமும் நல்லறிவும் உடையவராய் தீமைகளைவிட்ட அறிஞர் கிடைப்பாரானால், அவரிடம் அன்புடனும் அக்கரையுடனும் நட்புக்கொண்டு பழகு.

10. நல்லொழுக்கமும் நல்லறிவும் உடைய ஒருவரைத் தோழராகப் பெறமுடியாவிட்டால், மாதங்கம் என்னும் யானை, தன்னந்தனியே காட்டில் வாழ்வது போலவும், பகைவர்களிடம் தன் தேசத்தை விட்டுவிட்டுத் தன்னந்தனியே வாழ்கிற அரசனைப் போலவும், நீ தனியே வாழ்வாயாக. 229

11. தன்னந்தனியே வாழ்வது நல்லது. மூடர்களின் நட்பு கூடாது. பாவம் செய்யாமல், கவலையற்றவராய் காட்டில் வாழும் மாதங்கம் என்னும் யானையைப் போன்று தன்னந்தனியே வாழ்வாயாக. 330

12. துன்பம் அடைந்த காலத்தில் உதவிபுரியும் நண்பர்களைப் பெறுவது மகிழ்ச்சிக் குரியது. உள்ளதைக் கொண்டு திருப்தி அடைவது மகிழ்ச்சிக் குரியது. இறக்கும்போது புண்ணியம் உடன் வருவது மகிழ்ச்சிக்குரியது. துக்கத்தை நீக்குவது மகிழ்ச்சிக்குரியது. 331

13. ஸுகா மத்தெய்யதா லோகே
அதோ பெத்தெய்யதா ஸுகா
ஸுகா ஸாமஞ்ஞதா லோகே
அதோ ப்ரஹ்மஞ்ஞதா ஸுகா 332

14. ஸுகங் யாவ ஜரா ஸீலங்
ஸுகா ஸத்தா பதிட்டிதா
ஸுகோ பஞ்ஞாய படிலாபோ
பாபானங் அகரணங் ஸுகங் 333

நாகவக்கோ தேவீஸதிமோ

---

13. இவ்வுலகத்தில் தாயை வணங்குவது மகிழ்ச்சிக்குரியது. பின்னர் தந்தையை வணங்குவது மகிழ்ச்சிக்குரியது. உலகத்திலே துறவிகளை வணங்குவது மகிழ்ச்சிக்குரியது. அதுபோன்று, பேரறிஞராகிய ஞானிகளை வணங்குவது மகிழ்ச்சிக்குரியது.332

14. முதுமைப் பருவம் வருவதற்கு முன்பே சீலத்தைக் கடைப்பிடிப்பது மகிழ்ச்சிக்குரியது. தர்மத்தில் உறுதியான நம்பிக்கையோடு இருப்பது மகிழ்ச்சிக்குரியது. அறிவை வளர்ப்பது மகிழ்ச்சிக்குரியது. பாவத்தை விலக்குவது மகிழ்ச்சிக்குரியது.

இருபத்துமூன்றாவது நாகவர்க்கம்

தண்ஹா—வக்கோ

1. மனுஜஸ்ஸ பமத்தசாரிநோ
தண்ஹா வட்டதி மாலுவா விய
ஸோ ப்லவதி ஹுராஹுரங்
பலமிச்சங்'வ வனஸ்மிங் வானரோ 334

2. யங் ஏஸா ஸஹதீ ஜம்மீ
தண்ஹா லோகே விஸத்திகா
ஸோகா தஸ்ஸ பவட்டந்தி
அபிவட்டங்'வ பீரணங் 335

3. யோ சேதங் ஸஹதீ ஜம்மிங்
தண்ஹங் லோகே துரச்சயங்
ஸோகா தம்ஹா பபதந்தி
உதபிந்'துவ பொக்கரா 336

4. தங் வோ வதாமி பத்தங் வோ
யாவந்தெத்த ஸமாகதா
தண்ஹாய மூலங் கணத
உஸீரத்தோ'வ பீரணங்
மா வோ நலங்'வஸோதோ'வ
மாரோ பஞ்ஜி புனப்புனங் 337

தண்ஹா வர்க்கம்

1. மனம் போனபடி வாழ்க்கையை நடத்துகிறவருக்கு, ஆசை (தண்ஹா)யானது மாளுவா கொடியைப் போன்று வளர்கிறது. காட்டிலே பழங்களைத் தேடி அலைகிற குரங்கைப்போன்று அவன் பல பிறவிகளை அடைகிறான். 334

2. இழிவானதும் பற்றிக்கொள்ளுகிறதுமான இந்த அவாவினால் வெல்லப்பட்டவர்களுடைய துக்கமானது, மழை காலத்தில் வளர்கிற பீரணம் புல்லைப் போன்று வளர்கிறது. 335

3. இழிவுள்ளதும் நீக்குதற்குக் கடினமானதுமான அவாவை யார் வென்றுவிடுகிறாரோ அவருடைய துக்கங்கள், தாமரை இலையில் தண்ணீர் ஒட்டாமல் ஓடிவிடுவதுபோல, விழுந்துவிடுகின்றன. 336

4. ஆகையினாலே, இங்கே கூடியிருக்கிற உங்கள் எல்லோருக்கும் இந்த நல்ல செய்தியைச் சொல்லுகிறேன். பீரணம் புல்லின் கிழங்கை அதன் வாசனைக்காகத் தோண்டி எடுப்பது போல, ஆசை என்கிற கிழங்கை அடியோடு தோண்டி எடுங்கள். கோரைப் புல்லைப் வெள்ளமானது அழுத்துவது போல, உன்னை மாரனானவன் அடிக்கடி அழுத்தவிடாதே. 337

5. யதா’பி மூலே அனுபத்தவே தல்ஹே
சின்னோ’பி ருக்கோ புனரேவ ரூஹதி
ஏவம்பி தண்ஹானுஸயே அனூஹதே
நிப்பத்ததி துக்கமிதங் புனப்புனங்

6. யஸ்ஸ சத்திங்ஸதீ ஸோதா
மனா பஸ்ஸவனா புஸா
வாஹா வஹந்தி துத்திட்டிங்
ஸங்கப்பா ராகநிஸ்ஸிதா 339

7. ஸவந்தி ஸப்பதீ ஸோதா
லதா உப்பிஜ்ஜ திட்டதி
தஞ்ச திஸ்வா லதங் ஜாதங்
மூலங் பஞ்ஞாய சிந்தத 340

8. ஸரிதானி ஸினேஹிதானி ச
ஸோமனஸ்ஸானி பவந்தி ஜந்துனோ
தே ஸாதஸிதா ஸுகேஸினோ
தே வே ஜாதிஜரூபகா நரா 341

5. மரத்தை வெட்டி விட்டாலும் அதன் வேர் வெட்டப்படாமலும் உறுதியாகவும் இருந்தால், அந்த மரமானது மீண்டும் துளிர்த்து வளர்வதுபோல, அவா என்கிற வேர் அழிக்கப்படாவிட்டால் துக்கமானது மீண்டும் மீண்டும் வளர்கிறது. 338

6. தவறான காட்சியுடைய, புலன்களின் வழியாக முப்பத்தாறு கிளைகளாகப் பாய்கிற ஸோத்தா என்னும் வெள்ளத்தை யுடைய (ஆசையையுடைய) ஒருவன், காம இச்சையாகிய எண்ணங்களால் அடித்துக்கொண்டு போகப்படுகிறான். 339

7. அவா என்கிற வெள்ளம் எங்கும் பாய்கிறது. ஆசை என்கிற கொடி துளிர்த்துப் படர்கிறது. இந்தக் கொடி வளர்வதைக் கண்டு அறிவினாலே இதை வேரோடு பிடுங்கி எறிக. 340

8. பழைய நேசத்தை நினைப்பதினாலே ஒருவருக்கு இன்பம் உண்டாகிறது. உலக இன்பங்களில் பற்று வைத்து அவைகளில் இன்பத்தைக் காண விரும்புகிறவர்கள், உண்மையாகவே, பிறந்து நரைதிரை யடைகிறார்கள். 341

9. தஸிணுய புரக்கதா பஜா
பரிஸப்பந்தி ஸஸோ'வ பாதிதோ
ஸங்யோஜனஸங்கஸத்தா
துக்கமுபெந்தி புனப்புனங் சிராய 342

10. தஸிணுய புரக்கதா பஜா
பரிஸப்பந்தி ஸஸோ'வ பாதிதோ
தஸ்மா தஸிணங் விநோதயே
பிக்கு ஆகங்கீ விராகமத்தனோ 343

11. யோ நிப்பநதோ வனதிமுத்தோ
வநமுத்தோ வநமேவ தாவதி
தங் புக்கலமேவ பஸ்ஸத
முத்தோ பந்தனமேவ தாவதி 344

12. ந தங் தல்ஹங் பந்தனமாஹு தீரா
யதாயஸங் தாருஜங் பப்பஜஞ்ச
ஸாரத்த ரத்தா மணிகுண்டலேஸு
புத்தேஸு தாரேஸு ச யா அபேகா

9. ஆசையினால் (திருஷ்ணையினால்) செலுத்தப் படுவோர், கட்டிவைக்கப்பட்ட முயலைப்போன்று, சுற்றிச் சுற்றி அலைகிறார்கள். அவர்கள், தளையினால் கட்டப்பட்டவர்களாய் நெடுங்காலம் திரும்பத்திரும்ப துக்கம் அடைகிறார்கள். 342

10. ஆசையினால் (திருஷ்ணையினால்) செலுத்தப் படுவோர், கட்டிவைக்கப்பட்ட முயலைப்போல, சுற்றிச் சுற்றி ஓடியலைகிறார்கள். ஆகையினாலே, ஆசையி லிருந்து விடுபடவிரும்புகிறவர், ஆசையை விடுவாராக.

11. உலக வாழ்விலிருந்து (ஆசையிலிருந்து) விடுபட்ட ஒருவர் காட்டு வாழ்க்கைக்குச் செல்கிறார். காட்டு வாழ்க்கையிலிருந்து (ஆசையிலிருந்து) விடுபட்ட வர் மீண்டும் ஆசை வாழ்க்கைக்குத் திரும்புகிறார். இவ் வாறு ஆசையிலிருந்து விடுபட்டவர் மீண்டும் ஆசை வாழ்வில் புகுவதைப் பாருங்கள். 344

12. இரும்பினாலோ மரத்தினாலோ பப்பஜப் புல்லினாலோ அமைக்கப்பட்ட விலங்குகளை, அறிஞர் கள் பலமுள்ள தளை என்று கருதுகிறதில்லை. பொன் னாலும் மணியாலும் செய்யப்பட்ட அணிகலன்கள், மக்கள், மனைவி இவர்களிடத்தில் உள்ள பற்று என்கிற விலங்கு, 345

13\. ஏதங் தல்ஹங் பந்தனமாஹு தீரா
ஓஹாரினங் ஸிதிலங் துப்பமுச்சங்
ஏதம்பி செத்வான பரிப்பஜந்தி
அனபெக்கினோ காமஸுகங் பஹாய

14\. யே ராகரத்தா'நுபதந்தி ஸோதங்
ஸயங் கதங் மக்கடகோ'வ ஜாலங்
ஏதம்பி செத்வான வஜந்தி தீரா
அநபெக்கினோ ஸப்பதுக்கங் பஹாய

15\. முஞ்ச புரே முஞ்ச பச்சதோ
மஜ்ஜே முஞ்ச பவஸ்ஸ பாரகூ
ஸப்பத்த விமுத்தமானஸோ
ந புன ஜாதிஜரங் உபேஹிஸி 348

16\. விதக்கபமதிதஸ்ஸ ஜந்துனோ
திப்பராகஸ்ஸ ஸுபானுபஸ்ஸினோ
பிய்யோ தண்ஹா பவட்டதி
ஏஸ கோ தல்ஹங் கரோதி பந்தனங்

13. அறிஞர்களால் பலமான விலங்குகளாகக் கருதப் படுகிறது. இந்தப் பற்றுகிய விலங்கு தளர்ந்த தும், அறுக்கக்கூடியதும் ஆக இருந்தாலும், இதி லிருந்து தப்பித்துக்கொள்வது கடினமானது. ஆனால், காம சுகங்களை விட்டு உலகத்தைத் துறந்தவர்கள் இந்த விலங்கையும் அறுத்து விடுகிறார்கள். 346

14. காம இச்சைக்கு அடிமைப்பட்டவர்கள் ஆசை யாகிய வெள்ளத்தில், சிலந்தி, தான் அமைத்த வலைக் கூட்டில் தானே விழுவதுபோல, விழுகிறார்கள். இந்த வெள்ளத்திலிருந்து எழுந்து, ஆசையை விட்டவர்கள் எல்லா துக்கங்களையும் விலக்கி நிர்வாண மோக்ஷத்திற் குச் செல்லுகிறார்கள். 347

15. இறந்தகாலம் நிகழ்காலம் எதிர் காலம் என்னும் முக்காலத்தையும் கடந்து எதிர் கரைக்குச் செல்க. உன் மனது முழுவதும் விடுதலை யடைந்து விட்டால், நீ மீண்டும் மீண்டும் பிறந்து இறக்கும் நிலையை யடைய மாட்டாய். 348

16. உடம்பினால் உண்டாகும் இன்பங்களை விரும்பி, காமசுகங்களை இச்சித்து, தீய எண்ணங் களில் அழுந்தியவர்களுக்கு ஆசையானது வளர்ந்து கொண்டே போகிறது. 349

17. விதக்கூபஸமே ச யோ ரதோ
அஸுபங் பாவயதி ஸதாஸதோ
ஏஸ கோ வ்யந்திகாஹிதி
ஏஸோ செச்சதி மாரபந்தநங் 350

18. நிட்டங்கதோ அஸந்தாஸீ
வீத தண்ஹோ அநங்கணோ
அச் செச்சி பவஸல்லானி
அந்திமோ'யங் ஸமுஸ்ஸயோ 351

19. வீததண்ஹோ அநாதானோ
நிருத்திபதகோவிதோ
அக்கரானங் ஸந்நிபாதங்
ஜஞ்ஞா புப்பபரானி ச
ஸ வே அந்திமஸாரீரோ
மஹாபஞ்ஞோ'தி வுச்சதி 352

20. ஸப்பாபிபூ ஸப்பவிதூ'ஹமஸ்மி
ஸப்பேஸு தம்மேஸு அநூபலித்தோ
ஸப்பஞ்ஜஹோ தண்ஹக்கயே விமுத்
[தோ
ஸயங் அபிஞ்ஞாய கமுத்திஸெய்யங்

17. உடம்பின் அசுத்தத் தன்மையை அறிந்து, தீய எண்ணங்களை அடக்குவதில் ஊக்கங் கொண்டு எப்போதும் விழிப்புடன் இருக்கிறவர், மாரனுடைய தளையை அறுத்து, விடுதலை பெறுகிறார். 350

18. வீட்டு நெறியை அடைந்தவர்கள் அச்சம் அற்று, ஆசையை ஒழித்து, மறு பிறப்பாகிய அம்பு களை அழித்து, இந்த உடம்பையே கடைசி உடம்பாகக் கொண்டு இருக்கிறார்கள். 351

19. காம சுகங்களையும் ஆசைகளையும் விட்டு, சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து, எழுத்துக்களின் முன்பின் நிலையைத் தெரிந்தவர், பேரறிஞராகவும் கடைசி உடம்பைப் பெற்றவராகவும் இருக்கிறார். 352

20. நான் எல்லாவற்றையும் வென்றேன். எல்லாவற்றையும் அறிந்தேன். பற்றுக்களை விட்டேன். ஆசையை யறுத்து, எல்லாவற்றையும் துறந்து, உயர் நிலையை யடைந்தேன். எல்லாவற்றையும் நானே செய்தபிறகு நான் யாரை என் குருவாகக் கூறுவேன்?

21. ஸப்பதானங் தம்மதானங் ஜினாதி
ஸப்பங் ரஸங் தம்மரஸோ ஜினாதி
ஸப்பங் ரதிங் தம்மரதீ ஜினாதி
தண்ஹக்கயோ ஸப்பதுக்கங் ஜினாதி

22. ஹநந்தி போகா தும்மேதங்
நோ ச பாரகவேஸினோ
போக தண்ஹாய தும்மேதோ
ஹந்தி அஞ்ஞே'வ அத்தனங் 355

23. திணதோஸானி கெத்தானி
ராகதோஸா அயங் பஜா
தஸ்மா ஹி வீதராகேஸு
தின்னங் ஹோதி மஹப்பலங் 356

24. திணதோஸானி கெத்தானி
தோஸதோஸா அயங் பஜா
தஸ்மா ஹி வீததோஸேஸு
தின்னங் ஹோதி மஹப்பலங் 357

21. எல்லா தானத்தையும் சத்தர்மம் என்கிற தானம் வெல்கிறது. எல்லாச் சுவைகளையும் சத்தர் மத்தின் சுவை வெல்கிறது. சுத்தர்மத்தினால் உண்டா கிற இன்பம் மற்ற எல்லா இன்பங்களையும் வெல்கிறது. அவாவை அழிப்பதினாலே துக்கம் வெல்லப்படுகிறது.

22. சுகபோகங்கள் மூடர்களை அழிக்கின்றன. ஆனால், அது, எதிர் கரையை நாடுகிறவர்களை அழிப் பதில்லை. மூடர்கள், சுக போகங்ககளில் மேன்மேலும் ஆசை கொள்கிறபடியினாலே, மற்றவர்களால் அழிக்கப் படுவது போன்று, தங்களைத் தாங்களே அழித்துக் கொள்கிறார்கள். 355

23. வயல்களுக்கு களையானது அழிவை உண் டாக்குகிறது. மனிதர்களுக்குக் காம இச்சை (ராகம்) அழிவை உண்டாக்குகிறது. ஆகையால், காம இச்சை களை அழித்தவர்களுக்குத் தானம் செய்வது பெரும் புண்ணியத்தைத் தருகிறது. 356

24. வயல்களுக்குக் களைகள் அழிவை உண் டாக்குகின்றன. மனிதர்களுக்குப் பகைமை (துவேஷம்) அழிவைத் தருகிறது. ஆகையால், பகையில்லாதவர் களுக்குத் தானம் செய்வது பெரும் புண்ணியத்தைத் தருகிறது. 357

25. திணதோஸாணி கெத்தானி
மோஹயதாஸா அயங் பஜா
தஸ்மா ஹி வீதமோஹேஸு
தின்னங் ஹோதி மஹப்பலங் 358

26. திணதோஸாணி கெத்தானி
இச்சாதோஸா அயங்பஜா
தஸ்மா ஹி விகதிச்சேஸு
தின்னங் ஹோதி மஹப்பலங் 359

தண்ஹாவக்கோ சதுவீஸதிமோ

25. வயல்களுக்குக் களைகள் அழிவை உண்டாக்குகின்றன. மாயை (மோகம்), மனிதர்களுக்குத் தீமையை உண்டாக்குகிறது. ஆகையால், மோகம் அற்றவருக்குத் தானம் செய்வது பெரும் புண்ணியத்தைத் தருகிறது. 358

26. களைகள் வயலுக்குத் தீங்கை உண்டாக்குகின்றன. இச்சை, மனிதருக்குத் தீங்கை உண்டாக்குகிறது. ஆகையால், இச்சையற்றவருக்குத் தானம் செய்வது அதிக புண்ணியத்தைத் தருகிறது. 359

இருபத்துநான்காவது தண்ஹா வர்க்கம்

பிக்கு—வக்கோ

1. சக்குனா ஸங்வரோ ஸாது
ஸாது ஸோதேன ஸங்வரோ
காணேந ஸங்வரோ ஸாது
ஸாது ஜிவ்ஹாய ஸங்வரோ 360

2. காயேன ஸங்வரோ ஸாது
ஸாது வாசாய ஸங்வரோ
மனஸா ஸங்வரோ ஸாது
ஸாது ஸப்பத்த ஸங்வரோ
ஸப்பத்த ஸங்வுதோ பிக்கு
ஸப்பதுக்கா பமுச்சதி 361

3. ஹத்தஸஞ்ஞதோ பாதஸஞ்ஞதோ
வாசாய ஸஞ்ஞதோ ஸஞ்ஞதுத்தமோ
அஜ்ஜத்தரதோ ஸமாஹிதோ
ஏகோ ஸந்துட்டிதோ தமாஹு பிக்குங்

4. யோ முகஸஞ்ஞதோ பிக்கு
மந்தபாணீ அநுத்ததோ
அத்தங் தம்மஞ்ச தீபேதி
மதுரங் தஸ்ஸ பாஸிதங் 363

பிக்கு வர்க்கம்

1. கண்ணை அடக்குவது நல்லது. காதை யடக்குவது நல்லது. மூக்கை அடக்குவது நல்லது. நாவை அடக்குவது நலலது. 360

2. உடம்பை அடக்குவது நல்லது. வாக்கை அடக்குவது நல்லது. எல்லாவற்றிலும் அடக்கமாக இருக்கிற பிக்குவானவர், எல்லா துக்கங்களிலிருந்தும் நீங்குகிறார். 361

3. கை கால்களையும் வாக்கையும் அடக்கி, எல்லாவற்றிலும் அடக்கத்தை உடையவராய், சமாதியில் (தியானத்தில்) இன்பம் அடைந்து, திருப்தியாகவும் அமைதியாகவும் தனிமையாகவும் இருக்கிறவர் உண்மையான பிக்கு ஆவார். 362

4. நாவடக்கம் உள்ளவராய், இனிய சொற்களைப் பேசுகிறவராய், அடக்கமுள்ளவராய், தர்மோபதேசங்களைப் பாடம் சொல்லி உரைகூறுகிற பிக்குவின் வார்த்தைகள் இனிமையைத் தருகின்றன. 363

5. தம்மாராமோ தம்மரதோ
தம்மங் அனுவிசிந்தயங்
தம்மங் அனுஸ்ஸரங் பிக்கு
ஸத்தம்மா ந பரிஹாயதி 364

6. ஸலாபங் நாதிமஞ்ஞெய்ய
நாஞ்ஞேஸங் பிஹயங் சரே
அஞ்ஞேஸங் பிஹயங் பிக்கு
ஸமாதிங் நாதிகச்சதி 365

7. அப்பலாபோ'பி சே பிக்கு
ஸலாபங் நாதிமஞ்ஞதி
தங் வே தேவா பஸங்ஸந்தி
ஸுத்தாஜீவிங் அதந்திதங் 366

8. ஸப்பஸோ நாமரூபஸ்மிங்
யஸ்ஸ நத்தி மமாயிதங்
அஸதா ச ந ஸோசதி
ஸ வே பிக்கூ'தி வுச்சதி 367

5. தர்மோபதேசப்படி நடந்து, தர்மோபதேசத்தில் மனம் மகிழ்ந்து, தர்மோபதேசத்தை என்னேரமும் சிந்தித்துக்கொண்டு, தர்மத்தை மறவாமல் இருக்கிற பிக்கு, உண்மையில் தர்மத்திலிருந்து தவற மாட்டார். 364

6. பிக்குவாக உள்ள ஒருவர் தமது சொந்த லாபத்தை அலட்சியமாக எண்ணக்கூடாது. பிறருடைய ஊதியத்தைக் கண்டு பொறாமைப்படவும் கூடாது. மற்றவருடைய ஊதியத்தைக் கண்டு பொறாமைப்படுகிறவர் சமாதி (மனஅடக்கம்) பெறமாட்டார்.

7. பிக்கு ஒருவர், தன்னுடைய ஊதியம் சிறியதாக இருந்தாலும் அதை இகழாமல் இருப்பாரானால், தேவர்களும் அவரைப் புகழ்கிறார்கள். ஏனென்றால் அவருடைய வாழ்க்கை தூய்மையானதாகவும் ஊக்கமுள்ளதாகவும் இருக்கிறது. 366

8. எவ்விதத்திலும் அருவுருவை (நாமரூபங்களை) "என்னுடையது" என்று கருதாமலும் அவை உண்மையற்றவை என்று கருதி வருத்தம் அடையாமலும் இருக்கிற ஒருவர் பிக்கு எனப்படுகிறார். 367

9. மெத்தா விஹாரீ யோ பிக்கு
பஸந்நோ புத்தஸாஸனே
அதிகச்சே பதங் ஸந்தங்
ஸங்காரூபஸமங் ஸுகங் 368

10. ஸிஞ்ச பிக்கு இமங் நாவங்
ஸித்தா தே லஹுமெஸ்ஸதி
செத்வா ராகஞ்ச தோஸஞ்ச
ததோ நிப்பாணமேஹிஸி 369

11. பஞ்ச சிந்தே பஞ்ச ஜஹே
பஞ்ச சுத்தரி பாவயே
பஞ்ச ஸங்காதிகோ பிக்கு
ஓகதிண்ணோ'தி வுச்சதி 370

12. ஜாய பிக்கு! மா ச பமாதோ
மா தே காமகுணே பமஸ்ஸு சித்தங்
மா லோஹகுலங் கிலீபமத்தோ
மா கந்தி துக்கமிதந்தி டய்ஹமானோ

9. மைத்ரீ பாவனை செய்து, புத்தருடைய உபதேசங்களில் இன்பம் அடைகிற பிக்கு ஆனவர் எல்லாத் துன்பங்களிலும் நீங்கி சாந்தியாகிய உயர்ந்த நிலையை யடைகிறார். 368

10. ஓ பிக்குவே! கப்பல் காலியாக இருக்கிறது. நீ ஓடத்தைச் செலுத்தச் சுலபமா யிருக்கிறது. ராகத்துவேஷங்களை அறுத்து நிர்வாண மோக்ஷத்தைப் பெறுவாயாக. 369

11. ஐம்புலன்களையும் ஐந்து ஸஞ்ஞோஜனங்களையும் நீக்கி, (சிரத்தை, வீரியம், ஸ்திதி, சமாதி, பஞ்ஞா என்கிற) பஞ்சேந்திரியங்களை வளர்ப்பாயாக. இப்படிப்பட்ட பிக்கு ஆனவர், பிறவிக் கடலைக் கடந்தவர் என்று சொல்லப்படுகிறார். 370

12. பிக்குவே! சிந்தித்துப்பார். அசட்டையாயிராதே. காம எண்ணங்களில் உன் மனத்தைச் சுழல விடாதே. அசட்டைத் தனத்தினாலே, பழுக்கக் காய்ந்த நெருப்பைக்கக்கும் இரும்பு உருண்டைகளை விழுங்காதே. அது சுடும்போது "இது துக்கம்" என்று கதறாதே. 371

13. நத்தி ஜானங் அபஞ்ஞஸ்ஸ
பஞ்ஞா நத்தி அஜாயதோ
யம்ஹி ஜானஞ்ச பஞ்ஞா ச
ஸ வே நிப்பான ஸந்திகே 372

14. ஸுஞ்ஞாகாரங் பவிட்டஸ்ஸ
ஸந்தஸித்தஸ்ஸ பிக்குனோ
அமானுஸீ ரதீ ஹோதி
ஸம்மா தம்மங் விபஸ்ஸதோ 373

15. யதோ யதோ ஸம்மஸதி
கந்தானங் உதயப்பயங்
லபதீ பீதி பாமொஜ்ஜங்
அமதங் தங்விஜானதங் 374

16. தத்ராயமாதீ பவதி
இத பஞ்ஞஸ்ஸ பிக்குனோ
இந்த்ரியகுத்தி ஸந்துட்டி
பாதிமொக்கே ச ஸங்வரோ 375

13. ஞானம் (அறிவு) இல்லாதவருக்குத் தியானம் (மன அடக்கம்) இல்லை. தியானம் இல்லாதவருக்கு ஞானம் இல்லை. யார் தியானமும் ஞானமும் உள்ளவரோ அவர், மோக்ஷத்தின் அருகில் இருக்கிறார். 372

14. ஏகாந்த இடத்தில் வசித்து, மன அமைதி பெற்று, உலகத்தின் உண்மை நிலையைக் காண்கிற, நற்காட்சி அடைந்துள்ள பிக்கு ஆனவர், மனிதரால் காண முடியாத உயர்ந்த இன்பத்தை அடைகிறார். 373

15. ஸ்கந்தங்களின் வளர்ச்சி வீழ்ச்சிகளை எவ்வளவு நன்றாகச் சிந்தித்துப்பார்க்கிறாரோ அவ்வளவு அதிகமாக மகிழ்ச்சியையும் இன்பத்தையும் அடைகிறார். இதையறிந்தவர் பிறவாத் தன்மை யடைகிறார். 374

16. பிக்குகளுக்கு அடிப்படையான வாய்மொழி இதுவாகும் :— இந்திரியங்களை அடக்கு. திருப்தியாக இரு. (வினயபிடகத்தில் கூறப்பட்ட) பாதிமோக்க ஒழுக்கங்களைத் தவறாமல் நடத்து, ஊக்கத்தோடு இரு. தூய வாழ்க்கையுள்ளவரோடு நட்புக் கொள். 375

17. மித்தே பஜஸ்ஸு கல்யாணே
ஸுத்தாஜீவே அதந்திதே
படிஸந்தாரவுத்யஸ்ஸ
ஆசாரகுஸலோ ஸியா
ததோ பாமொஜ்ஜ பஹுலோ
துக்கஸ்ஸந்தங் கரிஸ்ஸஸி 376

18. வஸ்ஸிகா விய புப்பானி
மத்தவானி பமுஞ்சதி
ஏவங் ராகஞ்ச தோஸஞ்ச
விப்பமுஞ்சேத பிக்கவோ 377

19. ஸந்தகாயோ ஸந்தவாசோ
ஸந்தவா ஸுஸமாஹிதோ
வந்த லோகாமிஸோ பிக்கு
உபஸந்தோ'தி வுச்சதி 378

20. அத்தனு சோதயந்தானங்
படிமாஸே அத்தமத்தனு
ஸோ அத்தகுத்தோ ஸதிமா
ஸுகங் பிக்கு விஹாஹிஸி 379

17. வினயமாகவும் அன்பாகவும் இருக்கிறவர், மனமகிழ்ச்சியோடு துக்கத்தை நீக்குகிறார். 376

18. ஓ பிக்குகளே! மல்லிகைச் செடி வாடிய பூவை உதிர்த்து விடுவதுபோல, ஆசையையும் வெறுப்பையும் (ராகத்துவேஷங்களை) உதிர்த்து விடுங்கள். 377

19. உடல் அடக்கம், வாக்கு அடக்கம், மன அடக்கம் உடையவராய், இவற்றில் நன்கு பயின்று பாவங்களை நீக்கினவர் யாரோ அவர் "உபசந்தர்" என்று கூறப்படுகிறார். 378

20. புக்குகளே! "நான்" என்கிறதை நீங்களே ஆராய்ந்து பாருங்கள். அதை நீங்களே நீக்குங்கள். பிறகு, நீங்களே உங்களைக் காத்துக்கொண்டு சுகமாக வாழ்வீர்கள். 379

21. அத்தா ஹி அத்தனோ நாதோ
அத்தா ஹி அத்தனோ கதி
தஸ்மா ஸஞ்ஞமயத்தானங்
அஸ்ஸங் பத்ரங்'வ வாணிஜோ 380

22. பாமொஜ்ஜபஹுலோ பிக்கு
பஸந்நோ புத்தஸாஸனே
அதிகச்சே பதங் ஸந்தங்
ஸங்காரூபஸமங் ஸுகங் 381

23. யோ ஹவே தஹரோ பிக்கு
யுஜ்ஜதி புத்தஸாஸனே
ஸோ இமங் லோகங் பபாஸேதி
அப்பா முத்தோ'வ சந்திமா 382

பிக்குவக்கோ பஞ்சவீஸதிமோ.

21. ஒருவர் தானே தனக்குப் புகலிடமாம். ஒருவர் தானே தனக்கு எதிர்கால வாழ்க்கையை நியமிக்கிறார். ஆகையினாலே, குதிரை வாணிகர் உயர்ந்த இனத்துக்குதிரையை அடக்குவது போல, நீ உன்னிடமுள்ள "நான்" என்பதை அடக்கு. 380

22. மன உவகையோடு புத்தருடைய தர்மத்தில் உறுதியான நம்பிக்கை உடைய பிக்குவானவர், துக்கங்களை அறுத்து இன்பமான சாந்தி நிலையை அடைகிறார். 381

23. புத்தருடைய உபதேசங்களில் மனத்தைச் செலுத்துகிற இளைய பிக்குவானவர், மேகத்திலிருந்து வெளிப்பட்ட வெண்ணிலாவைப் போன்று, உலகத்தில் ஒளிவிட்டு விளங்குகிறார். 382

இருபத்தைந்தாவது பிக்குவர்க்கம்.

ப்ராஹ்மண—வக்கோ

1. சிந்த ஸோதங் பரக்கம்ம
காமே பநுத ப்ராஹ்மண
ஸங்காரானங் கயங் ஞத்வா
அகதஞ்ஞூ'ஸி ப்ராஹ்மண 383

2. யதா த்வயேஸு தம்மேஸு
பாரகூ ஹோதி ப்ராஹ்மணோ
அதஸ்ஸ ஸப்ப ஸங்யோகா
அத்தங் கச்சந்தி ஜானதோ 384

3. யஸ்ஸ பாரங் அபாரங் வா
பாராபாரங் ந விஜ்ஜதி
வீதத்தரங் விஸங்யுத்தங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 385

4. ஜாயிங் விரஜமாஸீனங்
கதகிச்ச மனுஸவங்
உத்தமத்தமனுப்பத்தங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 386

பிராமண வர்க்கம்

1. பிராமணா! ஆசையாகிய வெள்ளத்தை முயற்சியோடு நீக்கி, காம இன்பங்களை அகற்றிவிடு. ஸ்கந்தங்கள் முதலிய யாவும் அழிவுள்ளன என்பதை உணர்ந்தவர் நிர்வாண மோக்ஷத்தை அடைகிறார். 383

2. பிராமணன், இரண்டினையும்(யோகம் ஞானம்) நன்றாகச் செய்தால், அந்த அறிஞனுடைய பாசத்தளைகள் யாவும் மறைந்து விடுகின்றன. 384

3. யார் ஒருவருக்கு இந்தக் கரையும் அந்தக் கரையும் (புறப்புலன்கள் ஆறும், அகப்புலன்கள் ஆறும்) இல்லையோ, இருகரைகளும் இல்லாதவர் யாரோ, யார் புலன்களால் அசைக்கப்படாமல் இருக்கிறாரோ, யார் ஆசையை நீத்தாரோ அவர் பிராமணர் எனப்படுகிறார்.

4. யோகத்தில் இருந்து, குற்றங்களை நீக்கி, அமைதியாக இருந்து, கடமைகளைச் செய்து, காம இன்பங்களைத் துறந்து உயர்நிலை யடைந்தவர் யாரோ அவரை, நான் பிராமணன் என்று அழைக்கிறேன். 386

5. திவா தபதி ஆதிச்சோ
ரத்திங் ஆபாதி சந்திமா
ஸந்நத்தோ கத்தியோ தபதி
ஜாயீ தபதி ப்ராஹ்மணோ
அத ஸப்பமஹோரத்திங்
புத்தோ தபதி தேஜஸா 387

6. பாஹிதபாபோ'தி ப்ராஹ்மணோ
ஸமசரியா ஸமணோ'தி வுச்சதி
பப்பாஜயத்தனோ மலங்
தஸ்மா பப்பஜிதோதி வுச்சதி 387

7. ந ப்ராஹ்மணஸ்ஸ பஹரெய்ய
நாஸ்ஸ முஞ்சேத ப்ராஹ்மணோ
தீ ப்ராஹ்மணஸ்ஸ ஹந்தாரங்
ததோ தீ யஸ்ஸ முஞ்சதி 389

8. ந ப்ராஹ்மணஸ்ஸேதத கிஞ்சி
ஸெய்யோ
யதா நிஸேதோ மனஸோ பியேஹி
யதோ யதோ ஹிங்ஸமனோ நிவத்ததி
ததோ ததோ ஸம்மதிமேவ துக்கங்

5. பகலில் சூரியன் ஒளி கொடுக்கிறான். இரவில் நிலா வெளிச்சந் தருகிறது. போர் வீரர் கவசங்களினால் விளங்குகிறார்கள். பிராமணன் தியானத்தினால் விளங்குகிறான். புத்தர், தமது ஞானத்தினாலே இரவும் பகலும் விளங்குகிறார். 387

6. தீமைகளை நீக்கினவர் பிராமணர் ஆகிறார். நீதியாக நடக்கிறவர் சமணர் ஆகிறார். தன்னுடைய அழுக்குகளைத் (குற்றங்களைத்) தாமே நீக்கிக் கொண்டவர் பப்பஜிதர் ஆகிறார். 388

7. யாரும் பிராமணனை அடிக்கக்கூடாது. அடிக்கப்பட்டால் பிராமணன் கோபிக்கக் கூடாது. பிராமணனை அடிக்கிறவன் வெட்கப்படவேண்டும். அடிக்கிறவனைக் கோபிக்கிற பிராமணனும் வெட்கப்படவேண்டும். 389

8. தன் மனதிற்குப் பிரியமானவற்றை (ஆசை எண்ணங்களை) நீக்குகிற பிராமணன், சிறிய நன்மையடையவில்லை. (பெரிய நன்மையை யடைகிறான்). இம்சை செய்யாமல் இருக்கிறவன், அவ்வளவும் துக்கத்திலிருந்து நீங்குகிறான். 390

9. யஸ்ஸ காயேன வாசாய
மனஸா நத்தி துக்கதங்
ஸங்வுதங் தீஹி டானேஹி
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 391

10. யம்ஹா தம்மங் விஜானெய்ய
ஸம்மா ஸம்புத்த தேஸிதங்
ஸக்கச்சங் தங் நமஸ்ஸெய்ய
அக்கிஹுத்தங்'வ ப்ராஹ்மணோ 392

11. ந ஜடாஹி ந கொத்தேன
ந ஜச்சா ஹோதி ப்ராஹ்மணோ
யம்ஹி ஸச்சஞ்ச தம்மோச
ஸோ ஸுசீ ஸோ ச ப்ராஹ்மணோ

12. கிங் தே ஜடாஹி தும்மேத
கிங் தே அஜினஸாடியா
அப்பந்தரங் தே கஹணங்
பாஹிரங் பரிமஜ்ஜஸி ? 394

9. மனம் வாக்கு காயங்களினுல் தீய காரியங்களைச் செய்யாமல், இம்மூன்றினையும் அடக்கி ஆள்கிறவர் யாரோ அவரை, நான் பிராமணன் என்று அழைக்கிறேன். 391

10. புத்தர் உபதேசித்த தர்மோபதேசத்தை யாரிடத்திலாயினும் ஒருவர் கேட்டு அறிவாராஞல், அவரை, பிராமணர் நெருப்பை வணங்குவதுபோல, வணங்கவேண்டும். 392

11. மயிரைச் சடையாக வளர்ப்பதினுலோ, பிறப்பினுலோ, கோத்திரத்தினுலோ ஒருவர் பிராமணன் ஆகமாட்டார். யாரிடத்தில் உண்மையும் தர்மமும் இருக்கிறதோ அவரே தூய்மையானவர். அவர்தான் பிராமணர் ஆவார். 393

12. ஒ தூர்த்தனே! உன்னுடைய சடைமுடியினுல் பயன் என்ன? உன்னுடைய மான் தோலினுல் பயன் என்ன? உன்னுடைய மனத்தில் (ஆசையாகிய) காடு இருக்கிறது. புறத்தை மட்டும் (உடம்பை மட்டும்) சுத்தம் செய்கிருய். 394

13. பங்ஸுகூலதரங் ஜந்துங்
கிஸங் தமனிஸந்ததங்
ஏகங் வனஸ்மிங் ஜாயந்தங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 395

14. ந சாஹங் ப்ராஹ்மணங் ப்ரூமி
யோநிஜங் மத்திஸம்பவங்
போவாதி நாம ஸோ ஹோதி
ஸசே ஹோதி ஸகிஞ்சனோ
அகிஞ்சன மனாதானங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 396

15. ஸப்பஸங்யோஜனங் செத்வா
யோ வே ந பரிதஸ்ஸதி
ஸங்காதிகங் விஸஞ்ஞுத்தங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 397

16. செத்வா நத்திங் வரத்தஞ்ச
ஸந்தாமங் ஸஹனுக்கமங்
உக்கித்த பலிகங் புத்தங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 398

13. கந்தைகளை ஆடையாக உடுத்து, உடல் மெலிந்து காட்டில் தன்னந்தனியே தியானம் செய்கிற அவரை நான் பிராமணன் என்று கூறுகிறேன். 395

14. தாயின் வயிற்றில் கருவாகக்கிடந்து பிறக்கிறவரை பிராமணன் என்று கூறமாட்டேன். கிஞ்சனம்* (செல்வம்) உடையவராக இருப்பதால் அவரை "ஐயன் என்று அழைக்கலாம். பொருட் பற்றுக்களை விட்டவர் யாரோ, ஆசையை விட்டவர் யாரோ அவரைப் பிராமணன் என்று அழைக்கிறேன். 396

15. ஆசைத்தளைகளை எல்லாம் அறுத்து அச்சம் இல்லாமல் இருக்கிறவர் யாரோ, எல்லாப் பற்றுக்களையும் நீக்கி உலக இச்சைகளை விட்டவர் யாரோ அவரையே பிராமணன் என்று அழைக்கிறேன். 397

16. (பகை என்கிற) வாரையும் (ஆசை என்கிற) விலங்கையும் (நிந்தனை என்கிற) கயிற்றையும் (அஞ்ஞானம் என்கிற) தடைகளையும் அறுத்த ஞானியானவர் யாரோ அவரையே நான் பிராமணன் என்று அழைக்கிறேன். 398

---

* கிஞ்சனம் என்பதற்குச் செல்வம் என்றும் ஆசை என்றும் இரண்டு பொருள் உள்ளன. இங்கு இச்சொல் சிலேடையாகக் கூறப்படுகிறது.

17\. அக்கோஸங் வதபந்தஞ்ச
அதுட்டோ யோ திதிக்கதி
கந்தீபலங் பலாணீகங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 399

18\. அக்கோதனங் வதவந்தங்
ஸீலவந்த மனுஸ்ஸுதங்
தந்தங் அந்திம ஸாரீரங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 400

19\. வாரி பொக்கரபத்தே'வ
ஆரக்கேரிவ ஸாஸபோ
யோ ந லிப்பதி காமேஸு
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 401

20\. யோ துக்கஸ்ஸ பஜானாதி
இதேவ கயமத்தனோ
பன்னபாரங் விஸங்யுத்தங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 402

17. நிந்தனைகளையும் அடிகளையும் சிறையிடுவதையும் மனத்தாங்கல் இல்லாமல் பொறுத்துக் கொண்டு, பொறுமையையே தனது சேனையாகக் கொண்டுள்ளவர் யாரோ அவரையே பிராமணன் என்கிறேன். 399

18. கோபத்தைவிட்டு, தன் கடமையைச் செய்து, ஞானம் உள்ளவராய் ஆசையற்று அடக்கமாய் இருந்து, இதையே கடைசி உடம்பாகக் கொண்டிருப்பவர் யாரோ அவரையே பிராமணன் என்று அழைக்கிறேன். 400

19. தாமரை இலையில் தண்ணீர் போலவும், துரைப்பணம் (துளைப்பாணம்) நுனியில் கடுகைப் போலவும், காம சுகங்களில் பற்று விட்டவர் யாரோ அவரையே பிராமணன் என்று அழைக்கிறேன். 401

20. தன்னுடைய (பாவச்) சுமைகளைத் தள்ளிப் போட்டு, உலகப் பற்றுக்களை நீக்கி, இப்பிறப்பிலேயே துக்கங்களை நீக்கிவிட்டவர் யாரோ அவரையே பிராமணன் என்று அழைக்கிறேன். 402

21. கம்பீர பஞ்ஞங் மேதாவிங்
மக்காமக்கஸ்ஸ கோவிதங்
உத்தமத்தமனுப்பத்தங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 403

22. அஸங்ஸட்டங் கஹட்டேஹி
அநகாரேஹி சூபயங்
அநோக ஸாரிங் அப்பிச்சங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 404

23. நிதாய தண்டங் பூதேஸு
தஸேஸு தாவரேஸு ச
யோ ந ஹந்தி ந காதேதி
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 405

24. அவிருத்தங் விருத்தேஸு
அத்ததண்டேஸு நிப்புதங்
ஸாதாநேஸு அநுதானங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 406

21. முழு ஞானம் பெற்று அறிஞராகி, நன்மையும் தீமையும் ஆன மார்க்கங்களை நன்கறிந்து, அர்ஹந்த நிலையை அடைந்தவர் யாரோ அவரையே பிராமணன் என்று அழைக்கிறேன். 403

22. இல்லறத்தாரோடும் சந்நியாசிகளோடும் கலக்காமல், துறவறம் பூண்டு, தனக்கென்று ஒன்றையும் வேண்டாதவர் யாரோ அவரையே பிராமணன் என்று கூறுகிறேன். 404

23. எந்தப் பிராணியையும் அடித்துத் துன்புறுத்தாமலும் கொல்லாமலும் கொல்லச் செய்யாமலும் இருக்கிறவர் யாரோ அவரை நான் பிராமணன் என்று அழைக்கிறேன். 405

24. பொறுமை இல்லாதவரிடத்தில் பொறுமை டையவராகவும் துன்பப்படுத்துகிறவர் இடத்தில் புள்ளவராகவும், அவா உள்ளவர்கள் இடையே அற்றவராகவும் யார் இருக்கிறாரோ அவரையே பிரா[illegible]ணன் என்று அழைக்கிறேன். 406

25. யஸ்ஸ ராகோ ச தோஸோ ச
மானோ மக்கோ ச பாதிதோ
ஸாஸபோரிவ ஆரக்கா
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 407

26. அககக்கஸங் விஞ்ஞபநிங்
கிரங் ஸச்சமுதீரயே
யாய நாபிஸஜே கஞ்சி
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 408

27. யோ'த தீகங் வ ரஸ்ஸங் வா
அணுங் தூலங் ஸுபாஸுபங்
லோகே அதின்னங் நாதியதி
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 409

28. ஆஸா யஸ்ஸ ந விஜ்ஜந்தி
அஸ்மிங் லோகே பரம்ஹி ச
நிராஸயங் விஸஞ்ஞுத்தங்
ததஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 410

25. துரைப்பணத்தின் (துளைப்பாணம்) நுனியிலிருந்து கடுகு நழுவிப் போவதைப் போன்று, சினம், பகை, இறுமாப்பு, பொறாமை ஆகிய தீய குணங்கள் யாரிடத்திலிருந்து போய்விட்டனவோ, அவரையே பிராமணன் என்று கூறுகிறேன். 407

26. உண்மை பேசி, இனிய வார்த்தைகளைச் சொல்லி, நல்லதைப் போதித்து, கடுமொழி கூறாதவர் யாரோ, அவரையே பிராமணன் என்று கூறுகிறேன்.

27. இவ்வுலகத்திலே நீண்டதாயினும் குட்டையாயினும், பெரியதாயினும் சிறியதாயினும், நல்லதாயினும் கெட்டதாயினும் யாதொரு பொருளையும் களவு செய்யாதவர் யாரோ, அவரையே பிராமணன் என்று கூறுகிறேன். 409

28. இவ்வுலகத்திலாயினும், மறு உலகத்திலாயினும் எதையும் விரும்பாமல், ஆசையற்று, பற்றுக்களை விட்டவர் யாரோ, அவரையே நான் பிராமணன் என்கிறேன். 410

29. யஸ்ஸாலயா ந விஜ்ஜந்தி
அஞ்ஞாய அகதங் கதீ
அமதோகத மனுப்பத்தங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 411

30. யோ'த புஞ்ஞஞ்ச பாபஞ்ச
உபோ ஸங்கமுபச்சகா
அஸோகங் விரஜங் ஸுத்தங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 412

31. சந்தங்'வ விமலங் ஸுத்தங்
விப்பஸந்நமனாவிலங்
நந்தீபவபரிக்கீணங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 413

32. யோ இமங் பலிபதங் துக்கங்
ஸங்ஸாரங் மோஹமச்சகா
திண்ணோபாரகதோ ஜாயீ
அநேஜோ அகதங் கதீ
அனுபாதாய நிப்புதோ
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங்

29. அவாவை அறுத்து, மெய்யை உணர்ந்து ஐயங்களை நீக்கி, இறவாத நிலையை அடைந்தவர் யாரோ, அவரையே நான் பிராமணன் என்று கூறுகிறேன். 411

30. புண்ணிய பாவங்களை விலக்கி, மாசுகளையும் துக்கங்களையும் துடைத்து, தூய்மையாக இருப்பவர் யாரோ, அவரையே நான் பிராமணன் என்கிறேன். 412

31. வெண்ணிலாவைப் போன்று தூய்மையராய் களங்கம் இல்லாமலும், பாவம் இல்லாமலும், அமைதியாகவும் இருந்து, பிறவியை உண்டாக்குகிற அவாவை அழித்தவர் யாரோ, அவரையே பிராமணன் என்று கூறுகிறேன். 413

32. பிறப்பு இறப்பு என்னும் சம்சாரத்தையும் மோகத்தையும் உடைய, கடத்தற்கு அரிய இந்தச் சேற்று வழியைக் கடந்து அப்பாலே இருக்கிற அந்தக் கரையைச் சேர்ந்து, தியானத்தில் அமர்ந்து, ஐயமும் ஆசையும் நீங்கி, ஒன்றிலும் பற்று இல்லாமல், நிர்வாண மோக்ஷத்தை யடைந்தவர் யாரோ, அவரையே நான் பிராமணன் என்று கூறுகிறேன். 414

33. யோ'த காமே பஹத்வான
அனகாரோ பரிப்பஜே.
காமபவ பரிக்கீணங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 415

34. யோ'த தண்ஹங் பஹத்வான
அனகாரோ பரிப்பஜே
தண்ஹாபவ பரிக்கீணங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 416

35. ஹித்வா மானுஸகங் யோகங்
திப்பங் யோகமுபச்சகா
ஸப்பயோக விஸங்யுத்தங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 417

36. ஹித்வா ரதிங் அரதிஞ்ச
ஸீதிபூதங் நிருபதிங்
ஸப்பலோகாபிபுங் வீரங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 418

33. இவ்வுலகத்திலே, காம ஆசைகளை விட்டு, இல்லறத்தை நீக்கித் துறவுபூண்டு, பற்றுக்களைவிட்டு, பிறவா நிலையை அடைந்தவர் யாரோ, அவரையே நான் பிராமணன் என்று கூறுகிறேன். 415

34. இவ்வுலகத்திலே, அவாவை (த ண் ஹ ா) நீக்கி, இல்லறத்தை விட்டுத் துறவு பூண்டு, ஆசையை யறுத்துப் பிறவா நெறியைக் க ண் ட வ ர் யாரோ, அவரையே நான் பிராமணன் என்று கூறுகிறேன். 416

35. மனித உலகத்துப் பற்றுக்களையும், தேவ லோகத்துப் பற்றுக்களையும், எல்லாவிதமான பற்றுக் களையும் யார் ஒருவர் நீக்கினாரோ, அவரையே நான் பிராமணன் என்று கூறுகிறேன். 417

36. சந்தோஷம் துக்கம் இரண்டையும் நீக்கி, ஆறுதல் அடைந்து, பிறப்பினை உண்டாக்கும் பற்றுக் களை அழித்து, உலகத்தை வென்ற வீரனாக இருக்கிற வர் யாரோ, அவரையே பிராமணன் என்று கூறுகி கிறேன். 418

37. சுதிங் யோ வேதி ஸத்தானங்
உபபத்திஞ்ச ஸப்பஸோ
அஸத்தங் ஸுகதங் புத்தங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 419

38. யஸ்ஸ கதிங் ந ஜானந்தி
தேவா கந்தப்பமானுஸா
கிணாஸவங் அரஹந்தங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 420

39. யஸ்ஸ புரே ச பச்சா ச
மஜ்ஜே ச நத்தி கிஞ்சனங்
அகிஞ்சன மனாதானங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 421

40. உஸபங் பவரங் வீரங்
மஹேஸிங் விஜிதாவினங்
அனேஜங் நஹாதகங் புத்தங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 422

37. பிறப்பு இறப்புக்களின் தன்மையை எல்லா விதத்தினும் நன்கறிந்து, எவ்விதப் பற்றுக்களும் இல்லாமல், நன்னெறியில் சென்று ஞானம் அடைந்தவர் யாரோ, அவரையே பிராமணன் என்று கூறுகிறேன். 419

38. தேவராலும் கந்தர்வராலும் மானிடராலும் அறிய முடியாத நிலைக்குச் செல்கின்றவரும், எல்லாக் குற்றங்களையும் அழித்துவிட்டவரும், அர்ஹந்தராக இருப்பவரும் யாரோ, அவரையே பிராமணன் என்கிறேன். 420

39. முன்பும் பின்பும் இப்போதும் பற்றுக்கள் இல்லாமல், உலக ஆசைகளை விட்டுப் பற்றற்றவர் யாரோ, அவரையே பிராமணன் என்று கூறுகிறேன்.

40. உயர்ந்தவரும், தலைவரும், வீரரும், பெரியவரும், வெற்றியுள்ளவரும், ஆசையற்றவரும், பாவங்களைப் போக்கினவரும், ஞானம் பெற்றவரும் ஆக இருப்பவர் யாரோ, அவரையே பிராமணன் என்று அழைக்கிறேன். 422

41\. புப்பேநிவாஸங் யோ வேதி
ஸக்காபாயஞ்ச பஸ்ஸதி
அதோ ஜாதிக்கயங் பத்தோ
அபிஞ்ஞாவோஸிதோ முனீ
ஸப்பவோஸித வோஸானங்
தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங் 423

ப்ராஹ்மண வக்கோ சப்பீஸதிமோ

தம்மபதங் நிட்டிதங்

41. தன்னுடைய பழைய பிறப்புக்களை அறிந்தவரும், சுவர்க்க நரகங்களின் இயல்பை நன்கு அறிந்தவரும், பிறவிகளைக் கடந்தவரும், அறிவு நிறைந்தவரும், தம்மை முனிவராக்கிக் கொண்டவரும், நிர்வாண மோக்ஷ நிலையை யடைந்தவரும் யாரோ, அவரையே பிராமணன் என்று அழைக்கிறேன். 423

இருபத்தாறுவது பிராமணவர்க்கம்

தம்மபதம் முற்றிற்று.

Rev. Bhikkhu N. Somananda's
(Maha Bodhi Ashram, Madras)
Publications can be had of

K. S. AIYAR'S
(Book-sellers & Publishers)
177, Royapettah High Road,
Madras 14, India.